


# முரண்பாடுகளின் அறுவடை





பொன்னரி

கோகிலா மகேந்திரன்

# முரண்பாடுகளின் அறுவடை

கோகிலா மகேந்திரன்

சிவன் கல்வி நிலைய வெளியீடு

**Muranpadugalin Aruvadai**

Short Stories in Tamil by

**Kohila Mahendran**

(C) THE AUTHOR

*Publishers :*

Sivan Kalvi Nilayam

Viliciddy,

Tellippalai.

*Cover Painting :*

S. Kanagasingam

*First Edition* - February 1984

*Price Rupees :* Sixteen

# கோகிலாவின் சிறுகதைகளும் நானும்

- கனகசபாபதி நாகேஸ்வரன் -

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துத் தமிழ்ச் சேவை ஒன்றிலே நிகழ்ச்சி அட்டவணை ஒன்றினைச் 'சிறுகதை' நிகழ்ச்சிக்கெனத் தயாரித்து மேலிடத்துக்குச் சேர்ப்பிக்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஒலிபரப்புக்கென அனுப்பப்பட்டிருந்த தொகுதியில் பல்வேறு பிரதேசம் சார்ந்தவையாயும், பழைய புதிய சிருஷ்டியாளர்களுடையவையாயும் அமைந்த சிறுகதைகளை ஒரு மூச்சில் படிக்கும் வாய்ப்பும் கிடைத்தது. சிறுகதைக் கட்டினுள் இரண்டு மூன்று கதைகள் கோகிலா மகேந்திரனுடையவை.

1975இல் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியிலே பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு மாணவனாயிருந்தபோது 'சங்கமம்' பெயர் கொண்ட 'கலை இலக்கிய அறிவியல் இதழ்' இணையாசிரியர்களில் ஒருவனாகிக் குழுவினரின் உடன்பாட்டுடன், 'விழி' என்று புனைபெயரில், 'அவன் ஏன் வாழ்கிறான்?' என்ற மகுடத்தில், கோகிலா சிவசுப்பிரமணியம் அவர்களின் சிறுகதையொன்றினைப் பிரசுரமாக்கினோம். அன்று முதல் கோகிலா அவர்கள் எமது இலக்கிய முயற்சிகளின் போதெல்லாம் நினைக்கப்படுபவரானார். இலங்கை வானொலியில் இவரது கதைகளிற் சில ஒலிபரப்பாகியுள்ளன.

இலக்கியப் பண்புண்டா? இவையும் கலா சிருஷ்டிகளா? எழுத்தில் உணர்ச்சி, யதார்த்தம், பாத்திர முழுமை, ஆசிரியரது அனுபவம், சமூகப் பார்வை, எழுத்துநடை என்றெல்லாம் விமர்சகர்கள், பேராசிரியர்கள், முற்போக்காளர்கள், இலக்கியம் பேணும் புத்திஜீவிகள் கூறும் நலனாய்தல் நாகரிகங்களையெல்லாம், இங்கு கோகிலாவின் கதைகளில் பிரயோகித்துக் குத்திக் கீறிக் கிழித்துப் பார்ப்பது எனது நோக்கமல்ல. அவ்வாய்வின் சகாப்தம் முடிந்துவிட்டதாகவே இருக்கட்டும், ஆனால் கோகிலா எப்படி எழுதுகிறார்? ஏன் எழுதுகிறார்? அவரது எழுத்தில் ஏன் எமக்கு ஈடுபாடு ஏற்படுகிறது? என்பவைகளை மட்டும் ஒரு சில கதைகளினூடே பொதுமையாகக் கண்டு உரைப்போம்.

மனித சொரூபங்கள் என்ற முதற் பன்னிரு கதைகளின் தொகுப்பினூடே இக் கதாசிரியர் தமது 'ஜீவனைப் படிப்போர்க்குக் காட்டிவிட்டார் என்று கூறுவதில் தவறில்லை. உயர்வு நவிற்சியுமல்ல.

இலக்கியப் படைப்பில் 'மேதைமைப் பண்பு' எழுத்துக்களினூடே உள்ளுறைந்திருக்கும் ஒரு கதாசிரியர் கோகிலா. கவிதையையும் சிறு கதையினையும் எல்லாருமே படைத்துவிட முடியும்

என்று நினைப்பது வெறும் அபத்தம். மாறாக இலக்கியப் பயிற்சியும் மொழி ஆளுமையும் திரண்டு அனுபவத்தின் மெருகுடனும் லாவகமான மொழி வீச்சுடனும் முகிழ்க்கும்போது அது மனதை வருடும் கலைப் படைப்பாகின்றது. அவ்வாறான படைப்பே இலக்கிய இன்பம் துய்க்க ஈர்த்து விடுகின்றது. கோகிலாவின் படைப்புக்கள் இத்தகையனவே!

ஈழத்து இலக்கிய வளர்ச்சி வரலாற்றிலே, இன்று ஒரு புதிய சக்தியின் ஆரம்பம் துல்லியமாகத் தெரிகின்றது. இதன் அடிப்படையே 'இலக்கிய ஆசிரியர்களின் சுதந்திரம்' என்று தூணிலே எழுவதாயிருக்கின்றது. இலக்கிய மேலாதிக்கத் தடைகளின் பிடியிலிருந்து விடுபட்ட ஒரு விசாலமான தடத்திலே கோகிலாவின் சிறு கதைகள் ஆக்கப்படுகின்றன என்ற உண்மையினை இன்று நாம் ஆழமாக உணர்ந்து கொள்ள வேண்டும். 'இலக்கியப் பாகுபாடு'. 'இலக்கிய பேதம்', 'இலக்கியத்தில் கொச்சை' மங்கிப்போகும் காலத்திலே நமது மண்ணிலே கால் கொள்ளும் நல்லெழுத்துக் களாகவே கோகிலாவின் சிறு கதைகளைக் கொள்ளவேண்டும். சிறு கதைகளிலே கதைக்கரு, களம், பாத்திரங்கள் எல்லாமே தன்னைச் சுற்றியுள்ளனவாகவும், தான் சார்ந்ததாகவும் காணப்படுவதே உண்மை இலக்கிய கர்த்தாவின் படைப்பாற்றலுள் தலையாயதாகும். உள்ளத்தினது அல்லது அடிமனதினது நிகழ்வுகளை, அபிலாசைகளை மனித நேயத்தோடும் தன்னனுபவமாகவும் சொல்ல முனையும்போது அதிலே வாசகனது மனம் கௌவிப் பிடிக்கிறது. இப்பண்புகளினடியாகப் பிறக்கும் சிறு கதைகளே கோகிலாவின் ஆக்கங்களாகும்.

நூலாக்க நோக்கமாகவும், சிறுகதைப் போட்டிகளுக்காகவும் எழுதப்படும் சிறு கதைகளுக்கும் வானொலியில் ஒலிபரப்பாகும் சிறு கதைகளுக்குமிடையில் சிற்சில பேதங்களைக் காணலாம்.

வானொலிச் சிறுகதை ஆக்கங்களில் எடுத்தலோசை, படுத்தலோசை, வினாக்கள், கண்டனங்கள், செப்பலோசை என்பன பற்றிச் சற்று விழிப்பாக இருக்க வேண்டியதாகிறது. அவ்வாறில்லாது போனால் நிகழ்ச்சி 'சப்'பென்றாகிவிடும். ஆகவே வானொலித் தெரிவில் 'மொழி நடை' விகற்பங்கள் பெரிதும் வேண்டப்படுகின்றது. மொழியாற்றலின் அதியுயர்ந்த பிரயோகத்திறனும் சிருஷ்டியினூடே வேண்டப்படுகின்றது. இன்னும் சொல்லப் போனால் மொழியியலின் கல்விப் பின்னணியில் 'ஒலி'களின் பெறுமானமும் கருத்திலிருத்தியிருக்க வேண்டும். இவை அனைத்தும் கோகிலாவின் கதைகளில் பூரணத்துவமாக - நூற்றுக்கு நூறு வீதம் நிறைந்துள்ளனவென்று சொல்வதற்கில்லையாயினும், பிற கதாசிரியர்களோடும் அவர்களது கதைகளோடும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது பெறுமதி வாய்ந்தனவாகத் திகழ்கின்றன. இப் பண்பினடியாகவே கோகிலாவின் சிறுகதைகள் ஒலிபரப்புக்குட்படுகின்றன.

பாத்திரங்களின் தொடர்ந்த பேச்சும், அகவலாகவே சம்பவங்களை எடுத்துச் சொல்லும் உரைநடைப் போக்கும் ஒலிபரப்பிலே கேட்போரைப் பிணிக்கா. மாறாகத் தர்க்க ரீதியான வாதமாகவோ, முரண்பட்ட பாத்திரங்களின் சம்பாஷணைகளாகவோ, வினாவாகவோ அமையுமிடத்திலேதான் ஒலிபரப்புக்கான கதைகள் முன்னெழுகின்றன. இக் கதாசிரியர் ஓர் ஆசிரியை என்பதனாலோ என்னவோ இயல்பாகவே வினாவாக்கிய அமைப்பு முறைமையைக் கையாள்வதால் அது ஒலி நோக்கில் உயர்வடைகிறதென்பேன். இன்னும் ஒரு தகைமை இவர் விஞ்ஞான ஆசிரியை என்பதாகும்.

காதலே கதைக் கருப்பொருள். அதை விட்டால் சாதி, சீதனம், விபச்சாரம் இப்படியும் கதாசிரியர்கள். குறிப்பிட்ட பிரச்சினையில்தான் சிறுகதை எழுதுவேன், இல்லாவிட்டால் எழுத வராது என்ற தோரணையில் கருத்தேடியலைபவர்கள் பலர். கருத்தேடிப் பிடித்துக் கதை படைப்பவர்கள் சிறு கதையாளரல்லர். சிறியதொரு உணர்வே கதை படைக்கப் போதுமானது. உளவியல் கைவந்தவர்கள் இதனைச் சாதிக்கின்றனர். கோகிலாவின் உளவியல் நோக்கு அவரது சிறு கதைகளுக்கு அணி செய்து நிற்கின்றது. 'தானறியாத எதையும் தேடுவது', 'உண்மையைத் துருவித் துருவி ஆராய்வது', 'வினாவெழுப்புதல் மூலம் விடைகாணத் துடிப்பது', 'விஞ்ஞான உண்மைகளின் உதாரணங்களினால் விடயங்களை இலகுவில் புரிய வைப்பது' போன்ற கோகிலாவின் உத்திகள் இலக்கிய உலகிலே புதிய போக்காகின்றன. வானொலிக்கென எமக்குக் கிடைக்கும் சிறு கதைகளில் இத்தகு சிறப்புடைப் பண்புகள் கொண்ட சிறுகதைகள் கோகிலா எழுதியவையாகும்.

எழுத்தைத் தொழிலாகவுடையவர்கள் தமது எழுத்தின் மூலம் எதையோ சொல்லத் துடிப்பவர்கள். மனித உள்ளத்தை மெருகுபடுத்துவர்கள். ஏக்கங்களையும் துயரங்களையும் ஆபத்துக் களையும் சங்கோசங்களையும் எதிர்கொண்டு அவற்றையெல்லாம் சகித்துக் கொள்ளும்படியான மனோபக்குவ நிலையை ஏற்படுத்துப வர்கள். மனிதக் குணாதிசயங்களைப் பெறுமதி மிக்கதென மதித்து நடக்குமியல்பினர். ஆதலால்தான் இவர்கள் உயர்ந்த கலைஞர்கள். உரத்த சிந்தனையாளர்கள். இப் பண்புகள் கோகிலா மகேந்திரனுக்கு அவரது சிறு கதைகளினாலே பொருத்தமுறுகின்றன என்பதனை அவரது கதைகளைப் பொழுதுபோக்காகப் படிப்பவர்களும் அறிந்துகொள்ள முடியும்.

சிறு கதைகள் விஞ்ஞானக் கட்டுரைகள் அல்ல. மனமுறிவை ஏற்படுத்தவல்ல வீரதீர சாகச அனுபவங்களைச் சொல்லும் ஆக்கங்களுமல்ல. ஆனால் நையாண்டிப் பண்புடனும், நகைச்சுவை மிளிரவும் உள்ளூரச் சிரித்திருக்கவும், பேச்சோசையை அனுபவிக்கவும்

இடம் தருகின்ற மகிழ்வூட்டும் இலக்கிய வடிவமாகவும் விளங்குகின்றன என்பதற்குக் கோகிலாவின் கதைகள் நல்லுதாரணங்களாகும். இவரது கதைகளில் கதைக் கட்டுக்கோப்பும், கட்டிறுக்கமும் பொதுப் பண்புகள்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி கல்வியுலகிலும், இலக்கிய உலகிலும், சமயத்துறையிலும் உதைபந்தாட்டம், விளையாட்டுப் போன்ற பிற துறைகளிலும் தனக்கெனவொரு உயர் நிறுவுகையை, உன்னத புகழைக் கொண்ட நிறுவனமாகும். பழந்தமிழிலக்கியப் பயிற்சியும், படைப்பாற்றலும், புலமையுங் கொண்ட அறிஞர் திரு. த.சண்முகசுந்தரம் அவர்கள் தலைமையில் சேவை புரியும் ஆசிரியப் பெருமக்கள் குழாத்தினருள் விஞ்ஞான ஆசிரியையாகப் பணியாற்றுபவர் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள். மகாஜனாக் கல்லூரி ஈன்றெடுத்த புகழ்பெற்ற இலக்கியவாதிகள் ஈழத்திலக்கியத்தில் முத்திரை பதித்துள்ளனர். பாரதி வழிவந்த கவிஞர் தெல்லிப்பழைப் பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளையவர்களது செழுமை மிகு நீழலிலே, தற்காலச் சிறுகதைகளைப் படைத்தளிக்கும் கோகிலா மகேந்திரனது எழுத்துப் பணியும் மகாஜன மாதாவை மகிழ்விக்கவே செய்யும். பழைய மாணவர்கள் வாழ்த்துகிறார்கள். சக ஆசிரியர்கள் பெருமை கொள்கிறார்கள். இலக்கியத் தடம் நேர்வழி செல்ல மகாஜனாவின் வழிகாட்டலும் பங்களிப்பும் இன்று அவசியமாகிறது. தமது இலக்கிய முயற்சிகளினால் மாணாக்கர்களுக்கு ஒரு திசையறி கருவியாகக் கோகிலா திகழுவார் என்றே நம்புகிறேன்.

தனது சிறுகதைத் தொகுப்பிற்கு என்னை ஒரு கருத்துரை தருமாறு அன்புடன் கேட்டமைக்கு எனது அன்பும் பணிவும் கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஈழத்து இலக்கிய உலகிலும் தமிழ் கூறும் நல்லுலகிலும் என்றென்றும் நிலைக்கத் தக்க சிரஞ்சீவித்துவமான இலக்கியச் சிறுகதைகளைப் படைத்துப் புகழ்பெற வேண்டும் என வாழ்த்துக் கூறுவதோடு அன்னாரது எழுத்து முயற்சிகளனைத்திற்கும் துணை நின்று நலமளிக்கும் வண்ணம் சிவகாம சமேத ஆனந்த நடராஜப் பெருமானது பாதார விந்தங்களைத் தொழுது பிரார்த்திக்கின்றேன்.

# என்னுரை

என்னைப் பற்றியும் எனது எழுத்துக்களைப் பற்றியும் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பது எவ்வளவு முக்கியமோ அதேயளவு அல்லது அதைவிட நான் என்னைப் பற்றியும் எனது எழுத்துக்களைப் பற்றியும் (Selfesteem) என்ன நினைக்கிறேன் என்பது முக்கியமானது. நான் எதை நினைக்கிறேனோ அதுவாகவே ஆகிறேன் என்பது உளவியல் ரீதியான உண்மை.

தொழில் ரீதியாக நான் ஒரு நல்ல ஆசிரியர் என்று எனது மாணவர்கள் சொல்ல வேண்டும். குடும்பம் சம்பந்தமாக நான் ஒரு நல்ல தாய் என்று எனது மகன் நினைக்க வேண்டும். சமுதாயம் சார்பாக நான் ஒரு நல்ல எழுத்தாளர் என்று நீங்கள் சொல்ல வேண்டும். இவற்றையே நான் எப்போதும் நினைக்கிறேன். இவை செயற்படுத்தப்படக்கூடிய இலட்சியங்கள் என்று நம்புகிறேன்.

எனது முதல் தொகுதி 'மனித சொரூபங்கள்' வெளியானபோது பலர் பாராட்டினார்கள். இன்னும் சிலர் குறையும் சொன்னார்கள். என்னைக் கொண்டு ஏதோ அலுவல் பார்க்க வேண்டி எனது தொகுதியைப் பாராட்டியவர்களையும், உண்மையில் கதைகளை ரசித்துச் சுவைத்தவர்களையும், என்னை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காய் பாராட்டியவர்களையும் எவ்வாறு என்னால் இலகுவில் இனங்காண முடிந்ததோ அதேபோல உண்மையில் எனது முன்னேற்றம் விரும்பிக் குறை சொன்னவர்களையும், பொறாமையால் குறை கண்டவர்களையும், தங்களைப் பெரிதுபடுத்திக் கொள்வதற்காகக் குறை கூறியவர்களையும் என்னால் வேறு பிரித்து அறிய முடிந்தது.

உளப்பூர்வமான அபிப்பிராயங்களை ஏற்றுக்கொண்டு அவற்றை என் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்த என்னால் முடியும். அதே சமயம் குறை சொல்ல வேண்டும் என்பதற்காய்க் குறை சொல்பவர்களைப் பார்த்துச் சிரித்துவிட்டுப் போகவும் என்னால் முடியும். குறைந்த பட்சம் அந்த அளவு மன முதிர்ச்சிகூட இல்லையானால் இந்தத் தொகுதியை இவ்வளவு விரைவில் வெளியிட என்னால் முடிந்திருக்காது.

சிலர் சில சந்தர்ப்பங்களில் எப்படி என்று அல்லது ஏன் என்று தெரியாமலே எங்களை ஆகர்ஷித்து விடுவதுபோல எப்படி என்று தெரியாமலே எழுத்து என்னைக் கவர்ந்தது. அதனால் பலவற்றைச் சாதிக்க முடியும் என்ற உள்ளுணர்வு ஏற்பட்ட நாளில் இருந்து நான் அதற்கு அடிமையானேன்.

நான் எழுதியிருப்பதை வாசிக்கும்போது நான் எதற்காக எழுதுகிறேன் என்பதை உங்களில் நுண்மதியுடையோர் புரிந்து கொள்வீர்கள். எனது ஆத்ம திருப்திக்காகவும், என் அநுபவ

முத்திரைகளை உங்களுக்குச் சொல்வதற்காகவும், ஒரு பிரச்சினை பற்றிய என் பார்வையைக் காட்டுவதற்காகவும், மனித இதயங்கள் அமைதி பெறுவதற்காகவும், மாணவர்கள் நெறிப்படுத்தப்படுவதற் காகவும் மட்டுமன்றிச் சில சந்தர்ப்பங்களில் எதற்கென்று தெரியாத ஒரு மன உந்தலினாலும் எழுதுகிறேன். ஆகவே எனது செயற்பாட்டு முறையில் குறைகள் இருந்தாலும் எனது நோக்கம் உயர்வானது என்பதை நீங்கள் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

ஒரு எழுத்தாளன் தான் பேச விரும்புவதையே கதைகளில் பேசுகிறான். ஆகவே இங்கே அதிகம் பேசுவது அவனது தரத்தை இறக்கிவிடக்கூடும் என்ற ஜாக்கிரதை உணர்வோடுதான் நான் இதை எழுதுகிறேன்.

முடிந்ததைச் செய்துவிட்டு அமைதியடைவதே நல்ல உள்ளத் திடகாத்திரம் உடையோரின் நிலை. ஆகவே, அன்பு நிறைந்த வாசகர்களே, இதுவே இப்போதைக்கு என்னால் முடிந்தது. உளப்பூர்வமான உங்கள் அபிப்பிராயங்களைச் சீரணிப்பது என்னை உயர்த்தும்.

இத் தொகுதியில் வரும் கதைகளைப் பிரசுரித்த ஈழநாடு, மல்லிகை, குயில், சங்கமம், மலைக்குருவி, மேகம், யாழ்பிறை ஆகியவற்றின் ஆசிரியர்களுக்கும் வானொலியில் என் கதைகளை ஒலிபரப்பியதோடு இந்நூலுக்கு முன்னுரையும் வழங்கி உதவிய திரு. கனக சபாபதி நாகேஸ்வரன் அவர்களுக்கும், அட்டைப்படத்தை அழகாக வரைந்துதவிய சுடர் ஆசிரியர் `அரி' அவர்களுக்கும், தெல்லிப்பழை குகன் அச்சகத்தினர்க்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

எனது உடனாசிரியர்கள் திரு. எஸ்.இராஜகுலேந்திரன், திருமதி என்.யோகநாதர் ஆகியோரும், தம்பி ஆ. இரத்தினவேலோன், தங்கை சு.சிறீரஞ்சினி, சிறிய தந்தையார் திரு. க. உமாமகேஸ்வரன், என் அன்புத் தந்தையார், அருந்துணைவர், அண்ணா ஆகியோரும் இந்நூல் சிறந்த முறையில் வெளிவர பல்வேறு வகைகளில் உதவியுள்ளனர். இவர்களுக்கு என் நன்றியைக் கூறுவதைவிட அன்பைத் தெரிவிப்பதே பொருத்தமானது.

என் கதைகள் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் பிரசுரமாகும் போதும், வானொலியில் ஒலிபரப்பாகும்போதும் ஆரோக்கியமான விமர்சனங்களைச் சுடச்சுட வழங்கும் நண்பர்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள் அனைவரையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூருகிறேன்.

மகாஜனாக் கல்லூரி, **கோகிலா மகேந்திரன்**
தெல்லிப்பழை.
25.02.1984

1. அன்பிற்கு முன்னால் 1

2. துன்பங்கள் சாவதில்லை 11

3. இதுவும் சிரிப்புத்தான் 16

4. தலைமுறைகள் முரண்படும்போது 23

5. நம்பிக்கைகள் 28

6. நிமிரும் ஊனங்கள் 33

7. அர்த்தமற்ற ஒரு வாழ்வு அர்த்தமுள்ளதாகிறது 38

8. ஓர் உள்ளம் பேசுகிறது 43

9. வதை 49

10. பூக்கள் நிறம் மாறுகின்றன 55

11. பரம்பரை இடைவெளிகள் 61

12. அர்ச்சிக்கப்படாத விக்கிரகங்கள் 66

13. உள்ளத்தால் அடிமைகள் 72

14. முரண்பாடுகள் 78

# 1

## அன்பிற்கு முன்னால்.....

வாசலில் கார் ஒன்று வந்து நிற்கும் சத்தம் கேட்கிறது. எனது அறையில் ஒரு மூலையில் இருந்த கட்டிலில் படுத்துக்கிடந்த என் இதயம் அது பாட்டிற்குப் 'பட் பட்' என்று அடித்துக்கொள்கிறது. இந்தப் படபடப்பிற்கு அவசியம் எதுவுமில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். தொடர்ந்து என்ன நடக்கப் போகிறதென்பது தெரியாவிட்டால்தானே இதயத்தில் படபடப்பு ஏற்படவேண்டும்.

இன்று மாலையில் என்னைப் பெண் பார்க்க வருகிறவர்கள் எப்படி நடந்துகொள்ளப் போகிறார்கள்? என்ன சொல்லிவிட்டுப் போகப் போகிறார்கள் என்பது இறைவனுக்குத் தெரியாவிட்டால் கூட என்னால் நிச்சயமாக ஊகிக்க முடிகிறது. இத்தனை வருடமாக இல்லாமல் புதிதாக ஏதாவது நடக்கப்போகிறதா என்ன? ஏதோ என் பெற்றோருக்கும் ஒரு அசட்டு நம்பிக்கை! எப்படியாவது நான் வாழ்ந்து விடவேண்டும் என்ற ஆசை. அவர்கள்தான் என்ன செய்வார்கள்? மூத்த பெண் நான் இருக்க என் தங்கைகள் திருமணம் செய்துகொள்வதும் அழகில்லையே என்ற பிரச்சினை வேறு. ஆனால் என்னைப் படைத்த பிரமன், பிறந்து ஒரு வருடத்திற்குள்ளேயே போலியோவிற்கு ஆளாக்கி, என் காலை முடமாக்கிப் பார்ப்பவர்கள் கண்ணைத் திருப்பிக்கொள்ளும் அலங்கோலமாக நடக்க வைத்திருக்கிறானே! அவன் இந்தப் பிரச்சினைகளைப்பற்றி எல்லாம் யோசிக்காமல் இருந்து விட்டானோ? அல்லது இவர்கள் என்னதான் செய்கிறார்கள் எனப் பார்ப்போமே என்று வேதனைப்பட விட்டு வேடிக்கை பார்க்கும் விளையாட்டுப் புத்தியோ?

இறைவனின் செய்கைக்குக் காரணம் கற்பிக்க முயன்று இத்தனை வருடமாக நான் தொல்லைதான் கண்டிருக்கிறேன். கடவுள் என்று ஒருவர் இருக்கிறாரோ இல்லையோ என்பதுகூட இப்போதெல்லாம் எனக்கு விளங்காத புதிராக இருக்கிறது. அம்மாவுக்கு இன்னும் அசைக்க முடியாத நம்பிக்கை! போனவாரம் கூடக் கீரிமலைச் சிவன் கோயிலுக்குப் போய் அபிஷேகம் செய்து இந்த முறையாவது இந்தத் திருமணம் பொருந்திவர வேண்டும் என்று நேர்த்தி செய்து வைத்திருப்பதை நேற்று மாமிக்குச் சொன்னது என் காதிலும் விழுந்தது. எனக்கு இதையெல்லாம் சொல்வதில்லை. சொன்னால்,

"என்ன கடவுளுக்கும் லஞ்சம் குடுக்கிறியளே! உங்கடை பாலையும் பழத்தையும் காணாமல்தானோ அவர் இவ்வளவு நாளும் கண்ணை மூடிக்கொண்டிருக்கிறார்?"

என்று நான் எரிந்து விழுவேன் என்பது அம்மாவுக்குத் தெரியும்தானே! நான்தான் என்ன செய்ய? வேதனை இதயத்தில் நிற்க முடியாமல் வெடித்துப் புரள முயற்சிக்கும்போது அது அழுகையாக மாறாமல் இருக்கவேண்டும் என்று நான் முயற்சித்தால், இப்படித்தான் அது சிலவேளை கோபமாக வெளிவரும்! பி.எஸ்.சி. பட்டம் பெற்ற எனக்கு ஏதாவது வேலை கிடைத்திருந்தாலாவது நான் என் வாழ்வை எப்படியாவது ஓட்டி விடலாம். நானும் ஏதோ வாரம் ஒரு நேர்முகப் பரீட்சைக்குப் போய்க்கொண்டு தானிருக்கிறேன். எல்லா நேர்முகப் பரீட்சைகளிலும் என்னிடம் கேட்பது ஒரே கேள்விகள் தான்!

அவை என் காலைப் பற்றியவை!

நான் வாசித்துக் கொண்டிருந்த வரதராஜனின் 'நெஞ்சில் ஓர் முள்' புத்தகத்தை மூடி வைக்கிறேன். என் இதயத்தில் ஆயிரமாயிரம் முட்கள் குத்தி வேதனை செய்கின்றன. இதோ அம்மா அவசர அவசரமாக என் அறைக்குள் வருகிறார்.

"சாந்தி! அவை வந்திட்டினம். எழும்பு கெதியா, தலைக்கு இந்தப் பூவை வைச்சுக்கொள். அந்தக் காஷ்மீர் சீலையை எடுத்து உடுத்துக்கொண்டு, முகத்துக்குக் கொஞ்சம் பவுடர் போட்டுக்கொள்! அண்டைக்குச் செய்தது போலை அவைக்கு முன்னாலை வந்து முட்டைக் கண்ணீர் வடிக்காதை! சந்தோஷமாக் கதைக்க வேணும்......"

அம்மா விரைவாகச் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லி விட்டு அவர்களை அழைத்துவரப் படலைக்குப் போய்விட்டா. என் மனதில் எந்த விதமான புது உணர்ச்சியும் இல்லை. எந்த உணர்ச்சிக்கும் ஒரு எல்லை உண்டல்லவா? அடிபட்ட இதயத்தில் மேலும்மேலும் அடிவிழும்போது உணர்ச்சிகள் எல்லாம் மரத்துப் போய்விடாதா? இருந்தாலும் அம்மாவும் அப்பாவும் செய்கிற முயற்சிகளுக்குத் தடையாக இருந்து, நானாக அவர்களுக்கு வேதனையைக் கொடுக்கக்கூடாது என்ற நினைவுடன் மெதுவாக எழுந்து கண்ணாடியில் ஒருமுறை என்னைப் பார்த்துக் கொள்கிறேன்.

என் முகத்தில் ஒரு குறையுமில்லை! நான் பல்கலைக் கழகத்தில் படிக்கும்போது அகிலா அடிக்கடி சொல்வாள்.

"சாந்தி, உன்ரை காலில் மட்டும் இந்தக் குறை இல்லாமல் போயிருந்தால், அந்த ரதியான ரதி எல்லாம் உன்னட்டைப் பிச்சைக்கு வந்திருப்பினமடி."

அந்த நாளில் அகிலா எனக்கு ஒரு சகோதரி மாதிரி! மிகவும் நல்ல இதயம் அவளுக்கு! என்னோடு எப்போதும் அட்டை மாதிரி ஒட்டிக்கொண்டிருப்பாள். என் துன்பங்களைப் பகிர்ந்து கொள்வதில் அவளுக்கு ஒரு சந்தோஷம். அப்போதெல்லாம்..... அந்த மூன்று வருட காலத்திலும்..... எனக்கு அப்பா, அம்மா, அக்கா, தங்கை, சிநேகிதி, அட்வைசர், டாக்டர், ஆசிரியை எல்லாமே அவள்தான். அவள் டாக்டருக்குப் படித்தாள்! நானும் நாலு பாடமும் பாஸ் பண்ணியும் கால் ஊனம் காரணமாக, மெடிசின் செய்யாமல் சயன்ஸ் செய்வதைக் கேள்விப்பட்டு ஒரு நாள் அவள் என் அறைக்கு வந்து என்னுடன் கதைத்தாள். சில மணி நேரத்திற்குள்ளேயே எனக்கு அவளை மிகவும் பிடித்துவிட்டது.

நாங்கள் நெருங்கிய சிநேகிதர்களாவதற்கு அதிக நாள் எடுக்கவில்லை. இப்போது யூ.கே.யில் அவள் தன் கணவருடன் மேல் படிப்புப் படிக்கிறாள். அவளுக்குத் திருமணமான பிறகு என்னுடன் தொடர்புகளும் விட்டுப்போயிற்று. ஏன், அவளுடைய திருமணத்திற்கே இந்தக் காலினால் வெட்கப்பட்டு நான் போகவில்லையே! ஏதோ பழைய நினைவுகள்.

வீட்டு ஹாலுக்குள் மாப்பிள்ளை வீட்டாரும் அப்பாவும் கதைக்கிற சத்தம் என் சிந்தனையைக் குலைக்கிறது. அப்பா சொல்கிறார்.

"நான் தரகரிட்டை ஒரு விஷயம் சொல்லிவிட்டனான். உங்களிட்டைக் கட்டாயம் சொல்லச் சொல்லி. ஏனெண்டால் இஞ்சை வந்து பாத்த பிறகு உங்களை ஏமாத்திச் சம்பந்தம் பண்ணப் பாத்தம் எண்டு நீங்கள் குறை சொல்லக்கூடாது பாருங்கோ."

பழக்கப்படாத ஒரு குரல் பதில் சொல்கிறது.

"தரகர் நேற்றுப் பின்னேரம்தான் சொன்னவர். நாங்கள் அதுக்குள்ளை தம்பியையும் வரச்சொல்லித் தந்தி அடிச்சுக் கூப்பிட்டுப் போட்டம்......"

பட்டும் படாமலும் பேசுகிறார் அவர் மாப்பிள்ளையின் அப்பாவாக்கும். எனக்கு வழமையான சலிப்புத்தான் ஏற்படுகிறது.

'என்ன செய்யிறது சொல்லிப்போட்டம் என்று வந்திருக்கினம். சாட்டுக்கு என்னைப் பாத்திட்டுப் போவினம். வீட்டை போன பிறகு 'சீதனம் காணாது', 'பையனுக்குப் பெண்ணைப் பிடிக்கேல்லையாம்' எண்டு ஏதாவது ஒரு சாட்டுத் தபாலிலை வரும். எல்லாம் பழைய புளிச்சுப்போன கதையள்தான்.'

எனக்கு நானே சொல்லிக்கொள்கிறேன். அப்பாவுக்கு ஏன் இது புரியவில்லையோ! இருந்தாலும் போனமுறை நடந்ததைவிட இது

கொஞ்சம் பரவாயில்லைத்தான். போனமுறை அவர்கள் எங்கள் வீட்டிற்கு வரும் வரைக்கும் விஷயம் தெரியாதாம். அப்பா என்னைத் தந்திரமாக அவர்கள் வர முதலே ஹாலுக்குள் உட்கார்த்திப் போட்டார்.

அம்மா குசினியிலிருந்து கோப்பி கொண்டுவரும்போதுதான் மாப்பிளையின் அப்பா சொன்னார்.

"பொம்பிளை கோப்பி பலகாரம் குடுக்கிறதுதானே சிறப்பு..." என்று. உடனே நானும் அவசரப்பட்டுப் போய் அம்மாவிடம் கோப்பியை வாங்க, மாப்பிள்ளையின் தாய் எனது நடையின் சிறப்பைக் கண்டுவிட்டு,

"இதென்ன பொம்பிளை தாண்டித்தாண்டி நடக்குது. காலிலை ஏதும் காயமே?"

என்று கேட்க அப்பாவும் தட்டுத் தடுமாறி

"இல்லை அது சிறிசிலை போலியோ வந்தது. கொஞ்சம் காலை ஊண்டித்தான் நடப்பா....."

என்று உண்மையைச் சொல்ல, மாப்பிள்ளை திடீரென்று,

"அப்பா எழும்புங்கோ! எங்களை நல்லா ஏமாத்திப் போட்டினம். இதுக்குள்ளை இவ்வளவு புரளி எண்டால், இதுக்குப் பிறகு எத்தனையோ தெரியாது. எழும்புங்கோ அம்மா..... இன்னும் ஏன் இருக்கிறியள்?"

என்று பொரிந்து தள்ள, என் கையிலிருந்த கோப்பி டம்ளர்கள் கீழே விழுந்து சிதற, நான் தூணோடு ஒட்டியபடி விக்கி விக்கி அழ, மாப்பிள்ளையின் தாய் ஒரு மாதிரி,

"அப்ப நாங்கள் வாறம். எதுக்கும் கடிதம் போடுறம்....."

என்று சமாளிக்க, எல்லாமே ஒரே குளறுபடியாக முடிந்த கதை அது. அதை நினைத்துத்தான் அம்மா இன்றைக்கும் ஞாபகமாக,

அவைக்கு முன்னாலை முட்டைக் கண்ணீர் வடிக்காதை என்று சொன்னார்.

நான் அவர்கள் கதைப்பதைத் தொடர்ந்து கவனிக்கிறேன். இல்லை இல்லை, நான் கவனிக்கவில்லை. அது தானாக என் காதில் விழுகிறது. எனக்குத்தான் எதிலும் அக்கறையில்லையே! இதுவரைக்கும் மாப்பிள்ளையின் பெயரோ, உத்தியோகமோ, ஊரோ கேட்காத எனக்கு அவர்கள் கதைப்பது மட்டும் எதற்கு?

"பொம்பிளையை வரச்சொல்லுங்கோவன்" தாய் அவசரப்படுகிறார்.

எனது ஊனத்தைப் பார்க்க அவ்வளவு அவசரமா?

அப்பா 'சாந்தி!' என்று கூப்பிடுமுன் நான் அறையில் இருந்து வெளியே வந்துவிட்டேன்.

'இவர்கள் விரைவில் போய்விட்டால் நான் என்ரை வேலையைப் பார்க்கலாம்.'

என்ற அவசரம் எனக்கு. இவர்கள் கதைப்பதைக் கேட்பதை விட நான் பாதியில் மூடிவைத்த நெஞ்சில் ஓர் முள் கதாநாயகி வடிவுக்கு மேலே என்ன நடந்தது என்று அறிவதில் எனக்கு ஆவல் அதிகம். மெதுவாக நடந்துவந்து கதிரையில் அமருகிறேன். எல்லாரும் என்னையே வைத்த கண் வாங்காமல் பார்க்கிறார்கள்.

அப்படி என்னதான் பார்க்கிறார்கள்?

"சாந்தி! என்னை ஞாபகம் இருக்கா.....?"

திடுக்கிட்டு நிமிர்ந்த நான், இப்போதுதான் மாப்பிள்ளையை முதன்முதலாக நேருக்குநேர் பார்க்கிறேன்.

"சிவம்..... சிவராம்..... நீங்கள்.....?"

நாலு வருடத்திற்கு முன் ஒருநாள் நான் கடைசி வருடம் படித்துக்கொண்டிருந்தபோது, ஒருநாள் கண்டதுதான். இருந்தாலும் எடுப்பான அந்த முகம் என் நினைவைவிட்டு மறையவில்லை.

அப்போது அகிலாவும் மூன்றாவது வருடம் படித்துக் கொண்டிருந்தாள். அகிலாவைப் பார்க்க அவர் விஜயவர்த்தனாவுக்கு வந்திருந்தபோது -

நான் அப்போதுதான் லெக்சர் முடிந்து. 'விசிற்றர்ஸ் ஹால்' வழியாக முதல் 'விங்'கில் இருக்கும் என் அறைக்குப் போய்க் கொண்டிருந்தேன்.

"மிஸ், எக்ஸ்கியூஸ் மீ, ரூம் நம்பர் 142 பிளீஸ்..."

என்று கூறியவர் அதற்குள் என் காலைக் கவனித்து விட்டவர்போல,

"ஐ ஆம் சொறி, உங்களால் இரண்டாவது 'விங்'கிற்குப் போக முடியாதோ என்னவோ! பரவாயில்லை. நான் வேறு யாரிடமாவது சொல்லிவிடுகிறேன்."

என்று கூறியதும், நான் உடனே,

"நோ, நோ, ரூம் 142 என்றால் அகிலாதானே. நான் அகிலாவின்ரை பிரண்ட்தான். அவள் சிலவேளை என்னுடைய ரூமிலை இருந்தாலும் இருப்பள். நான் சொல்லிவிடுறன்....."

என்று கூறியதும், எல்லாம் பசுமையாக என் நினைவுக்கு வந்து மறைகின்றன.

தொடர்ந்து விரைவாக நடந்த நான் ரூம் கதவைத் திறந்ததும் திறவாததுமாக அகிலா அங்கே இருப்பதைக் கண்டு,

"என்னடி அகிலா இது? யாரோ புதுப்புது விசிட்டர்கள் எல்லாம் உன்னட்டை வருகினம். கிட்டடியிலை உனக்கும் 'பக்கட்டிங்' தேவைப்படுது போலை இருக்கு....."

என்று அவசரப்பட்டதும் அதற்கு அவள்,

"அடி அநியாயமே, உங்களுக்கு யாரைக் கண்டாலும் இந்த நினைவுதானே! அது அண்ணையடி, முகத்திலை இருக்கிற ஒற்றுமை கூடத் கழுதைக்குத் தெரியேல்லை."

என்று யன்னலினூடாகப் பார்த்துக் கூறிவிட்டு எழுந்து போனதும்கூட எனக்கு இன்னும் நினைவிலிருக்கிறது.

"நீங்கள் இங்கை வாறது..... அகிலாவுக்கு.....?"

சிந்தையில் இருந்து விடுபட்ட நான் கேட்ட கேள்வி முற்றுப் பெறாமலே முடிகிறது.

"இல்லை, அவளுக்கு இதைப்பற்றி ஒண்டும் தெரியாது. ஏன் எனக்கே தெரியாது. நேற்று திடீர் எண்டு அப்பா ஒரு தந்தி குடுத்திருந்தார். ஒரு அவசர விஷயமா வந்து போகச் சொல்லி! எனக்கு நிறைய வேலையள் இருந்தாலும் என்ன அவசரமோ எண்டு நினைச்சு இஞ்சை வந்த பிறகுதான் பொம்பிளை பாக்கப் போற படலம் எண்டு தெரிஞ்சுது. என்னை முன்பின் ஒண்டும் கேக்காமல் இவ்வளவு தூரம் செய்ததிலை எனக்குக் கோபம். அந்தக் கோபத்திலை நான் ஆர் பொம்பிளை எண்டுகூடக் கேட்கவில்லை. இப்ப காரிலை வரேக்கைதான் அப்பா மெதுவாகச் சொன்னார் பொம்பிளைக்குக் கால்....."

அவர் சொல்ல வந்ததைச் சொல்லத் தயங்குவதாகத் தெரிகிறது.

"சொல்லுங்கோ!"

நான் அந்தத் தயக்கத்தைப் புரிந்து கொள்கிறேன். நான் நொண்டி என்பதை எத்தனை பேர் சொல்லவும், ஏன் கேலி செய்யவும் கேட்டாயிற்றே! அகிலாவின் அண்ணா மட்டும் சொல்லக்கூடாதா?

"பொம்பிளைக்குக் கால் ஒண்டு ஊனமாம் தம்பி. நேற்று நீ வந்தாப் பிறகுதான் தரகர் சொன்னார். நீ உன்ரை கோபத்திலை நிண்டபடியால் நான் ஒண்டும் சொல்லேல்லை. எனக்கு நொண்டி எண்டு கேள்விப்பட்டாப் பிறகு அவ்வளவாப் பிடிக்கேல்லை. சொல்லிப்போட்டம். ஒருக்காப் போய்ப் பாப்பம். பிறகு ஏதாவது சாட்டுச் சொல்லிக் குளப்பலாந்தானே எண்டு அப்பா சொன்னார். நானும் அரைகுறை மனத்தோடைதான் வந்தன். இங்கு வந்து பாத்த பிறகுதான் நீங்கள் எண்டு தெரியுது....."

அவர் மனம் திறந்து வெளிப்டையாக எல்லாவற்றையும் சொல்லிவிடுகிறார்.

"என்ன தம்பி..... அகிலாவுக்குத் தெரிஞ்ச பிள்ளையோ?" அவரின் தந்தை ஆச்சரியப்படுகிறார்.

"ஓம் அப்பா, தங்கச்சியின்ரை பொக்கட் பிரண்ட். நான் தங்கச்சியிட்டைப் போனபோது ஒருநாள் கதைச்சிருக்கிறன்....."

சுருக்கமான பதில்.

தொடர்ந்து நான் அகிலாவைப் பற்றியே விசாரிக்கிறேன். கதை, அரசியல், சமயம் என்று எங்கெங்கோ போகிறது. நேரம் இருளுகிறது. அப்பா எழும்புகிறார்.

"இருளுது. நாங்கள் வரப்போறம்....."

எனது அப்பாவின் முகத்திலோ அம்மாவின் முகத்திலோ ஈயாடவில்லை. அதுதான் தன் தந்தைக்கும் பிடிக்கவில்லை என்பதை மாப்பிள்ளையே வெளிப்படையாகச் சொல்லிவிட்டாரே! ஏதோ தெரிந்தவர்கள் என்பதனால் பண்புடன் கதைத்தார்கள். அதற்காக நொண்டியைக் கட்டிக்கொண்டு கொண்டாட வேண்டும் என்று தலைவிதியா அவர்களுக்கு?

இரண்டு நிமிடத்திற்குள் என் மனம் அகிலா அன்றொரு நாள் தன் அண்ணனைப்பற்றி என்னிடம் கூறியவற்றை இரைமீட்டு விடுகிறது. அன்று இரவு நானாக அவளைக் குடைந்து குடைந்து கேட்கிறேன்.

"என்னடி அகிலா! இரண்டு வருஷமா உன்ரை அண்ணனெண்டு ஒருவர் இந்தப் பக்கம் வரயில்லை. இண்டைக்குத் திடீரென்று வாறார். தங்கச்சியிட்டைக்கூட வர நேரமில்லாமல் அப்பிடிப் பெரிய உத்தியோகமா?"

'ம்...' பெருமூச்சு ஒன்றையே பதிலாகத் தந்து சிறிது நேரம் மௌனமாக இருந்த அவள் தொடர்ந்து சொல்கிறாள்.

"அண்ணை பெரிய உத்தியோகத்திலை இருக்க வேண்டியவர்தான். ஆனால் விதி விளையாடிட்டுது சாந்தி. இப்ப அவர் ஒரு கிளார்க்காகத்தான் வேலை செய்கிறார்."

"ஏன் அகிலா என்ன நடந்தது? எனக்கு ஒண்டும் தெரியாது..."

"அவர் கொழும்பு மெடிக்கல் கொலீச்சிலை படிச்சுக் கொண்டிருந்தார். சரியான கெட்டிக்காரன். செகன்ட் எம்.பி. தார்ட் எம்.பி. இரண்டிலும் கிளாஸ் அடிச்சவர். ஆனால் பைனலுக்கு இரண்டு நாளைக்கு முந்தி மோட்டார் சைக்கிள் அக்சிடன்ற் மீற் பண்ணி சோதினைக்குப் போகேலாமல் போட்டுது. அதிர்ச்சியும் காலிலை பிராக்சருமாக ஆறு மாதம் ஹஸ்பிட்டல்லை இருந்தார். அதிர்ச்சியே முழுதா மாற ஒரு வருசம் எடுத்துது. அதுக்குப் பிறகு நாங்கள் எவ்வளவோ சொல்லியும் திருப்பிச் சோதனைக்குப் போகமாட்டன் எண்டிட்டார். அவர் சேர்ஜறி பேசண்ட்சைப் பாக்கிறதும் அவ்வளவு நல்லதில்லை எண்டு டொக்டரும் சொன்னார். இப்ப மூண்டு மாதமாகத்தான் கிளார்க் வேலை செய்யிறார். இந்த வாசிற்றிச் சூழலைக் கண்டாலே தனக்குக் கவலையாய் இருக்கும் எண்டுதான் என்னையும் பாக்க வாறதில்லை. விதி பலரிட்டைப் பலமாதிரி விளையாடியிருக்குச் சாந்தி..."

அகிலா அன்று கூறியவற்றை நினைத்துக்கொண்ட எனக்கு இப்போது அவர் தன் துர் அதிர்ஷ்டத்தை மறந்து சந்தோஷமாக இருக்கின்றாரா? என்று அறியத் துடிக்கிறது இதயம். ஆனால் கேட்பதற்கு எனக்கு என்ன உரிமை? அகிலா இருந்தால் அவளிடம் கேட்கலாம்.

என் மனதில் எண்ண அலைச்சல் ஓய முதலே அப்பா கேட்கிறார்.

"அப்ப வந்த விஷயத்தைப் பற்றி ஒரு முடிவும் சொல்லேல்லை....." அவருக்கு இன்னும் கொஞ்ச நம்பிக்கை!

"நீங்கள் குறை நினைக்கக்கூடாது. கலியாணம் ஆயிரம் காலத்துப் பயிர். அவசரப்பட்டு முடிவு சொல்லக்கூடாது. நாங்கள் ஆறுதலா யோசிச்சுச் சொல்லிறம்."

தனது திருப்தியின்மையைத் திரும்பவும் மறைமுகமாகச் சொல்கிறார் அகிலாவின் அப்பா.

"அப்பா... நான் நல்லா யோசிச்சுப் போட்டன். இப்ப இந்த இடத்திலேயே முதன் முதலாச் சொல்லிறன். நான் இந்த இடத்தை விட்டால் வேறை ஒரு இடத்திலையும் செய்யமாட்டன்....."

ஆம், உறுதியான இந்த வார்த்தைகள் சிவத்தின் வாயிலிருந்துதான் வெளிப்படுகின்றன. அதிர்ச்சியும் பரபரப்பும் அடைந்தது நான் மட்டுமல்ல. அங்கிருந்த எல்லாருந்தான். என்னால் இந்த முடிவை நம்பவோ நம்பினாலும் ஏற்றுக்கொள்ளவோ முடியவில்லை.

"சிவம்! அவசரப் படாதேங்கோ! உங்கடை தங்கச்சியின்ரை சிநேகிதி என்பதால் சில நிமிஷம் ஏற்படுகிற அநுதாபம் உங்கடை வாழ்க்கை முழுதையும் பாதிக்கிற பாரமா மாறிடக்கூடாது. நான்... நான்... உங்களுக்கு ஒரு சிறந்த மனைவியாய் இருக்கிறது கஷ்டம்....."

என் வார்த்தைகள் குழறுகின்றன. அவர் என்னை நிமிர்ந்து பார்க்கிறார்.

"சாந்தி என்ரை வாழ்க்கையிலை நான் பட்ட கஷ்டங்கள் உனக்குத் தெரியாமல் இருக்கலாம்....."

"இல்லை, எனக்கு நன்றாகத் தெரியும்."

என் மனதிற்குள் தோன்றிய பதிலை நான் வெளியே கூறவில்லை. அவர் தொடர்கிறார்.

"ஆனால் அந்தத் துன்பங்கள் என்னட்டை விட்டுட்டுப்போன சொத்துகள் ஏராளம். அதுவரையிலை மனிசற்றை படிப்பையும், பணத்தையும், தோற்றத்தையும் பார்த்து வந்த நான், அண்டையிலையிருந்து அவையின்ரை உள்ளங்களை மட்டுந்தான் பாக்கிறன். உங்கடை குடும்பம் முழுதிலும் தெரியிற வேதனையை நான் இஞ்சை வந்த நேரம் முதல் அணு அணுவா உணருறன். என்றால் அது துன்பம் எனக்குக் கற்றுத்தந்த பாடந்தான். பாம்பின்ரை காலைப் பாம்பறியும் எண்டு எதுக்காகச் சொல்லிச்சினமோ தெரியாது. ஆனால் விதியின்ரை கைகளாலை விளையாடப்பட்ட ஒருவனாலைதான் அதிலை சிக்கியிருக்கிற இன்னொருவன்ரை மனநிலையை முற்றாக உணரமுடியுது. என்ரை வாழ்விலை எனக்கு நிம்மதி கிடைக்குமெண்டால்... அது இனி... ம்... ஒரு காலத்திலை நான் எதிர்பார்த்தது போலை ஆயிரமாயிரம் நோயாளருக்கு உதவி செய்யிறதிலை வரமுடியாது. அந்தப் பாக்கியத்தை இழந்திட்டன். இப்ப... போலியோ நிரந்தர நோயாளியாக்கி விட்ட ஒரு பெண்ணுக்கு வாழ்வளிக்க முயற்சிக்கிறன். எண்டால் அது அதிலை ஏற்படும் நிம்மதியையும் சந்தோஷத்தையும் அநுபவிக்க ஆசைப்படுகிற சுயநலம் சாந்தி! சுயநலம்!....."

உணர்ச்சியின் உச்சியில் அவர் வார்த்தைகள் தழும்புகின்றன. என் கண்களில் இரண்டு சொட்டுக் கண்ணீர் நிறைந்து கீழே விழவா வேண்டாமா என்று முடிவு செய்யாமல் இமை ஓரத்தில் முட்டி நிற்கிறது.

"உலகத்தில் தத்துவங்கள் பூக்கும்போது அவை துன்பத்தை அடிப்படையாகக் கொண்டுதான் மலருகின்றன. துன்பத்தின் அடிப் படையில்தான் நல்ல வலிமையான துன்பங்களும் உருவாகின்றன....."

யாரோ கூறியதை எடைபோடுகிறது என் இதயம்.

"கவலைப்படாதேங்கோ..... தம்பிக்கு விருப்பமெண்டா எங்களுக்கும் சந்தோஷம்தான்....."

அவரின் தந்தை தன் சம்மதத்தை வெளிவிடுகிறார். நின்று நிதானித்து அமைதியாகத் தன் முடிவை வெளியிடும் தன் மகனின் முடிவை மாற்றமுடியாது என்று நினைத்தாரோ என்னவோ!

"ஆனால்..... சாந்தி! நான் ஏழைதான். உத்தியோகமும் சின்னன்தான். அந்த எளிய வாழ்க்கையை நீ சந்தோஷமா ஏற்றுக் கொள்ளுவியா?..."

அந்தக் கேள்வியில்தான் எத்தனை பெருந்தன்மை?

"துன்பப்படுகிறவையளைப் புரிஞ்சுகொண்டு அவைக்கு உதவி செய்யும் ஆவலும் அன்புமாகிய பெரிய செல்வங்கள் உங்களிட்டை இருக்கே! அது போதாதா சிவம்?"

உதட்டில் முட்டி வந்த வார்த்தைகளை வெளியிடவில்லை நான். மாறாக என் இதழோரத்தில் ஒரு சிறு புன்னகை மட்டும் தோன்றுகிறது. திடீரென்று குனிந்து கொண்ட நான் அந்தப் புன்னகையை மறைக்க முயற்சிக்கிறேனா?

"வாழ்க்கையில் ஒரு கதவு மூடிக்கொண்டால் மறுகதவு தானே திறந்துகொள்ளும். இது இயற்கை நியதி. பிறகு நாம் ஏன் உபத்திரவப்படுகிறோம்?"

அப்பா தன் தத்துவத்தைத் தனக்குத் தானே சொல்லிக் கொள்வதுபோல் முணுமுணுத்துக் கொள்கிறார்.

"தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் தரத்தினிற் குறைவதுண்டோ! உங்கள் அங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் அன்பு குறைவதுண்டோ!"

ரேடியோவில் சுசீலாவின் குரல் கேட்கிறது. யாரும் அதைக் கவனிக்கவில்லை. அவர் மட்டும் ஒருமுறை அதை உற்றுக் கேட்டு விட்டு நிமிர்ந்து என்னைப் பார்த்துச் சிரிக்கிறார். நான் தலையை மறுபக்கம் திருப்பிக்கொள்கிறேன்.

(1972 கார்த்திகை குயில் சிறு சஞ்சிகையில் பிரசுரமானது.)

## 2

# துன்பங்கள் சாவதில்லை

யாழ்ப்பாணம் ரயில்வே நிலையத்தின் பெரிய கடிகாரம் நேரம் காலை ஆறு மணி என்பதைக் காட்ட ஆறுமுறை அலறி ஓய்ந்தது. அலற வேண்டியதும் பின்னர் தானே ஓயவேண்டியதும் அதன் தலைவிதி என்று எண்ணிப்போலும் யாரும் அதைக் கவனிக்கவில்லை. 'பிளாட்போமில்' கிடந்த கிழவன் கையைக் காலை நீட்டிச் சோம்பல் முறித்துக் கொண்டான்.

வழக்கம்போலவே இன்றைக்கும் "மெயில் லேட்"! ஒவ்வொரு நாளும் மெயில் லேட்டாக வந்தாலும் கேட்க மனிதரில்லை. ஆனால் கிழவன் லேட்டாக வரமுடியுமா?

அவன் வரமுதல் மெயில் போய்விட்டால், அது கிழவனை எவ்வளவு பாதிக்கும்? கிழவன் ஐந்து மணிக்கெல்லாம் வந்துவிடுவான்.

அதோ! 'சிக்னல்' விழுந்துவிட்டது!

மெயில் வருகிறது!

கிழவன் எழுந்து உடம்பை ஒருமுறை அப்படி..... பிறை ஆசனம் செய்வதுபோல வளைத்துக்கொண்டான்.

"அப்பு சந்நிதியானே! இண்டைக்கு நிறையக் கூலி கிடைக்கவேணும். சல்லிமுட்டியிலை பத்து ரூபா போடவேணும்..."

கிழவனை அறியாமலே வழக்கமான பிரார்த்தனையை இதயம் நிறைவேற்றி வைத்தது. சல்லிமுட்டியை உடைத்து வரும் காசை எடுத்துச் சீதனம் கொடுத்துப் பேத்தியை ஒருவன் கையில் பிடித்துக் கொடுக்கும் காட்சி கிழவனது கற்பனையில் விரிகிறது.

"ஐயா பெட்டியைத் தூக்கட்டே......"

கொஞ்சம் பணக்காரர் போலத் தோன்றிய ஒருவரிடம் போகிறான் கிழவன். அவர் பதில் ஒன்றும் சொல்லாதவராய்க் கிழவனையே உற்றுப் பார்க்கிறார்.

ஏழைகளின் கேள்விக்கு முதல் முறையிலேயே பதில் சொல்லிவிட்டால் பணக்கார அந்தஸ்து என்ன ஆவது என்று நினைத்திருப்பாரோ?

ஒட்டி உலர்ந்துபோன கண்கள்!

இடுக்கிக் கொண்ட அந்தக் கண்களில் ஏதோ ஒரு ஒளி!

அலங்கோலங்கள் நிறைந்த உலகத்தைப் பார்த்துப் பார்த்துப் புளித்துப்போய்த் தேவையானவற்றை மாத்திரம் பார்க்கக் கூடிய அளவுக்குக் கண்களைச் சுருக்கிக் கொண்டதுபோல் தோன்றுகிறதா?

கூனிப் போய்விட்ட உடம்பு!

"நேர்மையாய் உடலை வருத்தி உழைக்கும் எங்கள் கூட்டத்தை நசுக்கி, எமது முதுகின்மேல் பயணம் செய்யும் பணக்காரரே வாருங்கள்" என்று அழைப்பதுபோல் தெரிகிறதா?

கிழவனின் தோற்றத்தைப் பார்த்தால், கிழவன் பெட்டி தூக்குவான் என்ற நம்பிக்கை யாருக்கும் வராது. இந்தச் சந்தேகத்தினால்தான் அவர் பதில் சொல்லவில்லை என்று ஊகித்த கிழவன் தனது வலிமையின் திறனைக் காட்ட விரும்பி, ஒரு கையினால் பெட்டியை அலாக்காகத் தூக்கித் தலையில் வைத்துக்கொள்கிறான். வைத்துக்கொண்டு சில அடிகள் நகர்ந்தது தான் தாமதம்..... ஏதோ பிரளயமே நடந்து முடிந்துவிட்டது போலச் சத்தம் போட்டார் பணக்காரர்.

"டேய்! இறக்கடா பெட்டியைக் கீழை! ஏதோ உன்ரை வீட்டுச் சீதனத்தைத் தூக்கிற மாதிரியெல்லே தூக்கிறாய்! மனுசனுக்கு ரயிலிலை வந்த களைப்பு ஒரு பக்கம், இந்த நாயளின்ரை கரைச்சல் இன்னொரு பக்கம். இப்பிடித்தான் 'போட்டர்' மாதிரிக் கதைக்கிறது. பிறகு பெட்டியைத் தூக்கிக் கொண்டு மெல்ல நழுவிறது. ஆரை ஏமாத்தலாமெண்டு பாக்கிறாய்! என்னிலை வாயாது உந்தச் சேட்டை..... ஒ....."

அவர் கிழவனை அடித்துத் தள்ளாத குறைதான். கிழவன் மெதுவாகப் பெட்டியை இறக்கி வைத்துவிட்டு அடுத்து நிற்கும் பெரியமனிதர் குடும்பத்தின் பக்கம் போகிறான். தான் களவெடுக்கும் நோக்கத்துடனோ அல்லது கடத்தும் நோக்கத்துடனோ பெட்டியைத் தூக்கவில்லை என்ற நேர்மையான வாதத்தை எடுத்து விவாதிப்பதில் எந்தவிதப் பயனுமில்லை என்பது கிழவனுக்குத் தெரியாதா? வறியவன் என்றாலே கள்ளன் என்றும் நேர்மை நிதானம் அற்றவன் என்றும் அர்த்தம் செய்து கொள்கிற பெரியவர்கள் வாழ்கிற சமுதாயத்தை அவன் இன்றுதானா முதன் முதலாகப் பார்க்கிறான்?

பருவம் அடைந்துவிட்ட பேத்திக்குச் சீதனம் கொடுக்க வேண்டும் என்பதும் அவளுக்கு இளைய பேரனைப் படிப்பித்து உத்தியோகமாக்க வேண்டும் என்பதுமே கிழவனின் இலட்சியங்கள். இதற்காக எந்தக் கஷ்டத்தையும் எந்த அவமானத்தையும் தாங்கக் கிழவன் ஆயத்தமாக இருந்தான்.

பன்னிரண்டு பெட்டிகளை மும்மூன்றாக நாலு முறைகளில் 'ஸ்டேசனில்' இருந்து 'பஸ் ஸ்டாண்டிற்கு'க் காவியதில் கிழவனுக்கு ஆறு ரூபா கிடைத்தது. ஒரு ரூபாவுக்கு ஒரு இறாத்தல் பாண் வாங்கிக்கொண்டால் பேரப்பிள்ளைகள் இருவருக்கும் காலைச் சாப்பாட்டைச் சமாளித்து விடலாம். மிகுதி ஐந்து ரூபா உண்டியலுக்குத்தான். மத்தியானச் சாப்பாடு பற்றி யோசித்துக் கொண்டே கிழவன் ஆஸ்பத்திரி வீதியில் நடந்துகொண்டிருந்தான். நாற்சந்தியில் இருந்த காந்தியின் சிலையை வடிவாகத் திரும்பிப் பார்த்துக்கொண்டான். ஒவ்வொரு நாளுந்தான் பார்க்கிறான். ஆனால் தினம் அந்த முகத்தின் புன்சிரிப்பு அதிகரிப்பதுபோல ஒரு பிரமை.

காந்தியைப் பார்த்துக்கொண்டே நடந்த கிழவன், மணிக்கூட்டு வீதியில் வந்த பஸ்ஸை அவதானிக்கவில்லை. பஸ்ஸைக் கண்டவுடன் விரைவாக ஓடி நடைபாதையில் ஏறிக்கொண்டான். யாரோ பின்னால் இருந்து நெரித்தார்கள். கிழவன் திரும்பிப் பார்த்தான்.

"என்னணை அப்பு? ஆக்கள் நிக்கிறது தெரியேல்லையே! இந்தப் பட்டப்பகலிலை இப்பிடி நெரிக்கிறாய்?"

யாரோ பழியைக் கிழவன்மீதே திருப்பி விட்டார்கள். மௌனவிரதம் கைப்பற்றிப் பழகிப்போன கிழவன் சண்டை போடாமல் மேலே நடந்தான்.

ஆஸ்பத்திரி மூலையில் கிழவன் திரும்புவதற்கும், 168 அளவெட்டி பஸ் புறப்பட ஆயத்தமாக நிற்பதற்கும் சரியாக இருந்தது. தன் வலிமை எல்லாம் திரட்டி ஓடிய கிழவன் புறப்படத் தொடங்கிவிட்ட பஸ்ஸில் தொற்றி ஏறிக்கொண்டான்.

"அப்பு எங்கை போறாய்?"

"உதிலை உந்த அளவெட்டிச் சங்கத்தடி மோனை..."

'புற்போர்ட்' சுவரில் நிதானமாகச் சாய்ந்துகொண்ட கிழவன் 'திக்கற்றை' வாங்கிக்கொண்டு காசு எடுப்பதற்காகக் கிழிந்த காற்சட்டையின் 'பொக்கற்'றில் கைவிட்டான். கிழவன் எதிர்பார்த்த சில்லறையோ ஐந்து ரூபா நோட்டோ அங்கே இல்லை.

"என்னணை அப்பு இப்பிடி நெரிக்கிறாய்?" என்ற குரலும் காந்தியின் சிலையும் கிழவனின் மனக்கண்ணில் மங்கலாய் அணியிடுகின்றன.

"ஒரு மூலையில் பணத்தைத் தேங்கவிட்டு, சத்தியம் தவறாத உழைப்பின் சிறு சேமிப்பைக் கொள்ளையடிக்கும் சமூகம்... அந்தச் சமுதாயந்தான் காந்திக்கும் சிலை வைக்கிறது" என்பதை நினைத்த கிழவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

"தம்பி! என்னை உதிலை இறக்கிவிடு. காசைத் துலைச்சுப் போட்டன்."

"ஓ... உது நல்ல சாட்டு. கோண்டாவில் வரைக்கும் ஓசியிலை வந்திட்டாயெல்லே. இறங்கு இறங்கு..."

என்று பாயும் 'கொண்டக்டரும்'

"சிலவேளை கிழவன் உண்மையாகத்தான் கொட்டப் பெட்டியைப் போட்டுட்டுதோ..."

என்று யாரோ பஸ் பிரயாணி அளித்த அநுதாபச் செய்தியும் காதில் விழமுதலே கிழவன் இறங்கிவிட்டான்.

மெதுவாக இருந்திருந்து நடந்தே வீடுவந்து சேர்ந்தான் கிழவன். படலையைத் திறந்துகொண்டு உள்ளே போகும்போது நிழல் கிழக்குப் பக்கம் சாயத் தொடங்கிவிட்டது. நேரம் இரண்டு மணிக்குமேல் என்று கிழவனின் அறுபது வருடகால அநுபவம் கூறிற்று. பேரன் குஞ்சன் முன்வீட்டு முருகேசுவின் மணற்கும்பியில் மாப்பிள்ளை பொம்பிளை வைத்து விளையாடுவது தெரிந்தது.

தாத்தாவைக் கண்ட பேரன் ஓடி வந்தான்.

"தாத்தா! அக்கா யாழ்ப்பாணம் போகுதாம். நேக்கு இனிப்புக் கொண்டருமாம். உன்னட்டைக் குடுக்கச் சொல்லித் துண்டு தந்தது..."

உள்ளே இருந்து ஒரு சிறு கடதாசித் துண்டைக் கொண்டு வந்தான் குஞ்சன். இனம் புரியாத ஒரு உதறல் தேகமெங்கும் பரவ எங்கோ ஒரு மூலையில் அமுக்கேறிப்போயிருந்த கண்ணாடியைத் தேடி எடுத்துப் போட்டுக்கொண்டு துண்டைப் பிரித்தான் கிழவன்.

அன்புள்ள தாத்தா,

என்மேல் பலகாலமாக அன்பு வைத்திருந்த பக்கத்துவீட்டு மூர்த்தியுடன் நான் மட்டக்களப்பிற்குப் போகிறேன். என்னைக் கல்யாணம் செய்து கொள்வதாக அவர் சொல்லியிருக்கிறார். தாய் தந்தை அற்ற என்னையும் தம்பியையும் இதுவரை அன்புடன் வளர்த்த உங்களை நான் என்றும் மறக்க மாட்டேன். என்னை ஆசீர்வதியுங்கள்.

அன்புள்ள பேத்தி
ராசு

காகிதத்தின் வசனங்கள் கிழவனின் காதுகளில் பேரொலியாய்க் கேட்கின்றன. திரும்பத் திரும்ப... திரும்பத் திரும்ப... யாருக்காக உடலையும் உள்ளத்தையும் வருத்தி வருத்திச் சேகரித்தானோ, அந்தப் பிள்ளைக்கே நன்றி இல்லாமல் போய்விட்டதா? உலகத்தின் மனிதர்கள் அனைவரையும் சிந்திக்க முடியாத மாக்களாக இறைவன் மாற்றிவிட்டானா? தள்ளாத காலத்தில் பக்கத்தில் இருந்து ஒரு கோப்பை தேநீர் கொடுக்க வேண்டும் என்றுகூட அவளுக்குத் தோன்றவில்லையா? ஏதேதோ கேள்விகள் அர்த்தமற்ற பதில்கள், கண்ணைச் சுற்றிச்சுற்றி இருட்டாக வருகிறது.

"தாத்தா! தாத்தா!"

யாருமற்ற அநாதைச் சிறுவன் தாத்தாவைக் கூப்பிடுகிறான். அழுகிப்போன சமுதாயத்தில் அவன் குரலை அநுதாபத்துடன் கேட்க ஆட்களில்லை.

"அது உந்தக் கண்மூடிக் கிழவன் செத்துப் போச்சாமெல்லே! அதுதான் மேளம் கேக்குது... ஓ!"

"அவள் ராசுவெல்லே... உவன் மூர்த்தியோடை ஓடிப் போட்டாளாம். அதுதான் கிழவனுக்கு ரத்தம் உறைஞ்சு போச்சுது...!"

யாரோ ஒழுங்கையில் கதைத்துக்கொண்டு போகிறார்கள். தனது நிலையும் ஒருநாள் கிழவனைப்போல் ஆகும் என்று தெரியாத பேரன் மணலில் வீடு கட்டி "மாப்பிள்ளை பொம்பிளை" செய்து மாலை போட்டு விளையாடிக்கொண்டிருக்கிறான்.

(1974 கார்த்திகை சங்கமம் இதழில் பிரசுரமானது.)

# 3

# இதுவும் சிரிப்புத்தான்

"நான் இரண்டு கையும் நீட்டி மறிச்சனான் எல்லே! வெறும் வசுவாக் கொண்டுபோறான். குறுக்காலை போவான் மறிக்காமல் போறான்..."

அப்போதுதான் பஸ்ஸிற்குள் ஏறிய கிழவி முதல் போன பஸ், தன்னை ஏற்றாமல் போனது பற்றித் தனக்குள் - ஆனால் சற்றுப் பலமாகவே - புறுபுறுப்பது என் காதுகளில் கேட்கிறது.

"அதுக்கென்னணை ஆச்சி, இப்ப நான் மறிச்சு ஏத்தினனான் எல்லே! பாத்தியே உன்னிலை எனக்கு நல்ல விருப்பமெல்லே, அதுதானே மறிச்சனான். அவன் போனவன் கிடந்தான் விட்டுத் தள்ளு..."

பஸ் நடத்துநர் கிழவியுடன் பகிடி விடுகிறார்.

"நீ என்னைப்போல கிழவியிலை ஆசை வைச்சு என்னடா மோனை செய்யப்போறாய்? உங்கினை எத்தினை பள்ளிக்கூடப் பெட்டையள் ஏறுது. அதிலை ஒண்டைப் பாரன்..."

கிழவியும் விட்டுக் கொடுக்கவில்லை. பஸ்ஸிற்குள் இருந்த அனைவரும் 'கொல்'லென்று சிரித்தனர். ஆனால் என்னால் மட்டும் சிரிக்க முடியவில்லை. இதயம் வெறுமையாக, உணர்ச்சிகள் எதுவும் இல்லாமல், ஞானியின் நிர்மலமான மனம் போல் இருந்தது.

ஓ...! 'ஜெயம்' தன்னுடன் என் நகைச்சுவை உணர்ச்சியையும் கொண்டு போய்விட்டாளா? ஒல்லியான ஆனால் செந்தழிப்பான அந்த உருவத்தையும், விதம் விதமாக அவள் பதில் சொல்லும் அழகையும், இன்று அவள் கொட்டித் தீர்த்து விட்டுப்போன உணர்ச்சிக் குமுறலையும் சுற்றிச் சுற்றி அசை போட்டேன் நான். 'ஜெயம்...' நான் இந்தப் பாடசாலைக்கு மாற்றலாகிப் போன முதல்நாளே தனது நகைச்சுவை நிரம்பிய பேச்சினால் என்னைக் கவர்ந்தவள் அவள். முதல்நாள்... அன்று பல்வேறு விலங்குகளின் உணவுமுறை பற்றிப் பொழுது போக்காக நான் அவர்களுடன் உரையாடினேன்.

இதுவும் சிரிப்புத்தான்

வண்ணத்துப்பூச்சி, வண்டு, ஆடு, மாடு, நாய், புறா... இப்படிப் பல்வேறு உயிரினங்கள் பற்றியும் உரையாடும்போது, யாரோ ஒரு மாணவன்

"ரீச்சர், குளவி எப்பிடிச் சாப்பிடும்?" என்று கேட்டான். நானும் அதை,

"ஆ... குளவி... குளவி என்ன சாப்பிடும்?" என்று வகுப்பு முழுவதையும் பார்த்துக் கேள்வியாக்கினேன். ஒரு மாணவர்களும் பதில் சொல்லவில்லை. திடீரென்று ஒரு மூலையில்,

"இந்தக் காலத்துக் கிழவியளைப் போலை. குளவியளும் களவு களவாக் கள்ளுக் குடிக்குதுகள் ரீச்சர். குளவி கள்ளு முட்டியைப் பிய்ச்சுப் பிய்ச்சு எக்கச்சக்கமாய்க் குடிக்கும்."

என்று பதில் கேட்டது. வகுப்பு மாணவர்கள் அனைவருடனும் சேர்ந்து நானும் சிரித்தேன். அது கள்ளமற்ற வெள்ளை உள்ளங்களுடன் சேர்ந்து சிரித்த பிள்ளைச் சிரிப்பு.

"நான்தானா அந்தப் பதிலைச் சொன்னேன்?" என்று கேட்பது போலத் துளி சிரிப்புக்கூட இல்லாமல் பதுமையாக அமர்ந்திருந்தாள் ஜெயம்.

இன்னொரு நாள்! அன்று 'ஆக்கிமெடிசின் தத்துவம்' கற்பிக்க வேண்டும் என்று பாடத்திட்டம் கூறியது. நான் இன்றைய புதிய கல்விமுறையின்படி ஒவ்வொரு மாணவர்களிடமும் கல், இரும்பு, மரம் இப்படிப் பலவிதமான பொருள்களைக் கொடுத்து அவற்றை முறையே வளியிலும் நீரிலும் நிறுத்து நிறைகளைப் பதிவு செய்யும்படி கூறினேன். எல்லோருடைய நிறைகளையும் தொகுத்துக் கரும்பலகையில் எழுதி அவற்றில் நிறைக்குறைவு தோற்றுவதையும் அவதானிக்கச் செய்து,

"நீரினுள் அமிழ்த்தும்போது நிறை குறையிறதுக்கு என்ன காரணம் எண்டு நினைக்கிறியள்?"

என்று கேட்டேன். மாணவர்கள் அனைவரது முகங்களிலும் சிந்தனைக் கோடுகள் தீவிரமாகப் பரவின. யாரிடமிருந்தும் பதில் வரவில்லை. திடீரென்று ஜெயம் எழுந்தாள்.

"மற்றவையைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் என்னுடைய கல்லுநிறை குறைஞ்சதுக்குக் காரணம் தெரியும்."

என்றாள். நான்,

"என்ன காரணம்?" என்றேன்.

"நீங்கள் எனக்குத் தந்த கல்லுக்குள்ளை இருந்த ஓட்டைக்குள்ளை நிறைய எறும்புகளும் பூச்சிகளும் பிடிச்சுவிட்டுத் தந்திருக்கிறியள். தண்ணிக்குள்ளை அமிழ்த்தின உடனை அதுகள் எல்லாம் வெளிக்கிட்டு ஓடிட்டுதுகள். அதனாலைதான் முதல் இருந்த நிறை குறைஞ்சு போச்சுது."

என்றாளே பார்க்கலாம்! நான் வயிறு குலுங்கச் சிரித்தேன்.

இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள்!

எண்ணிக்கொண்டு போனால் அளவே இருக்காது. ஜெயம் இருப்பதனால்தான் அந்த வகுப்பே கலகலப்பாக இருப்பதுபோல் எனக்கு ஒரு பிரமை. இப்படி எத்தனை ஆனந்தமயமான நாட்களை நான் அந்த வகுப்பில் கழித்திருப்பேன்.

எல்லாவற்றையும் திருஷ்டி கழிப்பதுபோல இன்று...

இந்த இன்று வராமலே போயிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். ஏதோ ஒரு வேதனையின் பாரம் மனதை முள்ளாக உறுத்துகிறது. பஸ் ஒரு சந்தியில் நின்று நிறையச் சனங்களை ஏற்றிக்கொண்டு மறுபடியும் புறப்படுகிறது. நான் மீண்டும் சிந்தனை அலைகளின் அரவணைப்பில் துவண்டு படுக்கிறேன்.

இன்று காலை... நான் வகுப்பிற்குள் நுழையும்போதே வகுப்பு வகுப்பாக இல்லை. 'கலகல' என்றிருக்கும் மாணவர்கள் எல்லாரும் அமைதியுடன் இருந்தார்கள். எனக்கு ஒரே ஆச்சரியம். ஒருவேளை 'ஜெயம்' வரவில்லையோ என்று நினைத்து அவள் இருக்கும் இரண்டாம் வாங்கின் மூலைப்பக்கம் தலையைத் திருப்பினேன். 'ஜெயம்' எங்கோ சூனியத்தை வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள். நான் வகுப்பிற்குள் நுழைந்துவிட்டது கூட அவளுக்குத் தெரியாது போலத் தோன்றியது.

"என்ன ஜெயம், ஏன் எல்லாரும் ஒரு மாதிரி இருக்கிறியள்?" பொறுக்க முடியாமல் கேட்டேவிட்டேன் நான்.

"ஒண்டுமில்லை ரீச்சர்..."

மெல்லிதாக வெறுமை கலந்த உணர்ச்சியுடன் வெளிவந்த அந்த வார்த்தைகளின் பின்னால் ஏதோ பெரிய விஷயம் ஒளிந்திருப்பது துலக்கமாகத் தெரிந்தது. இருந்தாலும் வகுப்பில் மற்றைய பிள்ளைகள் அனைவருக்கும் முன்னால் இதைவிட விளக்கமாக அவளிடம் எதுவும் கேட்கவும் முடியாமல் இருந்தது. நான் அன்றைய பாடத்தைத் தொடங்கினேன்.

உணவுக்கு வாய்க்குழியில் நடைபெறும் மாற்றத்தை முதல் வகுப்பில் கற்பித்திருந்தேன். ஆதலால் இன்று இரைப்பையில் என்ன நடக்கிறது என்று விளக்கத் தொடங்கினேன். இரைப்பையில் சுரக்கப்படும் நொதியங்கள், அவற்றின் தொழில்கள் எல்லாம் விளக்கி முடியும்வரை மாணவர்களின் அமைதி தொடர்ந்தது. இறுதியில் நான் பசி எப்படி இரைப்பையில் உணரப்படுகிறது என்று கற்பிக்கத் தொடங்கினேன்.

"உடம்பில் ஏற்படும் சேர்க்கை எறிகை மாற்றங்களினால் உடல் பல பொருள்களைக் கணந்தோறும் இழக்கிறது. இவற்றை ஈடு செய்வதற்காகவே உடலில் சமித்த பல உணவுப் பொருள்களும் உறிஞ்சப்படுகின்றன. இதனால் இரைப்பை வெறுமை அடைய அதன் அடிப்பக்கத் தசைகள் சுருங்குகின்றன. இந்தச் சுருக்கம் நரம்பு மண்டலத்தினால் உணரப்பட அது 'பசி' என்ற உணர்ச்சியாக எமக்குத் தோன்றுகிறது."

எனது விளக்கம் முடியவில்லை அதற்குள்,

"அப்படியானால்... அந்த இரைப்பையின் தசைகள் சுருங்கும்போது, அதனை மூளைக்கு எடுத்துச் செல்லும் நரம்புகளைப் பிடித்து வெட்டிவிட்டால், பசி வராதா ரீச்சர்?"

சோர்ந்து போய் இருந்த ஜெயம் திடீரென்று வெறிபிடித்தவள்போல் எழுந்துநின்று அந்தக் கேள்வியைக் கேட்டபோது நான் அதிர்ந்தே போய்விட்டேன்.

"ஏன் அவள் இப்படி ஒரு நாளில்... இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிறாள்?"

எனது மனம் மிகவும் குழம்பிப் போய்விட்ட நிலையிலும், மேலும் பாடத்தை நடத்தவும் முடியாமல், அவளது கேள்விக்குப் பதில் சொல்லாமலே வகுப்பைவிட்டு வெளியேறினேன் நான். பொது அறையில் அமர்ந்து எதையோ வாசிக்க முயன்றும் முடியாமல் போகவே அங்கிருந்தபடியே ஜெயத்தைக் கூப்பிட்டனுப்பினேன். அவள் வந்தாள்.

"ஏன் வகுப்பிலை அப்பிடி ஒரு கேள்வியை என்னட்டைக் கேட்டனி ஜெயம்?"

நான் அன்புடன் அவளை ஏறிட்டு நோக்கியபடி கேட்டேன்.

"இவ்வளவு நாளும் நான் வகுப்பிலை எத்தினையோ பிரயோசன மில்லாத கேள்வி எல்லாம் கேட்டிருக்கிறன். மற்றவையைச் சிரிக்கப் பண்ணிறதுக்காக. ஆனா... இது அப்பிடி இல்லை... இந்தக் கேள்வியின்ரை பதில் தெரிஞ்சாத்தான் என்னாலை அழாமல்

இருக்கேலும். சொல்லுங்கோ... ரீச்சர்... அந்த நரம்பைத் தேடி வெட்டிவிடலாமா?"

என் கைகளை இறுக்கமாகப் பற்றிக்கொண்ட அவள் கண்களில் கண்ணீர் பொலபொலவென்று உதிர்ந்தது. நான் அவளை அருகில் அழைத்து மெதுவாக அணைத்தபடி,

"உனக்கு என்ன கஷ்டம்? ஏன் இப்பிடி எல்லாம் கதைக்கிறாய்? என்னட்டை விரிவாய்ச் சொல்லு ஜெயம்?"

என்றேன். அவள் சொன்னாள்.

"எனக்கு நாலு வயதிலை ஒரு தம்பி இருக்கிறானே, அவனுக்குச் சரியான வருத்தம் ரீச்சர். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகக் காசு இல்லை என்று அம்மா ஒரு இடமும் கொண்டு போகேல்லை. அவன் செத்தாக்கூட நான் அழமாட்டன். ஆனா... உயிரோடை அவன் பசிக்குது பசிக்குது எண்டு அழுறானே, அதை என்னெண்டு கேட்டுக்கொண்டு படுக்கிறது...? சொல்லுங்கோ ரீச்சர்?"

அவள் விம்மினாள்.

"ஏன் ஜெயம், உன்ரை அப்பா என்ன வேலை செய்கிறார்?"

எனக்கு அவளின் குடும்பம் பற்றி அதுவரை ஒன்றுமே தெரியாது.

"அப்பா இருந்தா நாங்கள் ஏன் இப்பிடி இருக்கிறம் ரீச்சர்? அவரைத்தான் ஒரு வருஷத்துக்கு முன்னாலை வெட்டிச் சாக்காட்டிப் போட்டாங்களே!"

"வெட்டியா...? ஏன்...? எப்பிடி...?

எனக்கு எல்லாமே புதுமையாக இருந்தது. அவள் அமைதியாகச் சொன்னாள்.

"அது பெரிய கதை ரீச்சர். அப்ப, நாங்கள் விதானையார் வீட்டுக்கு எதிர் வளவுக்குள்ளைதான் இருந்தனாங்கள். ஒருநாள் அப்பாவும் அம்மாவும் வீட்டிலை இல்லாத நேரம், நானும் பள்ளிக்கூடத்துக்கு வந்திட்டன். எங்கடை ஆடு அறுத்துப்போட்டுப்போய் விதானையார் வீட்டு மிளகாய்க் கண்டுகளைத் தின்டிட்டுதாம். இரவு விதானையார் வந்து அப்பாவைக் கண்டபடி பேசினார். திட்டினார். அப்பா,

"நாங்கள் வேணுமெண்டு அவிட்டு விடேல்லை விதானையார். நாங்கள் வீட்டிலை இல்லாத நேரம் ஆடு அறுத்துப் போட்டுது. அதுக்கு

என்ன செய்யிறது...? இனிமேல் கவனமாயிருக்கலாம். வேறை என்ன செய்யிறது?" எண்டு சொல்லிப் போட்டாராம்.

"கீழ்சாதி நாயள் என்னோடையெல்லே வாய்காட்டுதுகள். இவனுக்கு நல்ல பாடமா ஒரு பாடம் படிப்பிச்சு விட்டமெண்டால், மற்றவையளுக்காலும் புத்தி வரும்..."

"எண்டு சொல்லிப் போட்டுப்போன விதானையார் அண்டு இரவே ஆரையோ அனுப்பி அப்பாவைக் கத்தியாலை குத்திவிச்சுப் போட்டார்..."

"பிறகென்ன ரீச்சர்? ஆஸ்பத்திரிக்குப் போற பாதி வழியிலை அப்பா செத்துப் போனாராம். அம்மா வழக்குப் போட்டா. இருந்த ஒரு காணியும் நகையளும் வழக்குச் செலவோடை முடிஞ்சுதாம். ஆனால் வழக்கு, சாட்சி சரியாய் இல்லாமல் தள்ளுப்பட்டுப் போச்சு..."

"ஓ...! அப்ப அதுக்குப் பிறகு... உங்களை எல்லாம் ஆர் பாக்கிறது?"

"வேறை ஆர். அம்மாதான் இவ்வளவு நாளும் வேலைக்குப் போய் ஏதோ கொஞ்சம் உழைச்சா. இப்ப அவவுக்கு வருத்தம். வேலைக்குப் போக ஏலாது. தம்பி... பசியிலையே..."

அவள் வசனத்தை முடிக்கவில்லை. அதற்குள் பாட சாலையிலிருந்து இரண்டு மூன்று வீடு தள்ளி விழுந்து போகிற நிலையில் இருந்த தனித்த கொட்டில் வீட்டில் ஒரு தனிப் பெண் குரலின் அலறல் பலமாகக் கேட்டது. அதை உற்றுக்கேட்ட ஜெயம்.

"முடிஞ்சு போச்சு... பிரச்சினை முடிஞ்சு போச்சு... தம்பி போயிட்டான். இனிமேல் எந்தக் கேள்விக்கும் எனக்கு மறுமொழி தேவையில்லை ரீச்சர்..."

என்று சொல்லிக்கொண்டே பயித்தியக்காரி போல அந்தக் கொட்டில் வீட்டை நோக்கி ஓடினாள். பெருமூச்சு ஒன்று இதயத்தின் ஆழத்திலிருந்து வேதனையுடன் வெளியேற நான் அவளையே பார்த்துக்கொண்டு மௌனமாக - சிலையாக நின்றுவிட்டேன்.

பஸ் இன்னும் ஓடிக்கொண்டே இருந்தது. தூரத்தில் தெரிந்த கூட்டம் ஒன்று என் மனதைக் கவர நான் சிந்தனைச் சுழலின் பிடியில் இருந்து விடுபட்டு அதை உற்று நோக்கினேன். ஓ... இந்தியாவிலிருந்து வந்திருக்கும் சர்வோதய சகோதரிகள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். பஸ் கூட்டத்தைத் தாண்டிச் சென்ற போது அவர்களின் பேச்சு என் காதுகளிலும் விழுந்தது.

"அனைத்து உயிர்களும் ஒன்றேதான். ஜாதி, மத, இன வேற்றுமை இல்லாமல் அனைவரையும் அன்புடன் நேசிப்போம். எமது அன்பின் சக்தியால் உலகினையே ஆள்வோம்."

இந்தப் பேச்சைக் கேட்டு மக்கள் கூட்டம் பலத்த ஆரவாரம் செய்து கைகொட்டி ஆர்ப்பரிக்கிறது. அப்படி இருந்த சிறுமி ஜெயத்தை இப்படி ஆக்கிவிட்ட அதே சமுதாயந்தான் வெறும் வாய்ச்சொல்லை ஆதரித்து இப்படி ஆரவாரம் செய்கிறது.

பஸ்ஸிற்குள் மீண்டும் சிரிப்பொலி! ஓ... 'கொண்டக்ரர்' பிறகும் ஏதோ பகிடி விட்டிருக்கிறார். எனக்கு எல்லாமே போலியாக... வெறுமையாகத் தோன்ற நானும் சிரிக்கிறேன். அது வேதனையும், விரக்தியும், வெறுமையும் கலந்த வேதாந்தச் சிரிப்பு!

(1975 மலைக்குருவி கையெழுத்துச் சஞ்சிகையின் எட்டாவது இதழில் பிரசுரமானது.)

4

# தலைமுறைகள் முரண்படும்போது

திடீரென உதித்த ஒரு சோக உணர்வில் எனக்கே கூடத் தெரியாமல் நெஞ்சில் ஒருமுறை பொங்கி எழுந்த நெருடல் கலந்த குமுறலோடு நான் வாய்விட்டே அழுதேன். அவன் - என் மகன்தான் - எழுதியிருக்கிறான் - அவ்வாறு செய்ய முடியாதாம். தனது முடிவு சரியானதே என்று வாதிடுவதுபோல் அவன் எழுதியுள்ள சில கருத்துக்களில் மீண்டும் என் பார்வை வெறிக்கிறது.

"ஓர் ஆண்மகன் தன் சுய ஊக்கத்தில் சம்பாதித்துத் தன் தாய் சகோதரர்களுக்குக் கொடுப்பது எவ்வளவு நியாயமானதோ, அதேயளவு நியாமானதுதான் அவன் தன் மனைவி கொண்டுவந்த சொத்தில் யாருக்காகவும் எந்த நிலையிலும் கைவைக்கக் கூடாதென்பதும்..."

"உங்களைப் பார்ப்பதும் தங்கையை வாழவைப்பதும் என் கடமை என்று நீங்கள் கருதினால், அதைவிடப் பெரிய கடமையாக எனது மனைவியையும் குழந்தைகளையும் பாதுகாப்பதை நான் கருதுகிறேன்..."

"ஒரு தாய்க்குப் பல பிள்ளைகள் இருக்கலாம். ஆனால் ஒரு மனைவிக்கு ஒரேயொரு கணவன்தானே இருக்கிறான்..."

அவனது ஒவ்வொரு கருத்தும் கண்ணாடியை வைரத்தால் அரிவதுபோல் பிசிறின்றி என் உள்ளத்தை அரிகின்றன. சட்டத்தரணி அல்லவா? அவனுடன் நியாயம் கதைத்து என்னால் எப்படி வென்றுகொள்ள முடியும்? அல்லது அவனது செயல் உலகத்திலேயே நடைபெறாத ஓர் அதீதமான செயல் என்று கூறிக் கோபிக்க முடியுமா? ஆனால் இரண்டு சந்ததிக்கிடையில் நான் அநுபவிக்கின்ற இந்தப் பெரிய முரண்பாடு என்னையல்லவா நடுவில் வைத்துப் பகடைக்காயாக உருட்டி எடுக்கிறது.

பழைய நினைவுகளின் உந்தம் ஒரு மனைச்சள்ளையை என்னிடத்தில் ஏற்படுத்துகிறது.

அப்போது நானும் ஒரு மாமிக்கு மருமகளாக இருந்தேன். என் கணவரும் ஒரு தாய்க்கு மகனாகத்தான் இருந்தார். எங்கள் திருமணத்திற்கும் ஓர் ஆவேசமான வரவேற்பு இருக்கவில்லைத் தான். ஆனால் இதைப்போன்ற அல்லது இதே மாதிரியான ஒரு சலசலப்பு ஏற்பட்டபோதில், சகல பரிமாணங்களையும் ஆராய்ந்து ஏதோ ஒரு மனோதர்மத்தின்படி ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்த என் கணவர் எனக்குச் சொந்தமாயிருந்த நிலபுலன்களையெல்லாம் தன் சகோதரிக்கு முழுதாக எழுதிக் கொடுத்துவிட்டார். அப்போது நான் கேட்டேன்,

"உங்கடை அம்மாவின்ரை சொல்லைக் கேட்டு முன்பின் யோசிக்காமல் இவ்வளவு சொத்தையும் தியாகம் செய்யிறியள்... நாளைக்கு எனக்கு ஒரு இடஞ்சல் வந்தால் அவை என்னைப் பாப்பினமோ...!"

"உனக்கு வாற கஷ்டத்தைப் பாக்க நான் இருக்கிறன் தானே! பிறகேன் அவையை வீணாக் கூப்பிடுறாய்? தகப்பன் இல்லாத பிள்ளை... அவளுக்குக் குடுக்க வேண்டியதைக் குடுத்துக் கலியாணம் செய்துவைக்க வேண்டிது என்ரை கடமை..."

என்று அவர் சொன்னபோது, எதிர் வார்த்தை கதைக்கத் தெரியாத பலவீனத்தில் நான் விட்டுக்கொடுத்து விட்டாலும், தன் மனைவியின் மீதுள்ள அன்பைவிட அவருக்குத் தன் தாயின் மேலுள்ள பாசம் அதிகமாய் இருப்பதால்தான் அவர் அவ்விதம் நடந்துகொண்டார் என்பது எனக்கு ஏதோ ஒரு கோணத்தில் புரியத் தான் செய்தது.

இன்னொரு நாள் ஒருவித மனப் படபடப்புடன் இதைப்பற்றி அவருடன் நான் பேசியபோது,

"நீ ஒத்துக்கொண்டாலென்ன, ஒத்துக்கொள்ளா விட்டாலென்ன ஒரு மனுசனுக்குப் பெண்சாதியிலும் பார்க்கத் தாய் பெரிசுதான். உனக்கு நான் தெய்வம் என்கிற மாதிரி எனக்கு அம்மாதான் தெய்வம்... ஒரு மனுசனுக்குப் பல பெண்சாதிமார் கிடைக்கலாம்... ஆனால் தாய் எப்பவும் ஒண்டுதான்..."

என்று மிக வெளிப்படையாகவே தீர்க்கமாகக் கூறிவிட்டார். அந்த நேரம் அது உண்மைதான் என்று தோன்றியபோது, அந்த உண்மையின் கனம் என்னை வாயடைக்க வைத்துவிட, இதயத்தில் பொங்கி வந்த துயர ஓலத்தை எப்படியோ சடுதியாக விழுங்கிச் சமாளித்துக்கொண்டு, நானும் பெருந்தன்மையுடன்தான் விட்டுக் கொடுத்தேன்.

இது மாத்திரமல்ல - எந்தச் சிறிய விஷயத்திலும்கூட எனக்கும் அவரின் தாய்க்கும் மன பேதங்கள் ஏற்பட்டால் - ஏற்படுவது உலக இயல்புதானே - அவர் எப்போதுமே தன் தாயின் பக்கமே சாய்ந்து

கொள்வார். நான் சொல்வது எவ்வளவு நியாயமானதாக இருந்தபோதிலும் என் எண்ணங்கள் ஏற்றுக் கொள்ளப்படாமலே சிதறிப் போகும்.

"சினிமா பாக்கப் போவமா?"
"கோயிலுக்குப் போவமா இண்டைக்கு?"

என்பது போன்ற என் சிறுசிறு ஆவல்கள்கூடப் பல சந்தர்ப்பங்களில் மூர்த்தண்யத்துடன் மறுக்கப்பட்டுக் கசக்கப்பட்டு விடும். அப்போதெல்லாம் என் உணர்வுகளை எவ்வாறு வெளிப்படுத்துவது என்று தெரியாத மயக்கத்தில் கண்ணீருக்குள்ளேயே எல்லாவற்றையும் கரைத்துவிட்டு மௌனமாய் வாழ்ந்திருக்கிறேன். என் கணவரும் கூடத்தான் 'கடமை' என்ற வைராக்கியத்தில் ஏற்பட்ட கடினமான ஒரு சிந்தையுடன் தன் இயல்புக்கு முற்றிலும் மாறாய் என்னை நடத்துகிறார் என்பது பல சந்தர்ப்பங்களில் எனக்குப் புரிகிறபோது என் கண்ணீரை நானே துடைத்துக்கொண்டு சிரித்துமிருக்கிறேன். ஆனாலும் அப்போதெல்லாம் பலமான ஓர் எதிர்ப்பார்ப்பு இருக்கத்தான் செய்தது. நானும் ஒரு நாள் ஒரு மகனுக்குத் தாயாவேன் என்ற சந்தேகமற்ற நம்பிக்கையும் அதுவரை பொறுமையுடன் நாட்களைக் கழிக்க வேண்டுமென்ற திடமான தீர்மானமுந்தான் என்னை வாழவைத்தன. என் கனவும் பலித்து நானும் ஒரு மகனுக்குத் தாயாகத்தான் செய்தேன்.

என் வயிற்றில் உதித்து, என் நெஞ்சில் உதைத்து, என் மடியில் உறங்கி, என் கைகளில் வளர்ந்த பிள்ளை என்னிடம் ஒட்டிக்கொண்டு உலாவியபோது, அந்த மகிழ்வில் நான் திணறினேன். எந்தச் சிறிய விஷயத்திற்கும் அவன் என்னிடம் ஓடிவந்து ஆலோசனை கேட்கும்போது, என் ஏக்கம் எல்லாம் கரைந்து, அந்தப் பாசத்தில் பலகாலம் தோய்ந்து நான் மகிழ்ந்திருந்தேன். அவனுடைய உடனிருப்பு எனக்கு ஒரு குறையற்றற நிறைவை ஏற்படுத்தியிருந்தது. அவனுக்குப் பின்னர் ஒரு பெண் குழந்தையையும் தந்து, சில வருடங்களில் அவர் கண்மூடியபோது கூட, 'என் மகன் இருக்கிறான்' என்ற வீம்பில்தான் நான் கவலையை மறந்தேன். அவனை வளர்த்து, அறிவூட்டி, அவையத்து முந்தியிருக்கச் செய்வதில் நான் பல பிரச்சினைகளைக் கண்டபோதும், அதை எல்லாம் மூடி என் மன ஆழத்தில் ஒரு நிறைவு இருந்தது. அவன் உடல் கனம் மிகுந்து, முறுக்கேறி, அழகும், வலிமையும் அடைந்திருந்தபோது, ஒருநாள் யாரோ ஒரு பெண்ணை அழைத்து வந்து,

"இவள் என்ரை கேர்ல் பிரண்ட் அம்மா... வெரி நைஸ் கேர்ல்... மீற் கேர்..."

என்று அறிமுகம் செய்து,

"ஐ ஆம் கோயிங் ரு மாறி கெர் அம்மா..." என்று சொன்னபோது, ஒரு செக்கன், இந்தப் பூமியே இயங்காது நின்றுவிட்டது

போல் - ஒலி இன்றி அமைதிப்பட்டதுபோல் - ஒரு பூஜ்ஜியமான உணர்வு என் மன அடித்தளத்தில் உறைந்தது.

அவன் காதலித்து விட்டான் என்பதால் அல்ல...

என்னை ஒரு வார்த்தை கேட்காமல், என் எண்ணத்திற்கு மதிப்புத் தராமல்... இப்படி ஒரு முக்கியமான முடிவைத் திடமாக எடுத்துவிட்டானே என்ற மனப்பதைப்பில் தோன்றிய உணர்ச்சி அது.

அப்போதும் கூட அவனிடம் வாதிடவோ - அன்றி எனது சுயத்திற்கு மீறிய ஒரு கொடுமையாய் அவனையோ அவளையோ வதைக்கவோ என்னால் முடியவில்லை. அந்த நிகழ்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் தராதது போன்ற ஒரு சாதாரண தோரணையில் - விரக்தி கலந்த ஒரு புன்னகையுடன் நான் அவர்களை ஆசீர்வதித்தேன்.

நான் எதிர்பார்க்காத அல்லது முற்றிலும் எதிர்பார்க்காத விதமாகவே அவள் ஒரு பணக்காரியாக இருந்தாள். அவளது குடும்பப் பின்னணி நன்றாகத் தெரிந்த பின்பும்கூடத் தன் தங்கைக்காக அன்பளிப்புப் பணம் ஏதும் அவன் வாங்கித் தருவது சுத்த அபத்தமானது என்றே நான் நினைத்தேன். என் மகனை எந்த விலைக்கும் விற்றுவிடக்கூடாது என்ற பிரக்ஞையுடன் அவர்கள் திருமணத்தில் 'சீதனம்', 'டொனேசன்' என்ற கதைகள் இன்றியே, அதனை நிறைவாகச் செய்து வைத்தேன்.

இப்போது அவனின் தங்கைக்குத் திருமணம் ஆகப்போகும் சமயத்தில் - என்னிடம் எந்தச் சொத்துமே இல்லாத நிலையில் - சீதனம் கொடுக்காவிட்டால் அவளைக் கரைசேர்க்க முடியாது என்ற நிர்ப்பந்தத்தில் - அவன் தாயின் சொல்லை மீறமாட்டான் என்ற ஒரு நம்பிக்கையுடன்தான் அவனுக்கு அதைப்பற்றிக் கடிதம் எழுதியிருந்தேன். அவன் நேரில் வந்து பதில் சொல்லக்கூட முனையவில்லை. கடிதத்திலேயே எழுதிவிட்டான்.

முடியாதாம்!

அவன் இந்த மறுத்தலுக்கு ஆயிரம் காரணங்கள் கூறியபோதிலும், எனக்கு இப்போது தெளிவாகப் புரிகிறது. அவனுக்குத் தாயிடமுள்ள பாசத்தைவிட மனைவியிடம் உள்ள காதல் பெரிதென்று.

பழையதை எல்லாம் நினைத்துக்கொண்டு, எனக்கு நானே சுய இரக்கம் கொள்வதில் என்ன லாபம்? ஒரு கைத்த சிரிப்பு உதட்டில் நெளிய அவனது கடிதத்தை மடித்து உறையில் வைத்துவிட்டு எழுந்து தலையை வாரிக்கொள்கிறேன். அழுத்தி வாரியபின் மேலெழுந்து தெரியும் பட்டை பட்டையான நரை என் வாழ்நாளின் பெரும் பகுதி கழிந்துவிட்டதை உணர்த்துகிறபோது... 'தாய்க்கே முதலிடம் என்று

வாழ்ந்த கணவனையும்' - 'மனைவிக்கே முதலிடம் என்று கருதும் மகனையும் பெற்ற ஒரு வாழ்க்கை' என்று எண்ணிச் சிரித்துக்கொள்கிறேன்.

திடீரென்று எதிர்பாராமல் நெஞ்சில் ஏற்படும் அந்த வலியின் வெம்மையைத் தாங்க முடியாமல் இதயத்தை இறுக்கிப் பிடித்தபடி படுக்கையில் சாய்ந்துகொள்கிறேன். நான் படுக்கையில் தடாலென்று விழுந்த சத்தம் கேட்டுப்போலும் உள்ளே வேலையாக இருந்த என் மகள் ஓடி வருகிறாள்.

என் கையில் இருந்த கடிதத்தையும் என்னையும் மாறிமாறிப் பார்த்த அவளின் முகத்தில் அச்சத்துடன் கூடிய ஒரு கருமை திடீரெனப் பரவுகிறது. அவள் எதுவுமே பேசவில்லை. மகளுக்கு வைக்காமல் தங்கைக்குக் கொடுத்த தியாகத் தந்தையையும், தங்கைக்குத் தராமல் மகளுக்குச் சேர்த்து வைக்கும் அண்ணனையும் கண்டுவிட்டவளல்லவா அவள்?

விரக்தி மிகுந்த ஒரு தெளிவும், துயரம் மிகுந்த ஒரு நிம்மதியும் என் வாழ்க்கையை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து கொண்டிருப்பது, அவளுக்குப் புரியுமோ? புரியாதோ?

(15.04.1979 ஈழநாடு வாரமலரில் பிரசுரமானது.)

# 5

# நம்பிக்கைகள்

நீலவானில் பிரகாசிக்கும் வெள்ளிப் பொட்டுக்களோடு மதியவனும் பவனிவரும் தெளிவான, சோபிதமான ஓர் இரவில், தம்பர் அந்தப் பழைய கோர்க்காலிக்கு மேல் படுத்து நித்திரையாகி விட்டார். நேரம் இரவு ஒன்பது மணியாகிக் கொண்டிருப்பதை வானொலியில் செய்திக்கு முன் கேட்கும் அந்தப் பழக்கப்பட்ட இசை தெரிவிக்க, நிலா வெளிச்சத்தில் அமர்ந்து ஒரு துண்டுக் கயிற்றினால் கையை அளந்து கொண்டிருக்கிறாள் பொன்னம்மா.

அன்று காலையில்தான் பக்கத்துவீட்டு அன்னம்மா சொன்னாள். கையின் ஐந்து விரல்களின் மொத்த நீளத்தை அளந்து ஒரு கயிறுவெட்டி அதன் ஒரு நுனியை முழங்கையின் உட்புற வரையில் பிடித்து, மறுநுனியை உள்ளங்கைப் பக்கம் நீட்ட, அது நடுவிரலின் அடிவரைக்கு மேலே வந்தால் அவர்கள் பணக்காரராம். கீழே நின்றால் தரித்திரமாம். தான் பணக்காரியா தரித்திரமா என்பதை அறியும் முயற்சியில் அவள் தீவிரமாக ஈடுபட்டிருக்கும்போது, வெளியே படலையடியில் ஒரு சைக்கிள் மணி கேட்டபோதும், அவள் அதை உன்னிப்பாகக் கவனிக்கவில்லை.

சிறிது நேரத்தில் கிசுகிசுவென்று புதிதான ஒரு ஒலி.

கயிற்றுத் துண்டை எறிந்துவிட்டு, விடுவிடென்று உள்ளே போய் போத்தல் விளக்கைத் தூக்கிக்கொண்டு வெளியே வந்தாள் பொன்னம்மா. வந்தவளின் காலடியில் ஒரு பெரிய நண்டு! அதை எதிர்பாராமல் தரிசித்த அதிர்ச்சியில் துணுக்குற்று,

"ஐயோ இஞ்சை வந்து பாருங்கோவன்" என்று கத்திவிட்டாள் உரத்து.

அரை நித்திரையில் ஆழ்ந்திருந்த தம்பரும், குசினிக்குள் தோசை வார்த்துக்கொண்டிருந்த மகள் சரசுவும் 'ஆத்துப்பதைத்து' எழுந்து வெளியில் ஓடி வந்தார்கள். தம்பர் அருகில் வந்து பார்த்துவிட்டு, இமைகளில் சலனமின்றிச் சில விநாடிகள் யோசித்தார். பின்னர்,

"இது விசயம் பிழையாகக் கிடக்கெணை"
என்றார்.

"என்ன?" என்பது போல் விழிகளை உயர்த்தி அவர் முகத்தை உற்றுப் பார்த்தாள் பொன்னம்மா.

"என்னப்பு சொல்லுறியள்?" என்று சரசு கேட்டாள்.

"உது சாதாரணமான நண்டில்லை. மயிர் முளைச்சுக் கிடக்கு... செய்வினை நண்டு போலத்தான் கிடக்கெடி..."

என்று தம்பர் சொல்லி வாய் மூடமுதல்,

"கடவுளே, இதென்ன அநியாயம்... ஒரு சைக்கிள் மணி கேட்டதுதான்... எனக்குத் தெரியுமே இப்பிடி எண்டு... ஆரோ கொணந்து விட்டிட்டுப் போறாங்கள் போலை..."

என்று பொன்னம்மா தலையில் அடித்துக் குழற, சரசு ஓடிப்போய் ஒரு சருவச் சட்டியைக் கொண்டுவந்து நண்டை மூடிவிட்டாள்.

நண்டு சருவச் சட்டியையும் இழுத்துக்கொண்டு அசைய, அது பெரிய சத்தமாகக் கேட்டது.

"இஞ்சை என்ன சந்தடி?" என்று எட்டிப் பார்த்த முன்வீட்டு முத்தருக்கு விஷயத்தை அழுதபடி விளக்கினாள் பொன்னம்மா. முத்தர் எட்டிப் பார்த்துவிட்டு,

"ஓமணணை, இது செய்வினை நண்டுதான்... உங்களை உலைக்கத்தான் வந்திருக்குது... இனி என்ன செய்யிறது... அதைக் கொழுத்திச் சாம்பல் அள்ளிக் கடலிலை கொண்டுபோய்ப் போடுங்கோ..." என்று அநுதாபம் தெரிவித்தார்.

பொன்னம்மா பதினைந்து சிரட்டை குவித்து, மண்ணெய் ஊற்றி, நண்டை உலக்கையால் தட்டிக்கொண்டுபோய் அதன் மேல் தள்ளி நெருப்புக் கொழுத்தும் வரை முத்தரும் நின்று பார்த்துக்கொண்டிருந்தார். இருபது சிரட்டை எரிந்து முடியத்தான் ஒருவாறு தகனம் நிறைவு பெற்றது. உடனேயே சாம்பரை அள்ளிக்கொண்டு கடற்கரைக்குப் போய், கடலில் போட்டுவிட்டு நீராடித் திரும்பி வந்தார் தம்பர். அவர் வீட்டிற்குச் செய்வினை நண்டு வந்த கதை விடியமுதல் ஊர் முழுவதும் கிசுகிசுவென்று பரவிவிட்டது.

நண்டு வந்த நாளில் இருந்து தம்பர் வீட்டில் யாரும் சரியாக உண்பதுமில்லை, உறங்குவதுமில்லை.

யார் ஏவி விட்டானோ?
என்ன சொல்லி ஏவினானோ?

ஒரு வாரம் கழிந்த பின்னர் ஒருநாள் தம்பருக்குச் சாப்பாடு போட்டுக்கொண்டிருந்த பொன்னம்மா சொன்னாள்,

"இவள் பிள்ளை சரசுவுக்குத்தான் ஒரு இடமும் கலியாணம் பொருந்தப்பிடாது எண்டு ஏவினாங்களோ... அவன் குஞ்சனுக்கு எங்களிலை நெடுக எரிசல், பொறாமை..."

"எனக்கு ஒரு ஐமிச்சமாக் கிடக்கெணை... இப்ப இரண்டு நாளா வயித்துக்கை குத்திற மாதிரிக் கிடக்கு. எனக்கு வருத்தம் வரவேணுமெண்டுதான் ஏவினானோ?"

சன்னமான குரலில் தம்பர் முணுமுணுத்தார்.

"உதை ஏன் இரண்டு நாளாய்ச் சொல்லாமல் கொள்ளாமல் மூடி வைச்சனீங்கள்... நான் நினைச்சது சரியாப் போச்சு... உங்களை மடக்கத்தான் விட்டிருக்கிறாங்கள்... நான் இப்பவே போய்ச் சூனியக்காரச் சுப்பரைக் கூட்டி வாறன். அவர் எப்பிடியும் அகத்திப்போடுவர்..."

பொன்னம்மா புறப்பட்டு விட்டாள்...

சுப்பர் கதை எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, அது செய்வினை நண்டுதான் என்றும், தம்பருக்கு வந்திருக்கும் குத்து செய்வினைக் குத்துத்தான் என்றும் உறுதிப்படுத்திய பின்னர், தான் இந்தச் செய்வினையைச் செய்தவனுக்கே திருப்பி ஏவித்தாறன் என்று சவால்விட்ட போதுதான் தம்பருக்கும் பொன்னம்மாவுக்கும் சற்று நிம்மதியாக இருந்தது.

"அண்ணை, நீங்கள் கேட்டதைத் தாறம்... எப்பிடியும் இதை அகத்தி விட்டிடுங்கோ..."

என்று பொன்னம்மா கெஞ்சியதனால் பரிவு கொண்ட சுப்பர்,

"பிள்ளை, வேறை இடமெண்டால் நான் கனக்கக் கேட்பன், உங்களிட்டை நான் கேட்க முடியுமே... ஒரு கோழி, ஒரு ஆடு, நூற்றியொரு எலுமிச்சம்பழம்... பூசினிக்காய்... இவ்வளவோடை நூற்றியொரு ரூபாய் காசும் தாருங்கோ... நான் எல்லாம் கச்சிதமா முடிச்சுத்தாறன்..."

என்று கூறியருளினார். தங்களை அறிந்தவர் என்பதால் மட்டுமே இவ்வளவு குறைவான பொருட்களைக் கேட்கிறார் என்பதில் முழு நம்பிக்கை கொண்ட தம்பர் குடும்பம், செய்வினை அகன்றுவிட்டால்

போதும் என்ற ஆதங்கத்தில் பொன்னம்மாவின் சங்கிலியை அடகுவைத்துச் சுப்பர் கேட்ட பலிப்பொருட்களை வாங்கியது.

அமாவாசை இருள் அந்த ஊர் முழுவதையும் கவ்விக்கொண்டிருந்த ஓர் இரவில், செய்வினையைச் செய்தவனுக்கே திருப்புவதற்காகச் சுப்பர் சகல ஏற்பாடுகளையும் கவனித்துக் கொண்டிருக்கும்போது, தம்பருக்குக் குத்து வழமையைவிட அதிகமாக இருந்தது. அவர் படுக்கையை விட்டு எழும்பவே முடியாமல் தவித்துக்கொண்டிருந்தபோதும், கண்கள் இடையிடையே சுப்பரின் செயல்களையே மொய்த்து மொய்த்து மீண்டன. முற்றத்தில் வேடிக்கை பார்க்கக் கூடியிருந்த ஊர்ப் பையன்கள் மத்தியில் கோழி, ஆடு, எலுமிச்சம்பழம், பூசினிக்காய் எல்லாம் வெட்டப்பட்டன. தாங்கமுடியாத வேதனையுடனும் எழுந்து வந்து வெட்டப்பட்ட பூசினிக்காய்க்குக் குங்குமம் பூசி ஊரின் நடுவில் உள்ள புளியடிச் சந்தியில் போட்டுவிட்டு வந்தார் தம்பர். வெட்டப்பட்ட கோழி, ஆடு ஆகியவற்றின் இறைச்சிகளைத் தனது சைக்கிளில் தயாராக இருந்த பெட்டியில் ஏற்றிவிட்டுக் காசு நூற்றியொரு ரூபாவையும் வாங்கி மடியில் சொருகிக்கொண்ட சுப்பர் விடைபெறும்போது சொன்னார்,

"தம்பரண்ணை, இனிப் பயப்பிடாதேங்கோ, நாளைக் காலமையோடை உங்கடை குத்துவலி எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போயிடும். சும்மா இல்லை... அந்தச் செய்வினையை நான் தலைமயிரிலையும் தீட்டுச் சீலையிலும் ஏவிவிட்டிருக்கிறன்... இது போய் செய்தவனைப் பிடிக்கும்... இருந்து பாருங்கோ நீங்கள்..."

சுப்பர் தந்த உறுதிமொழி தம்பர் வீட்டுக்காரரை இந்த இரண்டு வாரத்தில் முதல் முறையாக நிம்மதியாக உறங்க வைத்தது.

மறுநாள் அதிகாலை கண்விழித்தபோது தம்பருக்கு உண்மையில் குத்து மாறித்தான் விட்டது. அவர் எழுந்து வழக்கம்போல வேப்பங்குச்சியால் பல்லைத் தீட்டிக்கொண்டு, மாட்டுக் கொட்டில் பக்கம் போகும்போது, குசினிக்குள் தேநீர் போட்டுக்கொண்டிருந்த சரசு கேட்டாள்,

"எப்பிடி அப்பு... குத்துச் சுகமே?"

"ஓமடி மோனை... சுப்பன் கெட்டிக்காரன்தான். எவ்வளவு சிலவழிச்சாலும் காரியமில்லை. செய்வினையைத் திருப்பிப் போட்டான். ராத்திரி நான் பட்டபாட்டுக்கு இப்ப குத்து என்ன மாதிரிப் போனதெண்டு தெரியேல்லை..."

என்று கூறி வயிற்றை அமர்த்திப் பார்த்துக்கொண்டார் தம்பர்.

"அப்பு... வேப்ப மரத்தடி வைரவா... உனக்கு நான் வைச்ச நேத்திக்கடனுக்கு நீ காப்பாத்திப்போட்டாய்..."

என்று வைரவருக்கு நன்றி தெரிவித்தாள் முற்றம் கூட்டிக்கொண்டிருந்த பொன்னம்மா.

இரண்டு நாட்கள் இப்படியே நிம்மதியான மூச்சுக்களுடன் கழிந்து போக மூன்றாம் நாள் அதிகாலை திடீரென்று நித்திரையில் எழும்பிவிட்ட தம்பர் துடித்துப் பதைத்துக் குழறினார்.

"சரசு... எடியேய்... இஞ்சை ஓடிவா...! என்னாலை தாங்க முடியேல்லை... ஐயோ ஆரோ ஆணியாலை அறையிற மாதிரிக்கிடக்கு..."

வலதுபக்க அடிவயிற்றை அமர்த்திக்கொண்டு தம்பர் வெயிலில் விட்ட மண்புழுப்போல் துடித்தார். முதல்நாள்தான் கொழும்பில் இருந்து பயணத்தால் வந்திருந்த தம்பரின் மகன் உடனே போய்க் கார் பிடித்துக்கொண்டு வந்து, தம்பரை ஏற்றிக்கொண்டு பெரியாஸ்பத்திரிக்கு விரைந்தான்.

தம்பரைப் பரிசோதித்த டாக்டர் கேட்டார்,

"அப்பு... உங்களுக்கு எத்தனை நாளாய் இந்தக் குத்து இருக்கு?"

தம்பர் வாய் திறக்கமுதல், பக்கத்தில் நின்ற பொன்னம்மா செய்வினை நண்டு வந்தது முதல் சுப்பர் செய்வினை அகற்றிக் குத்து மாறியது வரை ஒன்றும்விடாமல் சொல்லி முடித்தாள்.

அவ்வளவையும் பொறுமையுடன் கேட்ட வைத்தியர்,

"இது அப்பெண்டிக்ஸ்... வெடிக்கிற நிலைக்கு வந்திருக்கு எண்டு நான் சந்தேகப்படுகிறன். குத்துத் தொடங்கின உடனை வந்திருந்தால் எத்தனையோ பிரச்சினைகளைச் சுகமாத் தீர்த்திருக்கலாம். இரண்டு கிழமை அநியாயம் செய்துபோட்டுக் கடைசி நேரத்திலை வந்திருக்கிறியள்... ஆல் ரைட்... உடனே இவரை ஒப்பரேஷன் தியேட்டருக்குக் கொண்டுபோங்கோ..."

என்று கூறிவிட்டுத் தானும் அறுவைச் சிகிச்சைக்குத் தயாராவதற்காக விரைந்து கொண்டிருக்கிறார்.

சுப்பர் அகற்றிய செய்வினை செய்தவனைப் பிடிக்காமல் மீண்டும் தம்பரை இப்படி ஆட்டி வைப்பதன் காரணம் என்னவென்று ஒன்றும் புரியாமல் கண்களில் நீர் பிரவாகம் எடுத்துப் பாய, வெளியே அமர்ந்து ஒப்பாரி வைக்கிறாள் பொன்னம்மா!

(1980 மே-ஜூன் மல்லிகையில் பிரசுரமானது.)

---

6

# நிமிரும் ஊனங்கள்

அன்று!

பல்கலைக் கழகத்தில் செலவழித்த மூன்று வருட வேலைகளின் அறுவடை நிர்ணயமாகப் போகும் தினம். இரவு வெகு நேரம் கண்விழித்துப் படித்துவிட்டுப் படுத்தாலும் விடிய நாலு மணிக்கே எல்லாரும் எழுந்து நீராடிக் குறிஞ்சிக் குமரன் கோயிலுக்குப் புறப்பட்டுவிட்டோம்.

நளா, மாலு, ரூப்ஸ், கிருப்ஸ், உதச்சி நான்...

நளாயினி, மாலதி, சிவரூபி, கிருபாதேவி, உதயராணி ஆகிய அழகிய தமிழ்ப் பெயர்களை நாங்கள் இப்படித்தான் குறுக்கி வைத்திருப்போம். அதுதான் இங்கு நாகரிகம்!

எல்லாரும் பசிய அந்த மலைச்சாரலில் ஏறிக்கொண்டிருந்தபோது... மெல்லிய தலையிடியும் களைப்பும் எனக்கு இருந்தது. நான் அதைப் பெரிதுபடுத்திக்கொள்ளவில்லை. கண்ணுக்கெட்டிய தூரம் வரை பசுமையின் விஸ்தாரம் நிறைந்திருப்பதுபோல், அந்தப் பாலமுருகனின் அருளும் அந்தப் பிராந்தியம் முழுவதும் எதிரொலிப்பதுபோல ஆலயமணி ஓசை கேட்கிறது. செல்வமலர் மட்டும் எங்களுடன் வரவில்லை.

"ஏனடி, செல்வமலர் கோயிலுக்கு வரேல்லை" என்னைப் பார்த்துத்தான் நளா கேட்கிறாள். ஆயினும் நான் பதில் சொல்ல முதலே மாலு முந்திக்கொள்கிறாள்.

"கடைசி நேரத்திலை நல்லா 'கிராம்' பண்ணுறாள் போல இருக்கு" படித்தல் என்பது 'கிராம்' பண்ணுதல் என்றுதான் இங்கே நக்கலாகச் சொல்லப்படும்.

"யாருக்குத் தெரியும்? டெஸ்ட் ஹோலுக்கு நேரத்தோடை போனால் அங்கை யாரோடையும் 'சல்' அடிக்கலாம். இஞ்சை வந்து என்ன பிரயோசனம்?"

இது ரூப்ஸின் ஏகத்தாளமான குரல்.

'சல் அடித்தல்' என்றால் அவசியமின்றி ஆண்களுடன் கதைத்தல் என்று இங்கே பொருள்படும்.

"யாழ்ப்பாணத்திலை எந்தக் கோயிலுக்கும் போகத் தயங்கிறதாலை... இங்கை வந்து வட்டி குட்டி எல்லாம் சேத்துக் கும்பிடுறவள்... இண்டைக்கு வராமல் விட்டது அதிசயமாய் இருக்கு..."

இது கிருப்ஸின் அபிப்பிராயம். நாங்கள் யாரும் செல்வமலருடன் சரளமாகப் பழகுவதில்லையாயினும், எங்கள் வீட்டுக்குப் பின்னால் வசிக்கும் சீவல் தொழிலாளியின் மகள் என்ற முறையில்... இவர்கள் எல்லாரையும்விட எனக்குச் செல்வமலரிடம் அதிக அநுதாபம் உண்டு. அதனால் நான் எந்தவிதமான கருத்துரையும் வழங்கவில்லை. என் தலையிடி இப்போது சற்று அதிகரித்திருப்பது போல் தோன்றுகிறது.

இறைவனுடைய சாந்நித்தியத்தில் நின்று,

"சோதனை நன்றாகச் செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்து விட்டுத் திரும்பி வரும்போது, கால் தசைகள் எல்லாம் விண்விண் என்று வலி எடுக்கின்றன. அதைப்பற்றி உதச்சியிடம் சொல்கிறேன்.

"விடிய வெள்ளென மலையிலை ஏறினது... நித்திரை முழிச்சு றெஸ்ற் இல்லாமல் எக்சேட் பண்ணினது... அதுதானாக்கும்... அது சரியாப் போயிடும். டோன்ற் வொறி...'

என்று மிக இலேசாக எந்தவித சிரத்தையும் எடுத்துக்கொள்ளாமல் பதில் தருகிறாள் அவள். தொடர்ந்து அவர்கள் சோதனை பற்றியே கதைத்துக்கொண்டு வருகிறார்கள். பல்கலைக் கழக வாழ்க்கையே இப்படித்தான். ஒருவருடைய வருத்தம்பற்றி இன்னொருவர் அக்கறையுடன் விசாரிக்கக்கூட நேரமில்லாத வாழ்க்கை!

காலை உணவின் பின்னர், எனது அறையில் இருந்து பரீட்சைக்கான இறுதி ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்தபோது, தலையிடி கால் வலியைவிட மனதில் ஒரு பதைப்பும் விறைப்பான உணர்வும்கூட இருந்தது. சரியாக 8.30 மணிக்கு எங்கள் கூட்டம் சோதனைக்காகப் புறப்பட்டபோது, நானும் அவர்களுடன் சேர்ந்து கொண்டேன். எங்களின் பின்னால் சற்றுத் தொலைவில் செல்வமலர் தனியாக வந்துகொண்டிருந்தாள். விடுதியைத் தாண்டியதும் எதேச்சை யாகத் திரும்பிப் பார்த்தேன். அப்போதும் அவள் வந்துகொண்டிருந்தாள்.

விடுதியைத் தாண்டி இருநூறு யார் தூரம் வரையில் வந்திருப்போம். அசோகா மரங்கள் நிறைந்திருந்த அந்த வளைவைத் தாண்டியபோது, திடீரென என் கண்கள் இருட்டி, உடல் பூப்போல் லேசாகி, வானத்தைப் பிய்த்துக்கொண்டு மேலே செல்வது போன்றதொரு உணர்வு! அதன் பின்னர் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை.

நான் விழிமடல்களைத் திறக்க மிகவும் முயன்று திறந்தபோது, செல்வமலர்தான் என் கண்ணில் தெரிந்தாள். பல நினைவுகள் சித்த வெளியில் முகிழ்த்தாலும், வார்த்தைகள் நெஞ்சில் அடைத்து உருவிழந்து, அமிழ்ந்து போகின்றன. வெளியே வான மத்தளத்தின் இடி ஓசையுடன் மழை விளாசிக் கொண்டிருப்பதைச் சாரளத்தின் ஊடாகப் பார்த்தபோதுதான் நான் படுத்திருக்குமிடம் பல்கலைக்கழக மாணவருக்கான 'ஹெல்த் சென்ரர்' என்ற உண்மை உறைக்கிறது. திடீரென உசுப்பி விட்டது போன்ற அந்த விழிப்பில்,

"இன்று பைனல் எச்சாமினேசன்"
என்பதும் நினைவுக்கு வர,

"செல்வமலர், நீ டெஸ்டுக்குப் போகேல்லையா?"
என்று கேட்கிறேன்.

"போகப் போறன். உ.... உ.... ங்களுக்குக் கொன்சியஸ்னஸ் வரட்டும் எண்டு நிண்டனான். இ... இனிப் போக... லாம் தானே..."

"நேரம் என்ன?"

"9.05 ஆகுது. 9.30 வரைக்கும் போ... போ... கிறவையை விடுவினம் தானே. நான் போயிட்டு ல... ல... லஞ்ச் டைம் வாறன்... ப... பயப்பிடாமல் படுத்திருங்கோ..."

என்று கூறி என்னைத் தன் கண்களாலே அன்புடன் தடவிவிட்டுக் குடையை விரித்துப் பிடித்துக்கொண்டு மழையில் இறங்கி வேகமாக நடக்கிறாள் செல்வமலர். தான் ஒரு சீவல் தொழிலாளியின் மகள்... தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவள் என்ற தாழ்வுணர்ச்சி செல்வமலருக்கு எப்போதும் உண்டு. அந்தப் பிறழ்வான மனோநிலையாலோ என்னவோ எப்போதும் தத்தித் தத்தியே பேசுவாள்.

"வேகமாக நடந்தால் கலைப்பீடத்தின் சோதனை மண்டபத்திற்குப் பத்து நிமிடங்களில் போய்விடலாம். எப்பிடியும் 9.20க்கு முன் செல்வமலர் போய்விடுவாள்..."

சோதனை எழுத அநுமதிக்கப்படுவாள் - என்பது அநேகமாக நிச்சயமாக இருந்தாலும், என்னைக் கவனித்துக்கொண்ட செயலினால்

விடை எழுதும் நேரத்தில் இருபது நிமிடங்களைத் தியாகம் செய்திருக்கிறாள் என்ற நினைவு, என்னை உணர்ச்சி மயமாக்குகிறது.

ஏதோ 'செடேற்றிவ்' தந்திருக்கிறார்கள் போலும். உறக்கம் கண்களை இறுக்கமாக அழுத்தும்போதும் உள்ளம் பழைய நினைவுகளை அசைபோடுகிறது.

என் கண்கள் இருட்டி, உடல் பூப்போல இலேசாகி, வானத்தைப் பிய்த்துக்கொண்டு மேலே செல்வதுபோன்றதொரு உணர்வு ஏற்பட்டதே! அப்போது நான் மயக்கமாகி விழுந்துவிட்டேன் போலிருக்கிறது. எனது நல்ல, நெருங்கிய சிநேகிதிகள் என்று நான் நம்பிக்கொண்டிருந்த மாலு, நளா எல்லாம் என்னுடன் வந்து கொண்டிருந்தார்களே! அவர்கள் எல்லாம் என்ன செய்தார்கள்? சோதனைக்கு இன்னும் முப்பது நிமிடங்களே இருக்கும்போது... அவர்கள் என்னைக் கவனித்து இங்கே கொண்டு வந்திருக்க முடியாது என்பதும் நியாயந்தானே! ஆனால்... செல்வமலர்...

தனது நலனைப்பற்றி அதிகம் கவலைப்படாமல் என்னை இங்கே கொண்டுவந்து சேர்த்ததுமன்றி, நான் பிரக்ஞை அடையும்வரை பார்த்திருந்து செல்கிறாள்...

செல்வமலர்...

சிறு வயதிலிருந்தே நானும் செல்வமலரும் ஒரே வகுப்பில்தான் படித்து வந்தோம். அவளுக்கு என்னிடம் ஆழ்ந்த வாத்சல்யம் உண்டு என்பது எனக்குத் தெரியும். ஆனால் நான் அவளுடன் கதைத்து உறவாடுவதையோ அல்லது எதையும் கொடுத்து வாங்குவதையோ அப்பா எப்போதுமே விரும்புவதில்லை.

"உவள் செல்வமலரோடை உனக்கென்ன கொண்டாட்டம்? நீ இப்பிடிப் புழங்கினால்... நாளைக்கு வீட்டுக்கையும் வந்து பந்தியிலை குந்திச் சாப்பிட நிப்பினம்... உனக்குத்தான் பெரியதம்பிப் பிரக்கிராசியாற்றை மேள் நளாயினி இருக்கிறாளே... அவளோடை போய் வாவன்..."

இப்படியான அறிவுறுத்தல்களும் கொக்கரிப்புகளும் நாள்தோறும் வரும். அப்பாவின் நச்சரிப்புத் தாங்காமலே நான் அவளுடன் பேசாதிருப்பேன். இத்தனைக்கும் அப்பாதான் எங்கள் ஊரின் கிராமோதய சபைத் தலைவர். அதற்கும் இதற்கும் சம்பந்தம் என்ன? அப்பாவுடன் நியாய அநியாயம் பேச எனக்கு என்ன நியாயம் இருக்கிறது? பல்கலைக் கழகத்தில்கூட நளா, மாலு இவர்களுக் கெல்லாம் அவளோடு பழக ஒரு அருவருப்பு. இது போன்ற பின்னணிகளால் நானும் என் சுயத்திற்கு மீறிய ஒரு கொடுமையாய் அவளைப் புறக்கணித்து வந்திருக்கிறேன்.

பன்னிரண்டு மணிக்குச் சோதனை முடிந்தவுடன் விடுதிக்குச் சாப்பிடக் கூடப் போகாமல் 'ஹெல்த் சென்ரரை' நோக்கி ஓடோடி வரும் செல்வமலரை என் விழிச் சிமிழின் நீர்த்திவலைகளே வரவேற்கின்றன. அவள் கையைப் பற்றிக்கொண்டு, வாஞ்சையுடனும், உள நெகிழ்வுடனும் தடவுகிறேன். அவள் துணுக்குற்றுவிட்டாள் போலும்! உணர்ச்சி மயமாகித் தடுமாறிய நிஷ்கபடமான குரலில் அவள் சொல்கிறாள்,

"உங்களோடை வ... வந்த எல்லாரும் தாங்கள் டெஸ்டுக்குப் போக வேணுமெண்டு அவசரப்பட்டினம். எ... எனக்கு உங்களை விட்டிட்டுப் போக ம... மனம் வரேல்லை..."

என் கண்கள் குளமாகி நீர் கரைகட்டி நிற்கிறது.

"செல்வமலர்! உன்னுடைய தோல் கறுப்பாயிருந்தாலும்... உள்ளம் வெள்ளையாய் இருக்கடி! பேச்சிலை ஊனம் இருந்தாலும் செயலிலை பெருந்தன்மை இருக்கேடி! ஆனால்... நாங்கள்... பல்கலைக் கழகம் வரை படிக்கும் அறிவு இருந்தும்கூட ஊன மனப்பான்மையை விட்டுவிட முடியாமல் சுத்திறமேடி!"

சொல்ல நினைத்த வார்த்தைகள் எதுவும் வெளியில் வராமலே, தொண்டைக் குழியில் அமிழ்ந்து இறந்துபோக, நான் அவளின் கையைப் பிடித்தபடி விம்முகிறேன். என் மன உளைச்சலை அறியாமல் நான் சோதனைக்குப் போக முடியாமற் போனதையிட்டுக் கவலைப்படுவதாக எண்ணிக்கொண்டு அவள் என்னைத் தேற்றுகிறாள்.

"இன்னும் மூண்டு மாதத்திலை றிப்பீற் டெஸ்ட் வரும்போது எடுத்துப் பாஸ் பண்ணலாந்தானே! அதுக்கேன் கவலைப்படுறியள்?"

அறிவிலே ஊனம் இல்லாவிட்டால் சோதனை எப்போதாவது ஒருநாள் சித்தியடைந்து விடலாம். அது ஒன்றும் பிரச்சினை இல்லை. ஆனால் மன உணர்வில் இருந்த ஒரு பெரிய ஊனம் இன்றுடன் தீர்ந்துவிட்டதே!

செல்வமலர் தன் கையினால் கரைத்துத் தரும் 'நெஸ்டோமோல்ட்' என்னை அமைதியாக உறங்க வைக்கிறது.

(08.02.1981 ஈழநாடு வாரமலரில் பிரசுரமானது.)

# 7

# அர்த்தமற்ற ஒரு வாழ்வு அர்த்தமுள்ளதாகிறது!

உயிருக்காகத் தானே உணவு! உணவுக்காக வேலை! நாலு பேர் பார்க்குமிடத்திற்கு வேலைக்கு வரவேண்டி இருப்பதற்காய் ஏதோ சில அலங்காரங்கள். அலங்காரம் செய்து கொள்கிறாள் என்பதனால் நயீமாவுக்கு வாழ்க்கை மிகவும் இனிப்பாயிருக்கிறது என்று யாரும் எண்ணிவிட முடியாது. பிடிக்கிறது என்பதனால்தான் எல்லாரும் வாழ்கிறார்களா? ஏதோ வாழ வேண்டுமே என்பதற்காகவும் பலர் வாழத்தான் செய்கிறார்கள்.

ஓடும் குதிரைக்கு முன்னால் 'கரட்' கட்டித் தொங்கவிடும் கதைபோல வாழ்க்கைப் பாதையின் தொலைவில் ஏதோ ஓர் எதிர்பார்ப்பு இருந்தால்தான் வாழலாம் என்றால்... நிச்சயம் அவள் அதற்கு ஒரு சவால்தானே! வாழ்வில் எந்தவிதமான எதிர்பார்ப்புக்களும் இன்றியே பதினைந்து நீண்ட வருடங்களை வாழ்ந்து முடித்திருக்கிறாள் அவள். ஒரு பெண்ணின் வாழ்க்கையில் ஓர் ஆணின் துணையைத், தொடர்பை ஏன் நினைவைக்கூட அகற்றிவிட்டுச் சமனற்ற தெளிந்த மனதுடன் வாழ்ந்துவிட முடியும் என்பதற்கு அவள் ஓர் அபூர்வ உதாரணம். அப்படி வாழ்வதே ஒரு வகையில் அவளுக்குச் சுலபமாகக்கூட இருந்தது. துயரம் தோய்ந்த நிறைவும், துன்பம் கலந்த தெளிவும், விரக்தி சேர்ந்த மகிழ்வும், மௌனம் செறிந்த அமைதியும் கொண்ட இந்த வாழ்க்கை அவளுக்கு ஓர் ஆசீர்வாதமா? அல்லது தண்டனையா? எப்படியும் இருக்கலாம். அவள் அதைப் பற்றி நினைத்துப் பார்ப்பதில்லை. நினைத்துப் பார்ப்பதால் புதிதாக என்ன வந்துவிடப்போகிறது?

பிறந்தநாள் வாழ்த்து முடிந்து ஒலிக்கும் இசை வானொலியில் கேட்கிறது. நேரம் ஏழு பதினைந்து. நிலைக்கண்ணாடியின் முன் நின்று தலையைச் சீவும்போது, பக்கவாட்டில் பிரிக்கப்பட்ட உச்சியின் அருகில் திட்டுத்திட்டாய் தோன்றிய நரைகள்... அவள் இளமை ஒரு முடிவுக்கு வந்துகொண்டிருப்பதை நினைவுபடுத்துகின்றன. 'பிளவுசின்' கீழே மெதுவாக எட்டிப் பார்க்கும் வயிற்று மடிப்புத் தசை அவள் உடலின் வனப்பில் முதிர்வு ஏற்படுவதை அறிமுகம் செய்கிறது. முகத்தின் பிரபையில் மட்டும் முப்பத்தேழு வருட அனுபவம் தென்படவில்லை.

பக்கத்து அறையின் சுலைஹாவை மற்றப் பெண்கள் கேலி செய்வதும், சிரிப்பதும், அவள் சிணுங்குவதும் ஹாஸ்டல் பெரிய அமர்க்களப்படுகிறது. இஸ்லாமியப் பண்பைப் பற்றிச் சரியாகப் புரிந்துகொள்ளாத அந்தச் சுலைஹா அண்மையில் யாரோ ஒருவனுக்குக் 'கிச்ட்' ஆகி இருக்கிறாள் போலும். நேற்று பஸ்ஸிலே அவள் பக்கத்தில் அந்த அவன் இருந்து, அவள் தோள்களை மெதுவாக அணைத்தபடி காதுக்குள் ஏதோ சொல்ல, சுலைஹா மலர்ந்து சிரித்ததை நயீமா பார்த்தாள். அது அப்படித்தான்! அவன் அப்படித்தான் அர்த்தமின்றி ஏதாவது சொல்வான். அவள் இப்படித்தான் அர்த்தமின்றிச் சிரிப்பாள். ஹாஸ்டலில் பெண்கள் எல்லாம் அவன் பெயரை அடிக்கடி கூறிப் பரிகாசம் செய்வார்கள். இரவில் அவள் நித்திரை செய்த பின்னர், அவன் பெயரைக் கடதாசியில் எழுதிக் கட்டிவிடுவார்கள். காலையில் அவள் எழுந்து 'பாத்றூம்' போகும்போது,

"பாரடி இவள் ராத்திரி முழுதும் அவரைக் கழுத்தில் கட்டிப்பிடித்தபடி நித்திரை செய்திருக்கிறாள். பொல்லாத கள்ளியடி..."

என்று சொல்லி ஒருத்தி சிரிக்க, மற்றைய யாவரும் ஓடிவந்து இவள் கழுத்தைப் பார்க்க, ஹாஸ்டல் அமர்க்களப்படும். அவள் சிணுங்குவாள். அதிலும் ஒரு நிறைவும் மலர்வும் இருக்கும்.

பின்னர்... பின்னர்...

பல்கலைக் கழக வாழ்க்கைக் காலம் இப்படியே கனவுகள் நிறைந்ததாய் மறைந்துபோக, அவன் நல்ல உத்தியோகம் கிடைத்து அவளைப் பிரிந்துபோகும் காலம் தொடர, கல்யாணப் பிரச்சினை வரும்போது, சீதனச் சந்தையிலே பல சரக்குகள் போட்டிக்கு வரும்! அந்த ஏல விற்பனையில், பல லட்சம் ரூபாய்களுடன் வரும் முன்பின் தெரியாத ஒரு பணக்காரி வெற்றி பெற்றுவிடுவாள்! தன் குடும்பத்தின் - தன் தங்கைகளின் நல் வாழ்விற்காய், காதல் தியாகம் என்ற போர்வையில் மறைந்துகொண்டு அவன் அந்தப் பணக்காரியுடன் இணைந்து கொள்வான். போகும்போது வேண்டுமானால்... நீ உனக்குப் பொருத்தமாய் - பொருத்தமாய் என்று குறிப்பிடுவது அந்தஸ்துப் பொருத்தம் - பணப் பொருத்தம் போன்றவற்றை - ஒருவரை மணந்து சந்தோஷமாய் வாழவேண்டும் என்று வாழ்த்திவிட்டுப் போவான். அதன் பின்னர்... அவள்...

சிந்தனைச் சிறகுகளை மிக வேகமாகத் தட்டிக் கொண்டிருந்த நயீமா... "நேரம் சரியாக ஏழு மணி முப்பது நிமிடம்" என்ற வானொலி அறிவிப்பாளரின் ஒலியைத் தொடர்ந்து... விரைவாகத் தன் அலுவல்களை முடித்துக்கொண்டு அந்தப் பெண்கள் ஹாஸ்டலை விட்டுப் புறப்படுகிறாள். இனி பஸ் பிடித்து, அதற்குள் நெரிந்து முறிந்து. பல ஆண்கள் வேண்டுமென்றே தேகத்தில் உரசுவதையும் வெளிக்காட்ட முடியாத வெறுப்புடன் சகித்துக்கொண்டு, ஜன நெரிசலின் அந்தத்

துர்வாடையையும் தாங்கிக்கொண்டு, தலையில் போட்ட சேலையை இழுத்து மூடிக்கொண்டு, கல்லூரி வாசலில் இறங்க எட்டு மணியாகிவிடும்.

மார்கழி விடுமுறைக்குப்பின் அன்று கல்லூரி திறக்கப்படும் தினம். பழைய அதிபர் ஓய்வுபெற்றுப் போனபின்னர் புதிதாக யார் வந்திருக்கிறார்களோ, புது மனிதர் 'ஷாப்'பாக எட்டு மணிக்கு 'ரெட் லைன்' அடிக்கும் மனிதராகவும் இருக்கலாம் என்று நினைவுகள் ஓட அவள் விரைந்தபோது, அங்கே அன்வர் மாற்றலாகி அவளுக்கு அதிகாரியாய் வரக்கூடும் என்ற எதிர்பார்ப்புக் கொஞ்சம்கூட அவளுக்கு இருந்திருக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் அவளுடைய எதிர்பார்ப்பிற்கு மாறாக ஒன்றுமே நடவாதா என்ன? ஒன்றுமே நடக்கக்கூடாதா என்ன?

"பிரின்சிப்பல் கூப்பிடுகிறார் மிஸ்"

என்று பியூன் வந்து சொன்னபோது, துடிக்கும் இதயத்தை அழுத்திப் பிடித்துக்கொண்டுதான் அவள் போனாள். அங்கே அன்வரை - தன்னுடைய அன்வரை - இருபத்திரண்டு வயது வாலிபனாய் அவள் மனதில் இருந்த அன்வரைச் சற்றே மாறுபட்ட முதிர்ந்த தோற்றத்தில் கண்டபோது, ஒரு விநாடி அவள் இதயம் துடிக்க மறந்துதான் போய்விட்டது. 'அன்வர்' என்பது அவளுக்கு மிகவும் பிடித்தமாயிருந்த பெயர்தான். அந்த முகம் - சந்திரன் போன்ற பிரகாசமான அந்த முகம் - அவள் பார்த்துக்கொண்டே இருக்க விரும்பிய முகம்தான். ஆனால் இப்போது... அன்வரை மீண்டும் சந்திக்காமலே இருக்க விரும்பிய ஒரு காலகட்டத்தில்... இங்கே அவளுக்கு முன்னால் நிர்த்தாட்சண்யமாக அவன் அமர்ந்திருக்கிறான்.

"மிஸ்! கொலீஜ் இலை, வழமையாக டைம் ரேபிள் வேலைகள் செய்வதில் நீங்கதான் பழக்கப்பட்ட திறமைசாலின்னு வைஸ்பிரின்சிப்பல் சொல்றார். எனக்குங்கூட உங்கடை உதவி தேவையாயிருக்கு. கான் யூ பிளீஸ் ஹெல்ப் மீ?"

என்று அவன் கேட்கும்போது, அதில் ஒரு அதிபருக்கு இருக்க வேண்டிய கம்பீரம் எல்லாம் ஒடுங்கி அவளிடம் கையேந்திப் பிச்சை கேட்பது போலத் தொனிக்கிறது, அவன் குரல். அவள் நிமிர்ந்து அவனை இப்போதுதான் முதல் முறையாகப் பார்க்கிறாள். இரண்டு நிமிடங்கள் அங்கே மௌனம் நிலவுகிறது.

அந்த மௌன விநாடிகளில்.....

பதினைந்து வருடங்களுக்கு முன் அன்வரை எண்ணி அவள் உள்ளம் எப்படித் தவித்ததோ, அதே தவிப்பு இதய அடி அரங்கில் தோன்றிவிடுமோ என்ற பதைப்பில்.... அவளது சிவந்த கண்களில் நீர்

கரைகட்டி நிற்கிறது! மேலே, தான் ஏதாவது பேசினால், எங்கே அவள் குமுறி அழுதுவிடுவாளோ என்ற ஒரு அச்சத்தில்..... மேலே எதுவும் பேசாமல் அவளை அனுப்பி விடுகிறான் அவன்.

"கான் யூ பிளீஸ் ஹெல்ப் மீ?"

அந்தக் கேள்வி திரும்பத் திரும்ப... திரும்பத் திரும்ப... அவள் இதயத்தில் கேட்கிறது. அது டைம் டேபிளுக்கு மட்டுந்தானா? அல்லது பணக்கார மனைவியை நோயாளியாகப் படுக்கையில் விட்டுவிட்டுப் பத்து வயது நிரம்பிய பெண் குழந்தையுடன் அன்வர் படுகின்ற பிரச்சினைகள்... இன்னொரு துணை அவனுக்கு அவசியம் தேவை என்பதை உணர்த்தியிருக்கும் காலகட்டம்! முன்பு அவனால் நேசிக்கப்பட்டவள் இன்னும் தனி மரமாய்த் தன்னைத்தானே பெரிய தண்டனைக்கு ஆளாக்கிக்கொண்டு வாழும் சூழ்நிலை! அதிலும் நாள்தோறும் இருவரும் முகம் பார்த்துப் பேச வேண்டிய சந்தர்ப்பங்கள் எல்லாம் சேர்ந்து... அவன் எதைத் தன்னிடம் கேட்கக்கூடாது என்று அவள் தினமும் நினைத்துப் பிரார்த்தித்தாளோ அதையே ஒருநாள் அவன் கேட்டு விடுகிறான்.

"நயீமா! உனக்காக இல்லாவிட்டாலும்... எனக்காக... ஒரு தாயின் உதவியையும், ஒத்தாசையையும் எதிர்பார்க்கும் என் குழந்தைக்காக... கான் யூ... பிளீஸ்..."

அவன் வார்த்தைகளை முடிக்கவில்லை, அவள் நிமிர்ந்து அவனைப் பார்க்கிறாள். அந்தப் பார்வையின் தீட்சண்யத்தில் அவன் கண்கள் கூசுகின்றன. முகத்தில் தெளிவும், குரலில் தயக்கமற்ற கம்பீரமும், வார்த்தைகளில் அமைதியான ஆழமும் கொண்டு அவள் சொல்கிறாள்.

"ஒரு காலத்திலே விருப்பமாயிருக்கிறது எப்பவுமே விருப்ப மாயிருக்கும்னு நீங்க நம்பியிருந்தா... உங்களுக்கு என்னோட அநுதாபங்கள். ஒரு பெண்ணின்ரை வாழ்வு உயிரோடை இருக்கிற இரண்டு ஆண்களிட்டை பங்கு போடப்படுறதை எந்த இக்கட்டான நிலையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த நீதி ஆணுக்கும் உண்டு என்று நினைக்கிறவ நான். ஒரு காலத்திலை, உங்களைப் பாக்கிறது பேசுகிறது, பழகிறது எல்லாமே, எனக்குப் பிடிச்சதாய் இருந்தது எங்கிறதுக்காக, நீங்க இன்னொரு பொண்ணுக்குச் சொந்தமாயிட்ட பிறகும், அது எனக்குப் பிடிக்குமெண்டா, நான் நயீமாவா இருக்க முடியாது. எனக்குன்னு ஒரு சுய கௌரவம், ஒரு சுய கட்டுப்பாடு இருக்கிறதே அதை விட்டுட்டுக் கீழே இறங்கிடவும் என்னாலே முடியாது.

வாழ்க்கையிலை ஓர் அர்த்தமும் இல்லாமல்... ஓர் எதிர்பார்ப்பும் இல்லாமல்... வாழ்றன் என்கிறது உண்மையா இருக்கலாம். ஆனா... வாழ்வு முழுதும் ஒரு நெறியோடை வாழ்ந்திருக்கிறன் என்பதிலை ஓர் அர்த்தம் இருப்பது புரியேல்லையா... அந்த நிறைவிலை ஓர் எதிர்பார்ப்பு இருக்கிறது தெரியேல்லையா...?"

எங்கோ, எதையோ... அர்த்தமுடன் எதிர்பார்த்துச் செல்வதுபோல், கம்பீரமாய் எழுந்து தன் வகுப்பை நோக்கிச் செல்லும் நயீமாவைப் புரியாத புதிராய்... புதிதான புதிராய்... விழித்துப் பார்த்து அதிசயித்து நிற்கிறான் அன்வர்.

(1981இல் பலாலி ஆசிரிய கலாசாலை வெளியிட்ட
யாழ்பிறை சஞ்சிகையில் பிரசுரமானது.)

## 8

# ஓர் உள்ளம் பேசுகிறது

படலையடியில் கார் வந்து நிக்கிற சத்தம் கேட்டுக் கையிலை வைச்சிருந்த தேங்காய்ப் பாதியையும் அவசரமாக எறிஞ்சு போட்டுச் சீலையைத் தூக்கிச் செருகிக்கொண்டு ஓடிவந்து ஹாரிடோர் வாசல்லை நிண்டு எட்டிப் பாத்தன். மிளகாய்ப் பழம் மாதிரிச் சிவப்பு நிறத்திலை நல்ல வடிவான கார். கத்தரிப்பூ நிறத்திலே மெல்லிய சரிகைக் கரை போட்டபடி ஒரு சீலையும் உடுத்திக்கொண்டு பெரிய கொண்டையும், கண்ணாடியும், குதி உயத்திச் சப்பாத்தும், ஹாண்ட் பாக்கும் கொழுவிக்கொண்டு, ஒரு பொம்பிளைதான் முன்னுக்கு வாறா. நான் அவவை முந்தி ஒருநாளும் பாத்ததாத் தெரியேல்லை. அவவுக்குப் பின்னாலை அவவுக்குப் பொருத்தமாய்க் கறுப்பு பெல்சும், வெளிநாட்டு ரீ சேட்டும் போட்டுக்கொண்டு ஒரு மனுசன். அவவின்ரை புருஷனாய்த்தான் இருக்கவேணும். அவர் ஒரு சின்னக் குடையும் தூக்கிக் கொண்டு வாறார். றைவரைக் காணேல்லை. அப்ப நான் நினைக்கிறன் அவர்தான் கார் ஓடிக்கொண்டு வந்திருக்க வேணும்.

"டொக்டர் நிக்கிறாரோ?"

முன்னுக்கு வந்த பொம்பிளை என்னட்டைத்தான் கேட்கிறா. இந்த நேரத்திலை அவர் ஒரு நாளும் வீட்டிலை நிக்கிறேல்லை எண்டு அவைக்குத் தெரியுமே!

"இல்லைப் பாருங்கோ! அவர் வர இரவு ஒன்பது மணி செல்லும்.... உள்ளுக்கு வந்து இருங்கோவன்..."

தான் வீட்டிலை இல்லாவிட்டாலும் தன்னைத் தேடி வாறவையை உள்ளுக்குக் கூப்பிட்டு இருத்தித் தேத்தண்ணி குடுத்து என்ன விஷயம் எண்டு கேட்டு அனுப்பவேணும் எண்டு இவர் கலியாணம் செய்த அடுத்த நாள் சொன்னது... இண்டைக்கு இருபது வருஷமாகுது நான் அப்பிடித்தான் செய்துகொண்டு வாறன்.

"சோ... டொக்டரின்ரை மிஸிஸ் இருக்கிறாவோ...?"

அவை உள்ளுக்கு வராமல் முத்தத்திலை நிண்டபடிதான் கேக்கினம். எனக்கு இங்கிலீஸ் கதைக்கத் தெரியாட்டிலும் இடைக்கிடை தமிழோடை கலந்து மற்றவை கதைக்கிறது விளங்கும்.

"மிஸிஸ் இருக்கிறாவோ?"

எண்டு என்னட்டைக் கேக்கினம். அப்ப நான் வேலைக்காரி எண்டு நினைச்சினமோ? பின்னை என்னண்டு நினைக்கிறது? குசினிக்கை நிண்டபடி, ஊத்தைச் சீலையும் சட்டையும்... தலையும் இழுக்கேல்லை. மற்ற டாக்குத்தர்மார் பெண்சாதியள் என்னைப் போலையே இருக்கினம். அண்டைக்கு ஒரு வீட்டை இவர் என்னைக் கூட்டிக்கொண்டு போனபோது பாத்தன்... அவ 'மாக்சியோ' என்னவோ எண்டு கால் முட்டப் போட்டுக்கொண்டு, கதிரையில் காலாட்டிக்கொண்டு இருந்து இங்கிலீசுப் பேப்பர் படிக்கிறா. வீட்டு வேலை சகல வேலையும் ஒரு வேலைக்கார மனிசிதான் செய்யுது. அந்தப் பிள்ளையள் கூட,

"மம்மி எங்களுக்கு இன்னும் ரீ தரேல்லை மம்மி..." எண்டு அந்த வேலைக்கார மனிசியின்ரை குறையளைச் சொல்லுறதுக்கு இவட்டை வருதுகளே தவிர மற்றும்படி எல்லா வேலையையும் அந்த மனிசியைக் கொண்டுதான் செய்விக்குதுகள்.

"ஒரு வேலையும் இல்லாமல் உப்பிடி நாள் முழுவதும் கதிரையிலை இருந்து பேப்பர் வாசிக்க விசர் கிசர் வராதோ?" எண்டு வீட்டை வந்தாப் பிறகு இவரிட்டை நான் கேட்டன். இவர் சிரிக்கிறார். பிறகு சொல்றார்,

"நாள் முழுதும் அப்பிடி இருக்கிறதே... ரெனிஸ் விளையாடப் போவினம்... ஷொப்பிங் போவினம். பிரண்ட்ஸ் வீடுகளுக்கு விசிற் போவினம்... கிளப்புக்குப் போவினம்..."

வீட்டை வந்தவையின்ரை கதையை விட்டிட்டு நடுவிலை வேறை ஏதோ சொல்லிக்கொண்டு இருந்திட்டன்... என்ன? பின்னை அவ கேட்டா,

"மிஸிஸ் இல்லையோ?"

எண்டு. நான் சிரிச்சுப்போட்டு,

"நான்தான் மிஸிஸ். நீங்கள் பயப்பிடாமல் உள்ளுக்கு வாங்கோ..." எண்டு சொன்னன். அவவின்ரை முகத்தைப் பாத்தா நான் சொன்னதை நம்பாத மாதிரிக் கிடந்திது. பிறகும் தயங்கித் தயங்கி வெருண்டு, வெருண்டு உள்ளுக்கு வந்தினம். அவையை இருக்கச் சொல்லிப்போட்டு நான் விறுவிறெண்டு கேத்திலை வைச்சு, தேத்தண்ணிக்கு நெருப்பை மூட்டிப்போட்டு, ஒரு 'ரே'யிலை

விசுக்கோத்துக் கொஞ்சம் போட்டுக்கொண்டு வந்து அவைக்குக் குடுத்தன்.

"தாங்க்யூ"

எண்டு எல்லாரும் சொல்லிற மாதிரிச் சொல்லிப்போட்டு எடுத்துச் சாப்பிட்டினம். தண்ணி கொதிக்கிறதுக்கிடையிலை விஷயத்தைக் கேப்பம் எண்டு,

"என்ன விஷயமா வந்தனீங்கள் எண்டு சொன்னா, நான் இரவைக்கு அவர் வந்தாப்பிறகு சொல்றன்."

எண்டு சொன்னன். அவை இரண்டு பேரும் கொஞ்ச நேரம் ஆளை ஆள் பாத்து முழிச்சினம். இந்த மனிசிட்டை என்னண்டு சொல்லுறதெண்டு நினைச்சினமோ தெரியேல்லை. பிறகு அந்த மனிசன் மெல்லமாச் சொல்லிச்சுது,

"இவ போன மாதம் முழுதும் சுகமில்லாமல் ஹாஸ்பிட்டல்லை இருந்தவ. வூம் ஒப்பரேஷன் செய்தது. அவர்தான் எல்லாம் செய்து வடிவா எங்களை அனுப்பினவர். அதுதான்... "தாங்..." பண்ணிப்போட்டு போவம் எண்டு..."

எனக்கு விஷயம் டக்கெண்டு விளங்கிட்டிது. இந்த இருபது வருசத்திலை இப்பிடி எத்தினை பேர் சாமான்களைக் கொண்டு வந்திருக்கினம். ஆனா யாரிட்டையும் எதுவும் வாங்கப்பிடாது எண்டதுதான் அவற்றை கட்டளை. தான் இல்லாத நேரம் வாங்கி வைச்சாத் தான் ஏசுவன் எணடு சொல்லி... அப்பிடி எண்டாத்தான் நிக்கிறநேரம் கொணந்து குடுக்கச் சொல்லித் தன்மையா ஆக்களை அனுப்பிவிடவேணும் எண்டு இவர் அப்ப சொன்னது. நான் இண்டை வரைக்கும் மீறினதில்லை. மீறினதில்லை எண்டு பெருமையாச் சொல்றன். மீறியிருந்தா... பிறகு உயிரோடை எங்கை இருக்கிறது?

இவருக்கு வாற கோபம்...!

அப்பாடி... அது எனக்கு மாத்திரந்தான் தெரியும். இவருக்கும் வேறை ஒருத்தரோடையும் அப்பிடிக் கோபம் வாறேல்லை. எல்லாரோடையும் வலு அன்பா ஆதரவாக் கதைப்பார். இவர் வந்து ஒரு நிமிஷம் கதைச்சாலே வருத்தம் எல்லாம் மாறிப்போமாம் எண்டு கனபேர் எனக்கு நெத்திக்கு நேரை சொல்லியிருக்கினம். என்னோடை மட்டுந்தான் அப்பிடிக் கோபம் வரும். நான் எத்தினையோ நாள் சொல்லிச் சொல்லி அழுதிருக்கிறன்.

"நீங்கள் எல்லாரோடையும் அன்பா இருக்கிறியள். ஆதரவாக் கதைக்கிறியள். என்னோடை மாத்திரந்தான் இப்பிடி எரிஞ்சு விழுறியள்.

நான் படிக்கேல்லை மற்றவை மாதிரி இங்கிலீசு கதைக்கேல்லை எண்டு உங்களுக்கு என்னிலை விருப்பமில்லை..."

உடனை அவர் சொல்லுவார்,

"இஞ்சை வா. இஞ்சை வா, உன்னிலை எனக்கு விருப்பமில்லாட்டி... நான் உன்னை விட்டுட்டுப் போய் இன்னொரு கலியாணம் செய்ய எவ்வளவு நேரம் செல்லும்? சொல்லு...? என்ரை பேருக்கும், படிப்புக்கும், புகழுக்கும் இரண்டாம் தாரமெண்டாலும் எத்தினைபேர் கோடிக்கணக்கான சீதனத்தோடை பொம்பிளை தரப் பாத்துக்கொண்டிருப்பினம். ஏன் நான் போகேல்லை? கொஞ்சம் யோசிச்சுப் பார். நான் மற்றவையோடை கோபப்பட்டால் அவைக்கு என்னிலை இருக்கிற 'இமேஷ்' குறைஞ்சிடும். அவை என்னை ஒரு கடவுள் மாதிரி நினைக்கினம். அப்ப நானும் என்ரை உணர்ச்சியளை எல்லாம் அடக்கி ஆண்டு கடவுள் மாதிரி நடக்க முயற்சி செய்யிறன். ஒரு நோயாளி என்னதான் பிழை செய்தாலும் நான் கோபித்துக் கதைக்கக்கூடாது எண்டு ஒரு சபதம் போட்டுக்கொண்டு அதுக்குள்ளை என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு திரியிறன். ஆனா... வீட்டை வந்திட்டா, அந்தச் சில மணித்தியாலங்கள்தான் நான் சுயாதீனமா இருக்கிறன். எனக்குத் தெரியும் இஞ்சை நான் சிரிக்கலாம், அழலாம், பேசலாம், திட்டலாம், கொஞ்சலாம், அடிக்கலாம், என்னவும் செய்யலாம். என்ன செய்தாலும் உனக்கு என்னிலை இருக்கிற அன்பு குறையாது..."

அவர் சொல்றதிலை அரைவாசி எனக்கு விளங்கிற மாதிரியும் இருக்கும். அரைவாசி விளங்காத மாதிரியும் இருக்கும். ஆனாலும் அவருக்கு என்னிலை அன்பு இருக்குது எண்டது மாத்திரம் வடிவா விளங்கும். அதோடை பேசாமல் எழும்பிப் போவன்.

பாத்தியளே... பேந்தும் வந்தவையை விட்டிட்டு நான் வேறை ஏதோ அலம்பிக்கொண்டு இருந்திட்டன். பின்னை இவை 'தாங்' பண்ண வந்திருக்கிறம் எண்ட உடனை எனக்கு விளங்கிட்டுது... ஏதோ கொணந்திருக்கினம்... கூடையைப் பாத்தன்... ஏதோ வைச்சு மூடியிருக்குது. மாம்பழம் மாதிரிக் கிடக்கு.

"வேறை ஏதும் விஷயமோ?"
எண்டு கேட்டன்.

"இல்லை இதை வைச்சு..."

எண்டு அந்தக் கூடையைக் காட்டிக்கொண்டு அவ எழும்பினா, நான் உடனை எல்லாருக்கும் சொல்ற மாதிரிச் சொல்லிப்போட்டன்.

"அவர் இல்லாத நேரம் இப்பிடி ஏதும் வாங்கி வைச்சா அவருக்குப் பிடிக்காது. பிறகு வந்து என்னைத்தான் பேசுவார். அப்பிடி

எண்டா அவர் நிக்கிற நேரம் நீங்கள் வந்து சந்தியுங்கோ... இருங்கோ வாறன்."

எண்டு சொல்லிப்போட்டுக் குசினிக்குப் போனன். அங்கை தண்ணி கொதிச்சுக்கொண்டிருக்கு. விறுவிறெண்டு தேத்தண்ணியைப் போட்டு 'ரே'யிலை வைச்சுக் கொணந்து குடுத்தன். இரண்டு பேரும் 'தாங்கியூ' எண்டு சொல்லிப்போட்டு எடுத்துச் குடிச்சினம். குடிச்சு முடிஞ்ச உடனை எழும்பிப் போயிடுவினமாக்கும் எண்டு நினைச்சன். ஆனா அவை இரண்டு பேரும் தங்களுக்குள்ளை இரகசியமா ஏதோ சாடை காட்டிப் போட்டுப் பிறகு அவதான் சொன்ன.

"உங்களுக்குத் தெரியுமோ என்னவோ தெரியேல்லை. அதே ஆஸ்பத்திரியிலை இன்னொரு டொக்டர் ஒவ்வொரு தரம் 'சனல்' பண்ணிறதுக்கும் முப்பது ரூபா வாங்கிக்கொண்டு. பேந்தும் ஒப்பரேஷனுக்கெண்டு தனிய ஐந்நூறு ரூபா வாங்கிறாராம். பேசண்ட்ஸ் குடுக்காட்டிலும் கேட்டு வாங்கிறாராம். அப்பிடிக் குடுக்கிற பேசண்ட்ஸைத்தான் கவனிப்பாராம். மற்றவையைக் கவனிக்கிறேல்லையாம். நாங்கள் கவண்மென்ற் ஆஸ்பத்திரிக்குப் போகாமை ஒரு பிறைவேட் ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தாலும் இப்பிடி ஒரு ஒப்பறேஷன் - இரண்டுகிழமை ஆஸ்பத்திரியிலை இருந்தாலும் ஆயிரம் ரூபாக்கு மேலை முடிஞ்சிருக்கும். ஆனா... இவர் எங்களிட்டை ஒரு சதம்கூட வாங்கேல்லை. நாங்கள் இவரட்டைச் 'சனல்' பண்ணக்கூடி இல்லை. கிளினிக்கிலை காட்டினதுதான். ஒவ்வொரு நாளும் எவ்வளவு அக்கறையா வந்து பாத்தார். இப்பிடி டொக்டரை நாங்கள் ஒரு இடமும் காணேல்லை."

அவை சொல்லிக்கொண்டு போயினம். பின்னை என்ன? விடிய ஆறு மணிக்கு வெளிக்கிட்டுப் போனா, இரவு ஒன்பது பத்து மணிக்கு வாற அரசாங்க ஊழியர் வேறை எங்கையும் இருப்பினமே! நல்ல புதுக்கார் வைச்சு ஓடிக்கொண்டு திரியாமை, சைக்கிளிலை ஆஸ்பத்திரிக்குப் போய் வாற டொக்ரேஸ் வேறை எங்கை இருக்கினம்? நான் என்ரை பாட்டுக்கு நினைச்சுச் சிரிக்கிறன். திடீரெண்டு அவை சொன்னதைக் கேட்டு நான் திடுக்கிட்டுப் போனன்.

"ஆனபடியாத்தான் நாங்கள் இதை மனப்பூர்வமா உங்களிட்டைத் தாறம். இது அவருக்கில்லை. உங்களுக்கு! நாங்கள் உங்களுக்குத் தந்ததை நீங்கள் அவருக்குச் சொல்லவும் தேவையில்லை. வைச்சிருங்கோ... உங்களுக்கு உதவாட்டியும் நாளைக்கு உங்களின்ரை மகளுக்கெண்டாலும் உதவும்..."

எண்டு சொல்லி ஒரு குதிரைப் பவுனை என்னட்டைத் தரினம்.

அவை கடைசியாச் சொன்ன அந்த வரி என்னைக் கொஞ்சம் உலுப்பித்தான் போட்டுது. உண்மைதானே... எனக்கு வேண்டா

மெண்டாலும் நாளைக்கு என்ரை பிள்ளைக்கு... அவள் இப்ப அட்வான்ஸ் லெவல் படிக்கிறாள். ஒரு டொக்டரின்ரை பிள்ளை எண்டு... என்ன காணி இருக்கோ - பூமி இருக்கோ - காசு இருக்கோ - நகை இருக்கோ - ஒண்டும் இல்லை. அந்த நேரம் ஒரு சதமும் சீதனம் வாங்காமல் இவர் என்னைக் கலியாணம் செய்தார். அப்ப நான் கொண்டு வரவுமில்லை. பிறகு இவர் சேகரிக்கவும் இல்லை. இவற்றை தத்துவங்கள் பெரிசு... ஆனா இவரைப் போலை இன்னொருத்தன் வந்து என்ரை பிள்ளையைக் கூட்டிக்கொண்டு போவன் எண்டதிலை எனக்கு நம்பிக்கையில்லை. அப்ப... என்ரை பிள்ளைக்கெண்டு இவை சந்தோஷமாத் தாறதை வாங்கினா என்ன? எனக்கு மனம் கொஞ்ச நேரம் இரண்டு பக்கமும் ஆடுது. சீ... இவ்வளவு காலமாக் கைநீட்டி ஒண்டும் வாங்காமல்... இண்டைக்கு ஏன் வாங்குவான் எண்டும் யோசிக்கிறன். அவவின்ரை கை நீண்டபடியே கிடக்கு. என்ரை கை நீளுறதோ இல்லையோ எண்டு முடிவெடுக்க முடியாமல் நடுவிலை நிக்குது.

திடீரென்று முத்தத்திலை ஏதோ சத்தம் கேட்டுத் திரும்பிப் பாத்தன். இவர்தான்... சைக்கிளிலை வந்து இறங்கி நிற்கிறார். ஒருநாளும் இந்த நேரத்திலை வராதவர்... இண்டைக்கு ஏன் வந்தார்? என்ரை மனம் தடுமாறிப் போனதைப் பாத்துக் கடவுள்தான் அனுப்பியிருக்க வேணும்.

"அவர் வந்திட்டார். அவரோடை கதையுங்கோ" எண்டுபோட்டு நான் குசினிக்குப் போயிட்டன். கொஞ்சநேரம் இருந்து கதைச்சினம். பிறகு கொணந்த கூடையையும் தூக்கிக்கொண்டு எழும்பிப் போகேக்க என்னையும் கூப்பிட்டுப்,

"போட்டு வாறம்"

எண்டு சொல்லிப்போட்டுப் போயினம். குதிரைப் பவுனையும் திருப்பித்தான் கொண்டு போயினம் எண்டு எனக்குத் தெரியுது. எனக்கு மனதுக்கை ஏதோ செய்யுது. சந்தோஷமோ, கவலையோ, பெருமையோ, ஆற்றாமையோ எண்டு ஒண்டுமா விளங்கேல்லை.

(15.03.1981 ஈழநாடு வாரமலரில் பிரசுரமானது.)

9

# வதை

வெளியே வெயில் நெருப்பு நெருப்பாய் குமுறி எரிந்து கொண்டிருந்தது. கொழுத்தும் வெயிலின் உக்கிரம் உள்ளேயும் பரவத் தொடங்கியபோது, சக ஊழியர்கள் ஒவ்வொருவரும் மின் விசிறியைப் போட்டுக்கொண்டும், சூரியனின் கொடுமையைப்பற்றி ஒருவருக்கொருவர் விமர்சனம் செய்துகொண்டுமிருந்தனர். எனக்கோ அந்த ஆதவனின் கொடுமை ஒன்றும் பெரிய பிரச்சினையாய்த் தோன்றவில்லை. உள்ளே, உள்ளந்தான் கொதித்துக்கொண்டிருக்கிறதே! அந்தக் கொதிப்பைத் தணிப்பதற்கான விசிறியைத்தேடி நான் எங்கே போவேன்?

ஏனோ தெரியவில்லை. இப்போதுதான் சில மாதங்களாய்... இந்த வேதனை வரவர அதிகமாகிக்கொண்ட வருகிறது. அடிக்கடி அது தாங்க முடியாததாய் வேறு ஆகிவிடுகிறது. நானும் எத்தனை தொடர்ச்சியான ஆண்டுகளாய் இந்த உலுக்கலை... இந்த மன உளைச்சலை, இந்தச் சித்திரவதையைத் தாங்கிக்கொண்டு வருகிறேன்! ஆனால், இளமையில் இருந்த துடிப்பும், மனோபலமும், ஆணவமும் என்னை என்ன செய்துவிட முடியும் என்ற திமிரும்... வயது போகப் போகக் குறைந்து வரும்போது... அந்த வதையின் வேதனை என்னை மிக அதிகமாய்த் தாக்குவதை நான் உணருகிறேன்.

சரித்திரத்திலே - ஈவிரக்கமற்ற அரசர்களிடம் அகப்படும் கைதிகளுக்கு அவர்கள் விதிக்கும் ஒரு தண்டனை பற்றி - ஒரு சித்திரவதை பற்றி - நான் கேள்விப்பட்டிருக்கிறேன். தலைக்கு மேலே நீர் சொட்டுச் சொட்டாய்... துளித்துளியாய் வீழ, அவர்கள் நாள் முழுதும், வாரம் முழுதும், மாதம் முழுதும் நிறுத்தப்படுவார்களாம். ஆரம்பத்தில், "இதென்னடா விளையாட்டு" என்று தோன்றும் நிகழ்ச்சி நாளடைவில் சகிக்க முடியாத வேதனையாய் மாறிவிடுமாம்! ஏனோ, இப்போதெல்லாம் அதுதான் எனக்கு மிகமிகப் பொருத்தமான உதாரணம் என்று தோன்றிக்கொண்டே இருக்கிறது. என்னுடைய நிலையும் அதுதானே!

ஆரம்பத்தில் -

லாவண்யா இதைச் செய்யத் தொடங்கியபோது -

"சேர், உங்களுக்கு ஒரு லெட்டர்!"

பியூன் என் சிந்தனை மேகங்களைச் சொற் காற்றினால் கலைத்துவிட்டான்.

கடிதத்தைப் பார்த்தேன்.

சிந்தனை மேகங்கள் கலைக்கப்படவில்லை. அது திரள் முகிலாய்த் தொடர்ந்து வந்து பெரு மழையாய்க் கொட்டப் போகிறது என்பதன் அடையாளமாய்...

ஆம், அது வழக்கம்போல் லாவண்யாவின் கடிதந்தான்.

இம்முறை வழக்கத்திற்கு மாறாய்... இந்தக் கிழமைக்குள் இரண்டாவது கடிதமும் வந்துவிட்டது. பிரித்துப் பார்த்தேன். இருநூறு ரூபாவுக்குச் 'செக்' அனுப்பியிருந்தாள்.

ஆனால் இவ்வளவு காலமாய்ச் செய்து வந்தது போல் மாற்றி மனைவியிடம் கொடுக்கவோ... அல்லது இப்போது சில வருடங்களாய்ச் செய்து வருவதுபோல்... அதைத் தூக்கிச் சுக்கு நூறாய்க் கிழித்துப் போடவோ கூட என்னால் முடியவில்லை. சிறிது நேரம் அந்தச் 'செக்'கையே உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டிருந்தேன். அது திடீரென ஒரு ஆயிரம் கூட்டம் ஆணிகளாய் மாறி என் கண்களை அணு அணுவாய்க் குத்துவது போன்ற ஒரு நெருடல்!

என் இதயத்தை யாரோ இரத்தம் பீறிடக் கீறிக் கிழிப்பது போன்ற வலி...

ஓ கடவுளே!
எனக்கு எதற்காக இந்தச் சோதனை?

இளமைக் காலத்தில் நிதானமாய்ச் சிந்தித்து, வாழ்க்கை வளமாய் அமைவதற்குப் பணமும் அவசியந்தானே என்று நினைத்தது தவறா? தவறுதான்...!

லாவண்யாவின் மனம் இந்த அளவிற்குப் புண்பட்டு வெந்து போகும்படி நடந்துகொண்டேனே, அது தவறுதான்!

அவள் அன்றைக்கு எவ்வளவு மனவேதனை அடைந்திருப்பாள் என்பதை நான் உணரவேயில்லை! அன்று எனக்கு, என்னுடைய கோபமே, என்னுடைய உணர்ச்சியே, என்னுடைய மன எழுச்சியே பெரிதாக இருந்தது.

இப்போது தெரிகிறது!

இப்போதுதான் புரிகிறது!
கோபம்... அது ஒரு மன நோய்.

நிறைவேறாத ஆசைகள்... ஏமாற்றங்களாய்ப் பிரதிபலிக்கும் போது உருவாவதே கோபம். அது தாழ்வு மனப்பான்மையின் அறிகுறி!

ஆனால் இன்று -
காலங் கடந்து -
தலையில் நரை மயிர்களும் தோன்றிவிட்ட பின்னர் -
இந்த ஞானம் உதயமாகி என்ன பயன்?
அன்றைக்குப் புரியவில்லையே!

அன்று மட்டும் என் கோபத்தைக் கொஞ்சம் அடக்கிக்கொண்டு, லாவண்யாவைச் சமாதானப் படுத்தியிருந்தால்... இன்று இந்தச் சித்திரவதையை அநுபவித்திருக்க வேண்டியதில்லை. அதை அன்று செய்யும் மனப்பக்குவம், அந்த முதிர்ச்சி இல்லாமல் போனதற்கான தண்டனை... இது எனக்கு வேண்டியதுதான்.

லாவண்யாவுக்குச் சாதாரணமாய் மற்றவர்களைப் புண்படுத்தும் உள்ளம் இல்லை. மற்றவர்களை வேதனைப்படுத்தும் எண்ணமும் இல்லை. அது எனக்குத் தெரியும். அவளைப் பற்றி எனக்கா தெரியாது?

அவளுடைய நினைவுகளே என் செயல்களாய், என்னுடைய சிந்தனைகளே அவளது வார்த்தைகளாய், உள்ளம் கலந்து, உணர்வுகள் ஒன்றி, உறவாடிய நாட்களை நான் மறக்க முயன்றாலும்... அவை பதித்துச் சென்ற ஆழமான சுவடுகள் இன்னும் மறையவில்லையே! அவை கொஞ்சம்கூட அழியவில்லையே!

எவ்வளவு ஆழமாக நிழலாடிய அன்பின் விரிப்புகள்! கனவின் கவிதைகள்! கற்பனை நெருடல்கள்! உறவின் உயிரோவியங்கள்! உள்ளத்தின் ஒன்றிப்புகள்!

அத்தனையையும் என் பிடிவாதம் - தங்கைக்காக ஐம்பதாயிரம் ரூபா கொடுத்தேயாக வேண்டும் என்ற என் பிடிவாதம் -தகர்த்து விழுத்திப் பொடிப்பொடியாக நொருக்கி விட்டதே!

அன்று - அதை நான் சொன்னபோது - நிச்சயமாகக் கொடுத்தேயாக வேண்டும் என்று சொன்னபோது, லாவண்யா,

"முடியாது அந்தளவு பெரிய தொகை எங்களிட்டை இல்லை... தரமுடியாது."

என்று சொல்லியிருக்கலாம்.

ஆனால் அவள் எப்படி ஒரு அமைதியான புன்னகையைச் சிந்தினாள்! அது விரக்தி கலந்த. மனம் புண்பட்ட, கற்பனைக் கோபுரங்கள் சரிந்து விழப்போவதை எதிர்பார்த்த மாயப் புன்னகை என்பதை அப்போது நான் உணரவில்லை. எப்படியாவது தாய் தந்தையரிடம் வாங்கித் தந்துவிடுவாள் என்ற எண்ணத்தில்தானே நான் நாள் வைத்துத் தாலியும் கையுமாய் மணவறையில் போய் உட்கார்ந்தேன்.

ஓ! அவள் எவ்வளவு பிடிவாதக்காரி!
எவ்வளவு ரோசக்காரி!
எவ்வளவு அகம்பாவம் பிடித்தவள்!
எந்த அளவிற்குத் துணிவு இருந்திருந்தால்...

அது துணிவா அல்லது பிளக்கப்பட்ட இதயத்தின் மரண ஓலமா? எனக்குத் தெரியவில்லை! எனக்கு ஒன்றுமே தெரியவில்லை!

ஆனால் ஐம்பதாயிரம் ரூபாவை முடிச்சாகக் கட்டிக் கையில் எடுத்து வந்து. மணவறையில் வைத்துவிட்டு,

"இதுக்குத் தாலியைக் கட்டிக் கூட்டிக்கொண்டு போய் வாழ்க்கை நடத்துங்கோ... உங்களுக்குப் பொம்பிளை தேவையில்லை."

என்ற வசனங்களை... எவ்வளவு சாதாரணமாய்...

"தேத்தண்ணி கொஞ்சம் குடிக்கிறீங்களா"

என்று சொல்வது போன்ற அமைதியுடன் சொல்லிவிட்டுத் திரும்பிச் சென்று மறைந்தாள்?

அந்தக் காட்சியை இப்போது நினைத்துப் பார்த்தாலும்...
என் இரத்தம் கொதிக்கிறது.

அன்று எனக்குப் பொங்கிப் பிரவாகமெடுத்துக் கொண்டு வந்த கோபத்திற்கு அளவேயில்லை.

"உன்ரை இந்த அகம்பாவமும் ஆணவமும் உன்ரை வாழ்க்கையைப் பாழாக்குதா அல்லது என்னைச் சீர்குலைக்குதா எண்டு நீ இருந்து பார். பணத்திலையும், அறிவிலையும், அழகிலையும் உன்னைவிடத் திறமான பொம்பிளையை என்னாலை கலியாணம் கட்ட ஏலும். நீ இருந்து பார்."

என்று 'உரப்பு' மிகக்கூடிய ஒலியில் கத்திவிட்டு வந்தவன் தான்! அதன் பின்னர் இன்றுவரை நான் அவளைச் சந்திக்கவில்லை. சந்திக்க முயலவும் இல்லை.

அடுத்த மாதமே வீடு நிறைந்த சீதனத்துடன்தான் கல்யாணியைத் திருமணம் செய்துகொண்டேன்.

எங்கள் திருமணம் முடிந்து ஒரு மாதத்தின் பின்னர் ஒரு நாள்... எனக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. லாவண்யாவின் கையெழுத்தைக் கண்டு ஆச்சரியமும் மகிழ்வும் ஒருங்கே அடைந்த நான் அவசரமாய்க் கடிதத்தைப் பிரித்தேன்.

கடிதம் இல்லை.
ஐந்நூறு ரூபாவுக்குச் 'செக்' அனுப்பியிருந்தாள்.

"எனக்குக் காசுதானே தேவை. அதை அனுப்புகிறாளாம்..." எனக்குச் சிரிப்பாக இருந்தது.

செக்கை மாற்றி மனைவியிடம் கொடுத்துவிட்டேனாயினும், அப்போது அது ஒரு விளையாட்டாகவே தோன்றியதாயினும், எங்கோ இதயத்தின் ஒரு மூலையில்... அவள் என்னைத் தண்டிக்கத் தொடங்கியிருக்கிறாள் என்ற நினைவு, ஒரு நெருடலாக மாறிக் குத்தத்தான் செய்தது.

மாதம் ஒருமுறை இது நடப்பது தொடர்ந்தது! இதற்கிடையில் லாவண்யா,

"இரண்டு சீலை மாத்திரந்தான் மாத்தி மாத்திப் பள்ளிக்கூடத்திற்கு உடுக்கிறா."

"நகை எல்லாம் வித்திட்டா. ஒண்டும் போடுறதில்லை." போன்ற செய்திகள் இடைக்கிடை என் காதில் விழத்தொடங்கின.

அவள் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியை! தன்னுடைய சம்பளத்தை முற்றாக எனக்கு அனுப்பிவிட்டுத்... தன்னைத்தானே வதைத்து அதன்மூலம் என்னை வதைக்க முயலும் முயற்சியில் அவள் இறங்கியிக்கிறாள் என்பதை உணர்ந்தபோது... முள்ளாய்க் குத்திய நெருடல், பல ஆயிரம் ஊசிகளாய் மாறி இதய மென்மையைக் கிளறுவது போன்ற தவிப்பு ஏற்படத்தான் செய்தது. இந்தத் தவிப்புத் தாங்கமுடியாததாய் ஆனபோதுதான்,

'செக்கை'கிழித்தெறிய ஆசைப்பட்டேன்.
அதைச் செய்யவும் ஆரம்பித்தேன்!

அந்தச் செய்கை, "எனக்குக் காசு தேவையில்லை லாவண்யா. ஒரு மனிசனுக்கு வாழ்க்கை அமைதியாய் இருக்கிறதுதான் முக்கியம். சிலவேளையிலை எவ்வளவு காசு இருந்தாலும் அந்த அமைதி வருவதில்லை."

என்று சொல்ல விரும்பும் என் மனக் குமுறலின் எதிரொலிதான் என்பது எனக்குத் தெரியும், அப்படியானால்...

நான் வாழ்க்கையில் தோல்வியடைந்துவிட்டேனா? வருடங்கள் போகப்போக, எனக்கு வருகிற 'செக்' ஒவ்வொன்றும் "லாவண்யா தனக்குத் தானே கொடுத்துக்கொள்ளும் தண்டனைக்கான பற்றுச்சீட்டு."

"அது ஒரு பெண்ணின் வாழ்வை நான் அநியாயமாய்ச் சீர்குலைத்தேன் என்பதை நிரூபிக்கும் அத்தாட்சிப் பத்திரம்."

என்பது எனக்குத் தெளிவாய்த் தெரிகிறது!

அது என்னை வதைத்து, உருக்குலைத்து, உயிரோடு புதைக்க வரும் பாணம் என்பது புரியப்புரிய அதன் வேதனை பொறுக்க முடியாததாய் மாறிக்கொண்டு வருகிறது.

இந்தத் தொடர் கதைக்கு முடிவில்லையா?

லாவண்யா என்னை மன்னிக்கவே மாட்டாளா?

உயிர் இருக்கும்வரை இந்தச் சித்திரவதையை நான் அநுபவிக்க வேண்டியதுதானா?

(நீர்ப்பாசனத் திணைக்களத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் 1982இல்
அகில இலங்கை ரீதியில் நடாத்திய
சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கதை.)

10

# பூக்கள் நிறம் மாறுகின்றன

பூரணை நிலவு வானத்திலே நேர்த்தியாகப் பவனிவரத் தொடங்கிவிட்டாலும் அந்தக் கொன்றைமரத்தடி இருளிலேதான் மூழ்கிக் கிடந்தது. மரம் நிறையப் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்த மஞ்சட் பூக்கள் நிலத்தில் சொரிந்து நிலம் மஞ்சட் கம்பளம் விரித்த இடம்போலக் காட்சி அளித்ததில் யாரும் கிறங்கிப் போகலாம். மழை மிக மெதுவாகத் தூறத் தொடங்கியிருந்தது.

பாதை வெகுதூரம் வேல் முருகா - உன்னைப்
பாத்து நாங்க நடந்து வாறோம் வேல் முருகா
பாலன் முகம் பாருமையா வேல்முருகா - அவன்
பசி வருத்தம் தெரியலையா வேல் முருகா...

உடுக்கு அடி உச்சச் சுருதியில் முழங்கிக்கொண்டிருக்க, சந்நிதி வேலனுக்கான பாடல்களை ஒரே ஆவர்த்தன இயக்கத்தில் பலர் பாடிக்கொண்டிருந்த அந்த வைரவரின் சாந்நித்தியச் சூழ்நிலை சுற்றி நின்ற பலரது கண்களில் நீரை வரவழைக்கத் தவறவில்லை.

சுற்றிவர எரிந்துகொண்டிருந்த கற்பூரத்தின் சுகந்த மணமும், மணி ஒலியும், உடுக்கு ஓசையும் மீதூர, வழமைபோல 'உரு' ஏறிவிட்ட குஞ்சி... சுருளியின் தாய்... ஒருவித தாள லயத்துடன் வெகு லாவகமாக ஆடிக்கொண்டிருந்தாள். இரண்டு மூன்று லாம்புகள் உயரத்தில் 'மினுக் மினுக்' என்று தூங்கிக்கொண்டிருக்க அந்த ஒளியில், சுருளியின் முதுகில் ஊசிகளை ஒவ்வொன்றாக ஏற்றுவதில் லயித்திருந்தான் கந்தன். ஊசிகள் ஏறுவதனால் வேதனை ஏதும் தோன்றுவதாகத் தென்படாத சுருளியும்கூட குந்தியிருந்தபடியே காம்பீர்யத்துடன் ஆடிக்கொண்டிருந்தான்.

அவனுக்குப் பின்னால் அமர்ந்து அந்தத் தாளத்திற்கு ஏற்ப 'அரோகரா', 'அரோகரா' என்று கோஷித்துக்கொண்டிருந்த சுருளியின் மனைவி நிர்மலாவின் கண்கள் உள்ளே குமைந்த ஒரு சோகத்தின் நிழலுடன் நீரைப் பொழிந்து கொண்டிருந்தன. இப்படியான பழக்க வழக்கங்களில் ஊறாத பண்பு அந்த அழுகையில் தெரிந்தது. தூரத்தில்

நின்றுகொண்டே இந்த நிகழ்ச்சிகளை நோட்டம் விட்டுக்கொண்டிருந்தார் சாத்திரியார்.

"வைரவா... ஏதோ அவர் பனையாலை விழுந்த நேரம் வைச்ச நேர்த்திக்கடன். அண்டைக்கு அவர் செத்துப்போயிருந்தா... நான் நாய்கூடத் தோடாத நடுத்தெருவிலைதான் நிண்டிருப்பன். நீ காப்பாத்திப்போட்டாய் அப்பு... அவரின்ரை விருப்பப்படி இண்டையோடை அந்த நேத்தியும் முடியுது... நீ எப்பிடியும் என்னைப் பாத்துக்கொள்ளையா..."

என்று தனக்குள்ளாக வேண்டுதல் செய்துகொண்டாள் நிர்மலா.

ஆட்டக் காவடி வேல் குத்தப்பட்டுக்கொண்டிருந்த இடத்தில் இருந்து இருநூறு யார் தூரத்தில் சாத்திரியாருடன் இருளில் நின்று கதைத்துக்கொண்டிருந்தது இன்னொரு உருவம்.

"என்ன சாத்திரியார் உம்மடை மகள் நிர்மலாவும் உவன் சுருளியோடை ஓடிப்போய் ஏழெட்டு வருசமாகுது. நீங்களும் இன்னும் மனம் இளகேல்லை. அங்கை பெட்டை அவனுக்குப் பின்னாலை இருந்து அழுதுகொண்டிருக்குது... அவன் பனையாலை விழுந்து கடுமையாகக் கிடக்கேக்கைகூட நீங்கள் போய்ப் பாக்கேல்லையோ..."

இது அந்த இரண்டாவது உருவத்தின் குரல்.

"என்ன வாத்தியார் உம்மடை கதை எண்டு கேக்கிறன். அவள் போன அண்டைக்கே நான் கைகழுவி விட்டிட்டன். அவன் எங்கடை பனையிலை கருப்பணி சேக்கிறன், சேக்கிறன் எண்டு என்ரை செல்வத்தையே மயக்கிப்போட்டான். அவளிட்டை நான் எத்தினையோ புத்திமதி சொல்லிப் பாத்தனான். கேக்கேல்லை. செத்துத் துலைஞ்சாள் எண்டு விட்டிட்டன்..."

என்று சொல்லிக்கொண்ருந்த நடராசாச் சாத்திரியாரின் சொற்களில் உதாசீனம் தொனித்தாலும்கூட, வேட்டித் தலைப்பால் அவர் கண்களைத் துடைத்துக்கொண்ட செயலானது அவரது இதய மூலையில் இன்னும் நிர்மலாவுக்காக ஈரம் கசிவதை எடுத்துக் காட்டியது. நேசிக்கப்படுவதற்கான தகுதி நிர்மலாவிடம் பூச்சியமாகக் குறைந்துவிடுவது முடியாத செயல்தானே!

அவளைப்பற்றிச் சற்றேனும் அக்கறை இல்லை என்று சொல்லிக்கொள்பவர் இந்தக் காவடி எடுப்பைப் பார்க்க வந்திருக்கும் செயல் உபாத்தியாயரை அவர்மேல் இரக்கம் கொள்ளவே வைத்தது. இதயத்தில் கசிகின்ற அன்புப் பிரவாகத்தைச் சமூகத்தின் முன் கொட்டிவிடப் பயப்படும் கோழையாக அவர் நிற்கும் காட்சி இவருக்குப் புரிந்தது. மனிதனுக்குத் துன்பம் அளிக்கும் எந்தச் சம்பிரதாயத்தையும்

தைரியமாகத் தூக்கி எறிந்திடலாம் என்பது அவருக்குப் புரியவில்லையே! உபாத்தியாயர் கதையை வேறு திசையில் திருப்பினார்.

"அது போகச் சாத்திரியார் உங்கடை மூத்த பெடியன் வெளிநாட்டுக்குப் போனான்... எப்பிடி இருக்கிறான்?"

"எட இது தெரியாதே வாத்தியார்? அவன் அங்கை எஞ்சினியரா வேலை பாக்கிறான். கிட்டடியிலைதானே ஊருக்கு வந்து, ஒரு லட்சம் ரூபா நன்கொடையோடை ஒரு பெரிய இடத்திலை பொம்பிளை எடுத்துக் கட்டிக்குடுத்து அனுப்பியிருக்கிறன்..."

"அப்பிடியே... தம்பி அப்ப என்ன வகையான எஞ்சினியர்? மெக்கானிக்கல் எஞ்சினியரோ, எலெக்ரிக்கல் எஞ்சினியரோ?"

"அது என்னவோ இந்தச் சாத்திரிக்கு விளங்குமே வாத்தியார்? அண்டர் கிறவுண்ட் எண்டு சொல்லுறாங்கள்..."

உபாத்தியாயர் தனக்குள் மெதுவாக முறுவலித்துக்கொண்டார். பின்னர் இவ்வாறு தொடர்ந்தார்.

"சாத்திரியார்... நீங்கள் எங்கடை வேதக்காரரின்ரை செத்தவீடுகள் பாத்தனீங்களோ?"

"ஓம் ஓம்... பாத்திருக்கிறன்... அதுக்கென்ன இப்ப?"

"அவங்கள் சுடலையிலை சவத்தைக் கொண்டு போய் என்ன செய்யிறவங்கள்?"

"கிடங்கு வெட்டித் தாக்கிறவங்கள்..."

"கிடங்கு வெட்ட ஆர் போறது? தற்செயலா ஆள் இல்லையெண்டா நீங்கள் உங்கடை பிள்ளையளை விடுவியளோ?"

"சீ... சீ... இதென்ன கதை காணும் கதைக்கிறீர்? அது ஆரேன் குறைஞ்ச ஆக்கள்தானே போறவை?"

சாத்திரியாரின் முகத்தில் அருவருப்பு ரேகைகள் மெதுவாகத் தோன்றி மறைந்தன.

"நல்ல சம்பளம் தந்தால் போவியளோ...?" உபாத்தியாயர் விடயத்தை விட்டபாடாக இல்லை.

"காசே பெரிசு... மனிசனுக்கு மானம் மரியாதை பெரிசப்பா..."

"அப்ப வெளிநாட்டிலை மாத்திரம் மானம் மரியாதை பெரிசில்லையோ? அங்கை மாத்திரம் காசு பெரிசோ?"

"என்ன காணும்... நீர் என்ன கதைக்கிறீர்?"
சாத்திரியார் ஏதோ புரிந்ததுபோல அவசரப்பட்டார்.

வேப்பமர நிழலினால் மறைக்கப்பட்டிருந்த சாத்திரியாரின் முகத்தைத் திருப்பி நிலவு வெளிச்சத்தில் விட்டு, அதை உன்னிப்பாகப் பார்த்துவிட்டுத் தொடர்ந்தார் உபாத்தியாயர்.

"நீர் சொன்ன அண்டர் கிறவுண்ட் எஞ்சினியர்மாரெல்லாம் அங்கை உதுதான் செய்யினம் பாரும். சவக்கிடங்கு வெட்டினம்... ஹோட்டலிலை பிளேற் கழுவினம்... கக்கூஸ் கழுவினம்..."

சாத்திரியாரின் முகம் இறுகுவதைத் தீட்சண்யமாகப் பார்ப்பதற்குச் சில நிமிடங்களைச் செலவிட்ட உபாத்தியாயர் மீண்டும் சொன்னார்.

"அந்த வேலையளைச் செய்யப்பிடாது எண்டு நான் சொல்லேல்லைக் காணும்... ஆனால் இதே வேலையை இஞ்சை செய்தால் ஏன் இளக்கமாப் பாக்கிறியள் எண்டுதான் கேக்கிறன்... இஞ்சை பனை சீவிற தொழில் செய்யிறவனை இழிவாப் பாக்கிறியள்... அங்கை கிடங்கு வெட்டிக்கொண்டு லட்சக் கணக்கிலை காசும் கொண்டு வந்திட்டா - அவங்களுக்கு லட்சக் கணக்கிலை டொனேசனும் குடுக்கிறியள்..."

சாத்திரியாரின் மௌனத்தைத் தனக்குச் சாதகமாகக் கொண்டு உபாத்தியாயர் தொடர்ந்தார்.

"கொள்கையிலையும், நெறியிலையும் உறுதி நல்லதுதான் வாத்தியார்... ஆனால் மனிசனிலை உள்ள விருப்பு வெறுப்புக்களிலை பிடிவாதம் கூடாது..."

"நீண்ட நெடும் பயணம் சந்நிதி வேலா - உன்னை
நினைக்க நினைக்க உருகுதடா சந்நிதி வேலா..."

பாட்டும் உடுக்கடியும் அரோகரா கோஷமும் இன்னும் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றன. சில நிமிடங்களுக்குச் சாத்திரியாரின் சிந்தனையைத் தொடரவிட்ட உபாத்தியாயர் தொடர்ந்து கேட்டார்.

"அது சரி, சாத்திரியார்... இரண்டாவது மோனையும் வெளிநாட்டுக்கு அனுப்பிப் போட்டீங்களாம்... அவர் என்ன செய்யிறார்?"

"ஓமோம்... அவன் அங்கை டாக்குத்தருக்குப் படிச்சவன். அங்கை ஒரு ஜேர்மன்காரப் பொம்பிளை இவன்ரை நல்ல குணத்திலை

மயங்கிட்டுதாம்... உங்களுக்கும் தெரியுந்தானே... சின்னன்லை இருந்தே அவன் தங்கமான குணம். ஒரு குறை குற்றம் சொல்லேலாது. அங்கை கலியாணம் முடிஞ்சுது... இப்ப ஒரு பிள்ளையும் பிறந்திருக்காம்... பிள்ளை தாயைப்போலை நல்ல சிவப்பாம்... "நீங்கள் பாத்தா உங்கடை பேரப்பிள்ளை எண்டு நம்பமாட்டியள் அப்பா" எண்டு எழுதியிருக்கிறான்..."

அவர் முகத்தில் தோன்றிய அந்தப் பெருமையும் பிரகாசமும் அவர் ஒரு சாமான்ய நிலையில் இல்லை என்பதைக் காட்டின.

"இஞ்சை கையோடை பேர்சுக்குள்ளை பிள்ளையின்ரை படம் கிடக்கு... பாக்கப் போறியளே?"

அவர் எடுத்து நீட்டிய படத்தை வாங்கிப் பார்த்தார் உபாத்தியாயர்.

"நல்ல வடிவாகத்தான் இருக்கு..."

அவர் ஒப்புக்கொண்டுவிட்டதில் சாத்திரியாருக்கு இன்னும் பெருமை.

"அப்ப இந்தக் கலியாணத்திலை உங்களுக்குப் பூரண திருப்தி - என்ன?"

"இதென்ன கேள்வி பாருங்கோ... எனக்கென்ன பொம்பிளைப் பிள்ளையள் குமர் இருக்கோ இவர்கள் காசு தரோணும் எண்டு எதிர்பார்க்க... ஒரே ஒரு பெட்டை.... அவள் போயிட்டாள்... இவங்கள் எங்கேயும் நல்லாயிருந்தால் எனக்கு மகிழ்ச்சிதானே..."

உபாத்தியாயர் முகத்தில் மீண்டும் புன்முறுவல் தோன்றியது.

"ஏன் சிரிக்கிறியள்?"

"இல்லை.. வெளிநாட்டில் இருக்கிற ஏதோ நாட்டுப் பொம்பிளை. வேறை நாடு. வேறை நிறம். வேறை இரத்தம், வேறை பாஷை. வேறை கடவுள்... அவளை நீங்கள் உங்கடை மருமேள் எண்டு சந்தோஷமாச் சொல்லுறியள்! இது இவன் சுருளி எங்கடை பெடியன்... ஒரே நாடு, ஒரே தமிழ் இனம், ஒரே மொழி, ஒரே இரத்தம், ஒரே தெய்வம்... இவனை உங்கடை மருமேன் எண்டு சொல்லக் கூச்சப்படுறியள்... அதைத்தான் நினைச்சுப் பாக்கச் சிரிப்பு வருது..."

"இல்லை வாத்தியார்"

சாத்திரியார் ஏதோ சொல்லத் தொடங்கவும் இடைவெட்டினார் உபாத்தியாயர்.

"இஞ்சை பாரும் சாத்திரியார்... நாளைக்கு நீரோ உம்மடை மனிசியோ பாயிலை படுத்தாலும், வெளிநாட்டிலை இருக்கிற பிள்ளையள் வராது. மருமக்களும் வராயினம். செத்தாப் பிறகு 'எம்பாம்' பண்ணி வைச்சா ஒருவேளை வருவினம்... அதுவும் நிச்சயமில்லை. கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரக்கூடியவை நிர்மலாவும் சுருளியுந்தான். கிடங்கு வெட்டிற வேலையைவிட மரம் ஏறிற வேலை குறைவில்லை. பாசை தெரியாத போட்டோ மருமேளை விட, அயலிலை இருந்து உங்கடை சுக துக்கங்களிலை கலந்துகொள்ளக்கூடிய மருமேன் குறைவில்லை. நீங்கள் போங்கோ... அதிலை கிட்ட... காவடியோடை."

"அரோகரா!"

காவடி சந்நிதி கோயிலை நோக்கிப் புறப்பட ஆயத்தமாகி விட்டது.

சிறிது நேரச் சிந்தனையில் ஆழ்ந்த சாத்திரியார் திடீரென ஒரு முடிவுக்கு வந்தவர் போலக் கோயில் முகப்பை நோக்கி நடந்தார்.

வேட்டியையும் தூக்கிக் கட்டிக்கொண்டு, கோயில் முன்றலுக்கு விரைந்து ஓடித் தேங்காயைத் தானாக எடுத்து உடைத்து முருகனை வணங்கிக்கொண்டு காவடிக்கு முன்னால் உற்சாகமாக நடந்து செல்லும் சாத்திரியாரை நிர்மலா ஆரத்தழுவி வாஞ்சையுடன் அழும் காட்சி உபாத்தியாயரின் உடலில் ஒரு சிலிர்ப்பினை ஏற்படுத்துகிறது.

ஆம்! வாய் திறந்து பேசுவதை விடச் சுவை நிறைந்த பேச்சுக்களை மௌனத்தினால் பேசமுடியும் அல்லவா?

நேற்று, நேற்று முன்தினமெல்லாம் தடித்த மஞ்சள் நிறமாய் அரும்பியிருந்த கொன்றைப் பூக்கள் இப்போது மென் மஞ்சள் நிறத்துடன் சிரிக்கும் காட்சியைக் கண்டு ஒரு சுகானுபவத்தில் மூழ்கிப்போகிறார் உபாத்தியாயர்.

(இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுச்
சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றது. - நவம்பர் 1982)

---

# 11

## பரம்பரை இடைவெளிகள்

தை மாதம் பூத்த பின்பும், கார்த்திகை மாதம்போல் அந்தக் கடும் பழை 'சோ'வெனப் பேரிரைச்சலுடன் பொழிந்து கொட்டிக் கொண்டிருந்த ஒரு காலைப் பொழுதில் பாடசாலையை நோக்கி விரைவாக ஓடிக்கொண்டிருந்தான் நீதிராஜா. மழை நனையாமல் ஒரு 'சேட்' பையினுள், தஞ்சம் புகுந்து கொண்டிருந்த புத்தகங்களும் கொப்பிகளும் அவன் கக்கத்தினுள் இறுக்கமான பிடியில் அகப்பட்டிருந்தன. எண்ணெய் வைத்த தலையின் பாதுகாப்பிற்காக, நான்காக மடித்துத் தலைக்கு மேல் அவன் போட்டிருந்த 'சேட்' பத்திரமாக நனைந்து நீர்த்துளிகள் முகத்தில் வழிந்தோடின. பாடசாலை முகப்பிற்கு வந்து சேர்ந்துவிட்ட நீதிராஜா புத்தகக் கட்டை எடுத்து ஒரு மேசையில் வைத்துவிட்டுத் தலையில் 'தெப்பமாய்' நனைந்துபோய்க் கிடந்த 'சேட்டை' எடுத்து முறுக்கிப் பிழிந்து நீரை அகற்றினான். பின்னர் அந்தச் சேட்டினாலேயே தலையையும் காற்சட்டைக்கு மேல் உடம்பையும் கை, கால்களையும் துடைத்துக்கொண்டான். மறுபடியும் நீரைப் பிழிந்து எறிந்துவிட்டு 'சேட்டை' உதறி உடம்பில் போட்டுக்கொண்டான்.

"என்ன மழை பெய்தாலும் நீதிராஜா வந்திடுவன்..."

"பாவம் குடையுமில்லை... மழையிலை நனைஞ்சுகொண்டு வாறான்..."

வகுப்பில் பிரசன்னமாயிருந்த இரண்டு மாணவர்களின் குறிப்புரையைத் தொடர்ந்து.

"நான் என்ன பனங்கட்டியே! மழையிலை நனைஞ்சாக் கரைஞ்சு போயிடுவனே! குடையில்லை எண்டு சாட்டுச் சொல்லிக்கொண்டு வீட்டிலை நிண்டா... இண்டைக்கு வாத்தியார் படிப்பிக்கிற கணக்கு ஆர் சொல்லித்தாறது..."

எதற்குமே கிறுங்காத ஒரு கம்பீரம் நீதிராஜாவின் குரலில் ஒலித்தது.

"என்னடா விசர்க் கதை கதைக்கிறாய்! இண்டைக்கு முதல் நாள் பள்ளிக்குடம்... வாத்தியார் படிப்பிக்கப் போறாரே... வகுப்பு ஒழுங்குபடுத்தி, ஆக்களை இருத்தி, மொனிட்டர் தெரிஞ்சு, இடாப்பு எழுதி, இதுகளோடை போடும்... இண்டைப்பொழுது"

முதல் வாங்கில் மடிப்புக் கலையாத சேட்டுடன் அமர்ந்திருந்த மணிவண்ணன் தனது நாட்டாண்மையை நிலைநிறுத்தப் பார்த்தான்.

மணிவண்ணன் படிப்பில் மக்குத்தான். ஆனால் அவனுடன் எதிர்க்கதை கதைத்து வெல்ல முடியாது என்பதைப் பல சந்தர்ப்பங்களில் அவதானித்திருந்த நீதிராஜா எதுவும் பேசாமல் தனது புத்தகங்களை இரண்டாம் வாங்கில் வைத்துவிட்டு, அதற்கருகில் அமர்ந்துகொண்டான். முதல் வாங்கில் நிமிர்ந்து உட்கார்ந்திருந்த மணிவண்ணன் மீண்டும்,

"என்னடா நீதி? நீ வழக்கமாக் கடைசி வாங்கிலை இருக்கிறனி... இந்த வருசம் முன்னுக்கு வரப்பாக்கிறியோ... இரண்டாம் வாங்கிலை அவர் வலு குசாலாய் இருந்திட்டார்..."

என்று கொழுவினான்.

"கடைசி வாங்கிலை இருந்தவை நெடுகலும் கடைசி வாங்கிலை இருக்கத் தேவையில்லை. அவையளும் முன்னுக்கு வரலாம்... வரவேணும்"

தெளிவான குரலில் தீட்சண்யமாகக் கூறிய நீதிராஜா தான் கூறிய வசனத்தின் பொருளை மணி சரியாகப் புரிந்துகொண்டானா என்பதை ஆராய்பவன் போல மணியின் கண்களினுள் கூர்ந்து பார்த்தான். 'மக்கு' மணிக்கு இவன் சொன்ன வசனத்தின் ஆழமான பொருள் விரிந்திருக்க நியாயமில்லை.

"கன்னம் பறக்க ஒண்டு விட்டனெண்டால்... நீ கடைசி வாங்கிலை கட்டாயம் போய் விழுவாய்... எண்டாலும் உன்னோடை ஏன் வீணாக் கொழுவுவான்... வாத்தியார் விட்டாப்பிறகு போவாய்தானே..."

என்று வாத்தியார் தமக்குச் சார்பாகவே இருப்பார் என்ற நம்பிக்கையுடன் கூறிய மணி, எழுந்து தனக்கேயுரிய மிடுக்குடன் வெளியே போய்விட்டான். நீதியுடன் வீணாகக் கொழுவினால் பின்னர் பார்த்தெழுத தனக்குக் கணக்குக் கொப்பி தரமாட்டான் என்ற பயமும் மணியிடம் இல்லாமல் இல்லை.

மழை நன்றாக விட்டு வானம் வெளுத்த பின்னர் வந்து சேர்ந்தார் உபாத்தியாயர். வகுப்பில் அரைவாசிப் பேர்தான் வந்திருந்தார்கள். மிச்சப் பேருக்கு மழை என்று சாட்டு!

வகுப்பில் எல்லாருடைய வணக்கத்தையும் பெற்றுக்கொண்ட பின்னர்,

"நீங்கள் இந்த வருசம் பத்தாம் வகுப்புக்கு வந்திட்டியள். சோதினை எடுக்கப்போற வருசம். வேறை வேலையளை எல்லாம் விட்டிட்டுப் படிப்பிலை மிச்சம் அக்கறையா இருக்கவேணும்... இண்டைக்கு முதலிலை ஒரு மொனிட்டர் தெரிவு செய்யவேணும் வகுப்பிற்கு..." என்றார்.

"போன வருஷம் மணிதான் மொனிட்டராய் இருந்தவன். இந்த வருஷமும் அவன் இருக்கட்டும் சேர்."

இது முதல் வாங்கில் மணிக்குப் பக்கத்தில் இருந்த சோமசுந்தர சர்மாவின் வேண்டுகோள். மணி அந்த ஊர்ப் பழைய விதானையாரின் மகன். பெரிய இடம். தகப்பனின் 'அடக்கியாளும்' குணங்கள் மணியிடமும் தாராளமாக உண்டு. அதனால் மணி 'மொனிட்டர்' வேலைக்குத் தகுதியானவன்தான் என்பது உபாத்தியாயருடைய எண்ணமும் கூடத்தான்.

"மணி மொனிட்டராய் இருக்கிறது எல்லாருக்கும் விருப்பமோ! அல்லது வேறை ஏதாவது விருப்பங்கள் இருக்கோ?"

ஒப்புக்குத்தான் ஆசிரியர் கேட்டார். வேறு 'முன் மொழிதல்கள்' வராது என்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கை. ஆனால் அவர் முற்றிலும் எதிர்பாராமல் நீதிக்குப் பக்கத்தில் இருந்த சோதி திடுமென்று எழுந்தான்.

"நீதிதான் இந்த வகுப்பிலை கெட்டிக்கார். அவன் மொனிட்டராய் இருக்க வேணும் எண்டு நான் விரும்பிறன்..."

ஆசிரியர் திடுக்கிட்டுத்தான் போனார். ஒரு நாளும் முன்னுக்கு வராத கூட்டம்... இன்று... இவன் என்ன கூறுகிறான்?

தனது திகைப்பில் இருந்து சில வினாடிகளில் விடுபட்ட ஆசிரியர். பெரும்பான்மை நாட்டாண்மைக்குச் சாதகமாகவே அமையும் என்ற பெரு நம்பிக்கையுடன்,

"சரி. நீதிராஜா மொனிட்டராய் வரவேணும் எண்டு விரும்பிறவை கை உயத்துங்கோ பாப்பம்..." என்றார். அவரது நம்பிக்கை பொய்த்துப் போகவில்லை. வழக்கமாகக் கடைசி வாங்கில் அமருகிற... அமர்த்தப்படுகிற அந்த ஐந்து பேர்தான் கை உயர்த்தினார்கள்.

"மணி மொனிட்டராய் இருக்கவேணும் எண்டு விரும்பிறவை..."

மீதி வகுப்பு முழுவதும் கை உயர்த்திற்று.

"பெரும்பாலான ஆக்கள் விரும்பிறபடி மணிதான் இந்த வருஷமும் மொனிட்டர்..."

என்று ஆசிரியர் இறுதித் தீர்ப்பு வழங்கியபோது, ஜனநாயகக் கோட்பாடுகளுக்கே தாம் மதிப்பளித்து மணியை நியமித்ததாக அவர் தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டாலும், நீதியின் போராட்ட வேகம் அவர் மனதை ஏதோ செய்தது.

"இவ்வளவு நாளும் பதுங்கி இருந்தவர்கள் பாயத் தொடங்கிவிட்டால்..."

"நாங்கள் மொனிட்டராய் இருக்காவிட்டால் பரவாயில்லை. ஆனா... மொனிட்டராயிருக்கிற தகுதி எங்களுக்கும் இருக்கெண்டு நீங்கள் ஒத்துக்கொண்டால் சரி..."

தனக்கு முன்னால் உட்கார்ந்திருந்த மாணவனிடம் நீதி முணுமுணுத்தது ஆசிரியருக்குக் கேட்டிருக்க நியாயமில்லை.

ஆசிரியர் தான் செய்யவேண்டிய கடமையின் இன்னொரு கூறுக்கு மெதுவாகத் தாவினார்.

"வகுப்பிலை நீங்கள் என்ன மாதிரி இருக்கப் போறியள்? போன வருசம் இருந்த ஒழுங்கின்படி இருங்கோவன்... என்ன?"

"ஓம் சேர்... போன வருசம் முதல் வாங்கிலை இருந்தாக்கள்தான் இந்த வருசமும் இருக்கிறம்..."

முதல் வாங்கின் வலது பக்கத்தில் ஆசிரியர் மேசைக்கு அண்மையில் இருந்த மணி திருப்தியுடன் கூறிவிட்டு, ஓரக்கண்ணால் நீதியைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

அந்தப் பார்வை உறுத்தியவுடன் போராட்டத்திற்குத் தயாரான நீதி எழுந்து நின்றான்.

"சேர், உயரமான ஆக்கள் எல்லாம் முதல் வாங்கிலை இருக்கினம்... கட்டையான ஆக்கள் எல்லாம் கடைசி வாங்கிலை இருக்கிறம்... பிளாக் போட்டிலை எழுதிறது எல்லாத்தையும் இவையின்ரை தலையள் மறைச்சுப் போடும்... போன வருசம் முழுதும் இப்பிடித்தான் நாங்கள் கஷ்டப்பட்டனாங்கள்... இந்த வருசம் சோதினை எடுக்கிற வருசம்... அப்பிடி இருக்கேலாது... உயரத்தின்படி எல்லாரையும் ஒழுங்குபடுத்தி இருக்க விடுங்கோ..."

நவராத்திரிப் பூசைக் காலத்தில் இவர்களை நிவேதனப் பொருட்கள் தயாரிப்பதற்கு அழைப்பதில்லை. கிணற்றிலே நீர் அள்ளித்

தொட்டியில் நிரப்பி விடுவதற்கும் இவர்களைக் கூப்பிடுவதில்லை. ஆனாலும் அவை இவர்களின் படிப்பைப் பாதிக்காதிருப்பதால் போலும் பேசாதிருந்தார்கள். இந்த விடயத்தில் - படிப்பைப் பாதிக்கிற விடயத்திலாவது கொஞ்சம் வளைந்து கொடுக்காவிட்டால், இனிமேல் பாடசாலை நடத்த முடியாது. ஆனால் இவன் கேட்டதன்படி உயர ஒழுங்கில் மாணவர்களை இருக்கவிட்டால்... நிதிராஜாதான் முதல் வாங்கின் வலது பக்கத்திற்கு... இப்போது மணி உட்கார்ந்திருக்கும் இடத்திற்கு வருவான். மணி கடைசி வாங்கிற்குப் போவான். அத்துடன் இவர்கள் எல்லா மாணவர்களுக்கும் இடையில் கலந்து அமரப் போகிறார்கள். என்னதான் செய்வது?

நரைத்துப்போன மயிர்களைத் தடவி விட்டுக்கொண்ட ஆசிரியரின் தலை கிறுகிறுத்தது. பக்கத்து வகுப்பில் புதிதாய் நியமனம் பெற்று வந்த இளம் ஆசிரியர் ஒருவர் எல்லாரையும் ஒன்றாய்ச் சேர்த்துக் குழுக்களாக்கி வகுப்பைக் குழு முறையில் அமைத்துக்கொண்டிருந்ததை எட்டிப் பார்த்த அவரது தலைச்சுற்றல் மேலும் அதிகரித்தது. இளந் தலைமுறை மாறிக்கொண்டிருக்கிறது. அவரும் மாறத்தான் வேண்டும். வேறு வழியில்லை!

(1983 ஜனவரி, பெப்ரவரி 'மேகம்' சஞ்சிகையில் பிரசுரமானது.)

# 12

# அர்ச்சிக்கப்படாத விக்கிரகங்கள்

“இசை, இலக்கியம் போன்றவற்றைத் தமது பொழுது போக்குகளாகக் கொள்பவர்கள் உணர்ச்சி வசப்பட்டவர்கள். சிறு குறைகளையும் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். எளிதிலே கோபமும், துயரமும் அடையக்கூடியவர்கள். தற்பெருமை இருந்தாலும் இளகிய மனம் படைத்தவர்களாக இருப்பார்கள்...”

‘உங்கள் பொழுதுபோக்கு என்ன?’ என்ற ஒரு கட்டுரையிலே எப்போதோ வாசித்த அந்த வரிகள். இப்போது அவள் மனத்திரையில் படம் விரித்தன.

ஆசிரியை தனது அப்பியாசப் புத்தகத்தை நோட்டம் விடுகிறார் என்றதுமே, ஏதோ ஓர் உலகில் இருந்து விழித்துக்கொண்டவன் போலப் பதைப்படைந்த கோபி எழுந்து நின்றபோது, அவனது கால்களும் கை விரல்களும் மெதுவாக நர்த்தனம் செய்வது துல்லியமாகத் தெரிந்தது ராஜிக்கு. அதைக் கவனத்திலே கொள்ளாதவள் போல,

“என்ன கோபி, நான் தந்த வித்துக்களின்ரை படம் எல்லாம் கீறிப் பெயரிட்டு முடிச்சிட்டியோ?” என்று கேட்டாள்.

வேலை கொடுக்கப்பட்டுப் பதினைந்து நிமிடங்களுக்கு மேலாகிய நிலையில், மற்றைய மாணவர்கள் எல்லாம் படம் கீறிப் பெயரிட்டு முடித்துவிட்ட சூழலிலே, கோபியின் கொப்பியில் மாத்திரம் காணப்பட்ட அந்தக் கவிதை வரிகள்... அவள் மீண்டும் ஒருமுறை மனதிற்குள் அதைப்படித்து உன்னிப்பாக ரசித்தாள்.

வண்டு போலத் தூங்குகிற குண்டுமணி - உனைக்
கொண்டு போக வந்திருக்கா குருவியக்கா - அவள்
சொண்டு மேலே நீ பயணம் போகையிலே - உனைக்
கண்டு மிகப் பொருமப் போறா நாயுருவி.

கோபிகிருஷ்ணா

கோபிநாதன் கிருஷ்ணராசா என்ற அவனது முழுப்பெயர் கூட, கோபிகிருஷ்ணா என்று அழகாக ஒரு கவிஞனுக்கு மிகப் பொருத்தமாய்க் குறுக்கம் பெற்றிருந்ததை அவள் உன்னிப்பாகக் கவனித்தாள். ஆனாலும் ஆசிரியை என்ற முறையில் அவள் கொடுத்திருந்த வேலையை அவன் மட்டும் அந்த வகுப்பில் உதாசீனம் செய்திருந்தது ஒரு கணம் அவளைச் சினந்து மனதிற்குள் குமுறவைத்தது.

"இந்த வித்துக்கள் பரம்பலுக்கு என்ன மாதிரி இசைவாக்கம் பெற்றிருக்குது எண்டதைக் காட்டுறதுக்காண்டிப் படம் கீறிப் பெயரிட்ட சொல்லிக் குண்டுமணி, நாயுருவி வித்துக்களைத் தந்தா நீ..."

வார்த்தைகளை முடிக்காமல் அவள் அவனை ஏறிட்டுப் பார்க்கத் தீட்சண்யமான அந்தப் பார்வையைச் சந்திக்க முடியாமல் அவன் கண்களில் நீர் துளிக்க மௌனித்து நின்றான்.

அந்த நிலை... ஆமாம்!
அவளும் அப்படித்தான் ஒருநாள் நின்றாள்.
அவள் கணவருக்கு முன்னே...!

அந்த இளமைக் காலச் சிந்தனைகள் வானக் கூரையைப் பிளந்துகொண்டு மேலே தாவுகின்றன. அப்போது அவள் திருமணம் செய்து சில மாதங்கள்தான் கடந்திருக்கும். மாதங்களிலே சிறந்த மார்கழி பிறக்கிறதென்றாலே, அவளுக்கு மனதினுள்ளே ஒரு குதூகலம் இயல்பாக வந்து குடிகொண்டு விடுவது வழமை. முப்பது நாளும் முப்பது விதமாய் - ஒரு நாள் மாக்கோலம் - இன்னொரு நாள் மலர்க்கோலம் - வேறொரு நாள் தேங்காய்ப்பூக் கோலம் என்று அவள் மனதில் அழகழகாய்ப் படம் விரிக்கும் கற்பனைகளில் அவள் வீட்டின் முற்றம் மலர்ந்து சிரிக்கும். இந்த வருஷம் அவளது கணவன் வேறு, புதிதாய் அவளது கைவண்ணத்தைப் பார்த்துக் கிறங்கிவிடப் போகிறார் என்ற லயிப்பிலே - அந்தக் கற்பனை சில நாட்களாகவே மனதில் புதிது புதிதாய் எத்தனையோ கோலங்களைப் போட்டுப் பார்த்து மகிழ்ந்திருந்தது.

அன்று காலை ஐந்து மணிக்கெல்லாம் திடீரென உசுப்பி விட்டதுபோல அவளுக்கு விழிப்பு வந்துவிட்டது. துள்ளி எழுந்து குளித்து முடித்து, முற்றம் கூட்டி மெழுகித் தேங்காய்ப் பூவும் நிறப் பவுடர்களுமாய் அவள் முற்றத்தில் அமர்ந்தபோது, காங்கேயன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலையில் இருந்து ஐந்தேமுக்கால் சங்கொலி காதில் விழுந்தது. கணவர் இன்னும் எழுந்திருக்கவில்லை.

"அவர் எழும்பி வந்து பாக்கேக்கை நான் இது போட்டு முடிச்சிடுவன்"

அவள் விரல்கள் வெகு விரைவாக இயங்கின. சில நிமிடங்கள் நழுவுவதற்கிடையில் அவள் அந்தக் கலையில் ஒன்றிப்போனதில், ஆறு மணிச் சங்கு ஒலித்தது காதில் விழவேயில்லை. மிக நேர்த்தியான ஒரு கோலத்தை அவள் பல வண்ணச் சேர்வைகளில் மிக லாவகமாகப் போட்டு முடித்து நிமிர்ந்தபோது, வானொலியில் செய்திக்கு முன் ஒலிக்கும் இசை கேட்டது.

"ஓ... ஆறரை ஆயிட்டுதா. அவர் எழும்பியிருப்பார்... வந்து பார்க்கட்டும்..."

முகத்தில் மலர்ந்த ஓர் எக்களிப்புடன் அவள் அசைந்தபோது, அவர் எதிரிலே தரிசனம் தந்தார். பால் குடிக்கப் போகும் ஆர்வத்துடன் பச்சைக்குழந்தை ஒன்று அதன் தாய் முகத்தை 'ஆ'வென்று பார்ப்பதுபோல, அவர் சொல்லப்போகும் விமர்சனத்தை எதிர்பார்த்து அவள் முகம் அவர் முகத்தில் பதிந்து விலகியது. அங்கே அவள் எதிர்பார்த்த மலர்ச்சி தென்படவில்லை.

"என்ன ராஜி, பெரிய ஆர்டிஸ்ற் எண்டமாதிரி மணித்தியாலக் கணக்கா இதிலை வந்து குந்தி நிக்கிறீர்? குசினியிலை ஒரு வேலையும் நடக்கேல்லைப்போலை கிடக்கு..."

அவள் போட்ட கோலத்தை அவர் வடிவாகப் பார்க்கவும் இல்லை. தோளில் போட்டுக்கொண்டு வந்த துவாயை உதறிக்கொண்டு முற்றத்தில் இறங்கி, அவர் கிணற்றடியை நோக்கி நடந்தபோது, கோலத்தின் ஒரு பகுதி அவர் காலடியில் பட்டு அழிந்துபோனது. துளிர்த்து வெளியேற இருந்த விழிச்சிமிழின் திவலைகளை மிகச் சிரமப்பட்டு உள்ளுக்குள் எடுத்துக்கொண்டு, அவள் தன்னைச் சுதாரித்துக்கொண்டாள்.

அடுத்த நாளும் அவள் கோலம் போட்டாள். அதில் நாலு கோடுகள் மாத்திரம் இருந்தன. ரசிப்பதற்கு மனிதர் இல்லாதபோது, அதன் புனிதத் தன்மையை மதிப்பதற்கு ஆட்கள் இல்லாதபோது, நாலு கோடு போட்டால் என்ன? நாற்பது கோடு போட்டால்தான் என்ன?

காலையில் எட்டரை மணிக்கிடையில் காலை உணவும் மதிய உணவும் முடித்துக் கணவருக்குக் கட்டிக் கொடுத்துத் தானும் கட்டிக்கொண்டு புறப்பட்டால் அவள் வீடு திரும்ப மாலை நாலு நாலரை மணியாகிவிடும். பாடசாலையில் ஒன்றிரண்டு பாடநேரம் ஓய்வு கிடைத்தாலும், அந்தப் பொழுதுகள் அப்பியாசப் புத்தகங்களைத் திருத்துவதில் அல்லது அடுத்த விஞ்ஞான பாடத்திற்கான பரிசோதனைப் பொருள்களை ஆயத்தம் செய்வதில் செலவாகிப் போகும். வீடு திரும்பிய கையோடு 'விறு விறு' என்று தேநீர் போட்டு, பிளாஸ்கில் ஊற்றி வைத்துவிட்டு, அடுப்பு மூட்டிய கையுடன் இரவுச் சமையலையும் தொடங்கினால் எல்லாம் முடிந்து குசினியை மூட இரவு ஏழரை

மணியாகிவிடும். இரவு ஒன்பது மணிக்குச் சாப்பிட்டு விட்டுப் படுக்கைக்குப் போகுமுன்னர் உள்ள அந்த ஒன்றரை மணித்தியாலங்கள் தான் அவளுக்கு ஓய்வான பொழுதுகள். அவள் மனதுக்கு அமைதி தருகின்ற இலக்கியக் கருத்துக்கள் பிரசவிக்கின்ற நேரமும் அதுதான். திருமணம் முடிந்த இந்த ஒன்றரை வருடகாலத்தில் குறித்த இந்த நேரத்தை அவள் இலக்கியத்திற்காகச் செலவழிப்பதை அவர் கவனிக்கவில்லையோ, அல்லது கவனித்தும் அதைப் பற்றிக் கதைக்கவில்லையோ அவளுக்குத் தெரியாது.

இரவு ஏழரை மணிக்கெல்லாம் தனது அறைக்குள் புகுந்து மேசையில் அமர்ந்துகொண்டால், பின்னர் உதிக்கின்ற அந்த ஒன்றரை மணி நேரமும், அவளுக்கு ஒன்றரை நிமிடங்களாய் மறைந்துபோகும். அவளது அந்த ஆக்கங்கள் வானொலியில் ஒலிபரப்பாகும்போதோ அல்லது பத்திரிகை சஞ்சிகைகளில் பிரசுரமாகும்போதோ அதைப்பற்றிப் பெரிதாய் எல்லாருக்கும் பிரலாபித்துத் திரிவது, அவள் வழக்கமாயும் இருக்கவில்லை. தனது படைப்புகளைப் பற்றித் தன் கணவர் வலிந்து ஏதும் சொல்லாதபோது அன்றுவரை அதைப்பற்றி அவள் அவரிடம் ஏதும் கேட்கவுமில்லை.

அன்று மாலை அந்தச் சஞ்சிகையைப் பார்த்தபோது அவளுக்குத் தன்னையே நம்ப முடியாதது போல, அந்தச் செய்தி கண்களில் உறுத்தியது. அகில இலங்கை ரீதியில் கலாசார அலுவல்கள் அமைச்சு நடத்தியிருந்த கவிதைப் போட்டியில் முதற்பரிசான ஆயிரம் ரூபா ராஜிக்குக் கிடைத்திருக்கிறதாம். தான் காண்பது கனவா அல்லது நனவா என்று ஒரு நிமிஷம் சந்தேகப்படுபவள் போலத் தனது கண்களைத் தானே கசக்கிச் கிள்ளிப் பார்த்துக்கொண்டாள். அந்தச் செய்தி நனவில்தான் நடக்கிறது என்பதை ஊர்ஜிதம் செய்துகொண்டு, ஒரு சுகானுபவத்தில் மூழ்கியபடி சஞ்சிகையுடன் வெளியில் வந்தபோது, முற்றத்தில் போடப்பட்டிருந்த சாய்வு நாற்காலியில் அமர்ந்து அவர் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார்.

"இதைப் பாத்தீங்களே! இந்தக் கவிதைப் போட்டியிலை ஆயிரம் ரூபாய் முதற்பரிசு ஆருக்குக் கிடைச்சிருக்குது பாத்தனீங்களே..."

முகம் முழுவதும் அன்றலர்ந்த தாமரைபோல மலர்ந்திருக்க அந்தச் சஞ்சிகையை அவரிடம் நீட்டினாள் அவள்.

"ஓமோம் பாத்தனான். சும்மா கதையும் கவிதையுமெண்டு இப்ப எத்தினை வருசமா ஒவ்வொரு நாளும் இரண்டு மூண்டு மணித்தியாலம் செலவழிச்சு. இப்பதானே ஒரு ஆயிரம் ரூபா கிடைச்சிருக்கு. உந்த நேரத்திலை ஒரு வகுப்புக்குச் சயன்ஸ் ரியூசன் குடுத்திருந்தாலும் ஒரு வருஷத்திலை ஒரு ஐயாயிரம், ஆறாயிரம் எண்டு உழைச்சிருக்கலாம்."

பத்திரிகையில் புதைந்திருந்த தலையை எடுக்காமலே, ஏதோ ஒரு லயிப்பில் பதில் சொன்னவர் மீண்டும் பத்திரிகை படிப்பதில் ஒன்றிப்போனார்.

அப்போது ஒரு கணம் -

இதோ இந்த மாணவன் அவள் முன் எழுந்து நிற்கிறானே! இது போல்தான் அவளும் விழிச்சிமிழில் நீர் துளிக்க மௌனித்து நின்றாள். ஒரே ஒரு கணம்தான். கண்ணில் துளிர்த்த துளி கீழே விழவில்லை. பொங்கிப் பிரவாகித்து வந்த அழுகையை நெஞ்சுக்குள் அமுக்கி விழுங்கிக்கொண்டாள். தொட்டவுடன் உணர்ச்சி வசப்பட்டு விடுகின்றவள் அன்று ஏன் அழவில்லை? கட்டிலில் படுத்துக் கண்ணீர் வற்றிக் கவலை தீரும்வரை ஏன் குமுறிக் குமுறி அழவில்லை என்பது அவளுக்கே இன்றுவரை தெரியவில்லை. கதையும், கவிதையும், இலக்கியமும் எவ்வளவு காசைத் தரக்கூடும் என்று கணக்குப் பார்ப்பவர்களின் கதைக்கு அழுது என்ன பயன் என்று நினைத்தாளோ என்னவோ?

அடுத்தநாள் மாலை அவர்களின் வீட்டிற்கு வந்திருந்த கணவரின் உறவினர் ஒருவர். மனதில் தோன்றும் கருத்துக்களை மறைத்துப் பேசும் இயல்பு இல்லாதவர்,

"ஆர் உங்களுக்கு முதற்பரிசு தந்தது? போயும் போயும் உந்தப் புளிச்சுப்போன சாதிப் பிரச்சினையை வைச்சு எழுதியிருக்கிறியளே! அதுவும் நாலுவரி, எட்டுவரியான பழைய கிழட்டுப் பிளானிலை... ஒரு விறுவிறுப்பான காதல் கதையைப் புதுக்கவிதை நடையிலை எழுதியிருந்தா எவ்வளவு நல்லா இருந்திருக்கும்? இதென்ன உப்புச் சப்பில்லாமல்... எனக்கெண்டால் பிடிக்கேல்லை. நான் எண்டால் உதுக்குப் பரிசு தந்திருக்க மாட்டன்..."

என்று கருத்துரை தந்தார்.

இதழ் விரியாத ஒரு புன்சிரிப்பு மட்டுமே அவளிடமிருந்து பதிலாக வந்தது. இந்த உதாசீனங்கள் அவளைப் பின்னர் எழுதவிடவில்லை. வாழ்க்கையில் ஒருமுறை - ஒரே ஒருமுறை அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட ஒரு இலக்கியப் போட்டியில் அவள் முதற்பரிசைப் பெற்றாள். அதுவே முதற் தடவையாகவும் இறுதித் தடவையாகவும் போய்விட்டது. போற்றப்படாத, புகழப்படாத பல திறமைகளை உள்ளுக்குள் அடைத்துக் கொண்டு வெறும் பெண்ணாய், ஒரு யந்திரம் போன்ற குடும்பத் தலைவியாய், ஒரு ஜடம் போன்ற ஆசிரியையாய், ஒரு சாமான்ய நிலையில் அவள் எத்தனை வருடங்களை ஓட்டிவிட்டாள்?

உள்ளுக்குள்ளே மறுகிமறுகி வாழ்ந்துவிட்ட அவள் இனி வாடி விழப்போகிற மலர்!

ஆனால்... இந்த மாணவன்...!

இவனையும் ஒருவேளை இவன் வீட்டுப் பின்னணியும், இந்தச் சமூகமும் இப்படித்தான் நசுக்கிப் பொசுக்கிவிடப் போகிறதா? அவள் விஞ்ஞானம் கற்பிக்கிற இந்த வகுப்பில் உள்ள நாற்பது மாணவர்களும் நிச்சயமாய் விஞ்ஞானிகளாய் வரப்போவதில்லை. வரவேண்டும் என்று அவள் எதிர்பார்க்கவும் முடியாது.

இவர்களுக்குள்ளேதான் பெரிய கவிஞர்களும், சிறந்த விஞ்ஞானிகளும், புகழ்பெறும் எழுத்தாளர்களும் ஒளித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களை மிக இலகுவாக முளையிலேயே கிள்ளி எறிந்துவிடலாம். கிள்ளிவிட்டால் அவர்கள் வெறும் நடைப்பிணங்களாய் வீதிவழியே திரிவார்கள். ஆசிரியை ஏதோ பெரிய யோசனையில் தீவிரமாய் ஆழ்ந்துவிட்டதைப் புரியாத புதிராய்ப் பார்த்துப் பயந்துபோய்,

"ரீச்சர், ரீச்சர், நான்... நான் கெதியாய் படம் கீறி முடிச்சிடுறன் ரீச்சர்..."

என்று நாக்குழறிப் பேசிய கோபியை முதுகில் தட்டிக் கொடுத்தாள் அவள்.

"கோபி நீ எழுதியிருக்கிற இந்தக் கவிதை மிச்சம் நல்லாயிருக்கடா. இந்தச் சின்ன வயதிலை நீ இப்பிடி ஒரு கவிதையை எப்பிடி எழுதினாய் எண்டு தெரியாமல்தான் நான் மலைச்சுப்போய் நிண்டிட்டன். எங்கை இந்தப் பொன்னொச்சி வித்தையும் ஒட்டொட்டி வித்தையும் வைச்சு இன்னொரு கவிதை எழுதிக் கொண்டா பாப்பம்..."

அவள் தந்த அன்புப் பிரவாகத்தில் மூழ்கிவிட்ட கோபியின் கண்களில் தேங்கி நின்ற நீர் உள்ளே சென்றுவிட, அதே கண்கள் ஆச்சரியத்தினாலும், மகிழ்வினாலும் மலர்ந்து சிரிப்பதைப் பார்த்துத் தன்னை மறந்து ரசிக்கிறாள் ராஜி. பிற்காலத்தில் இந்தக் கோபி ஒரு தீவு போற்றும் கவிஞனாகி, அதீத புகழ் பெறுகையில் தன்னை நன்றியுடன் நினைத்துக் கண்ணீர் மல்கும் காட்சி அவள் மனதில் படம் விரிக்க... மேசைக்கு அருகில் இருந்த கதிரைக்குச் சென்று சாய்ந்து அமர்ந்து ஒருவித பரவசத்தில் அப்படியே மூழ்கிப் போகிறாள்.

(05.01.1983இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவை 1இன் சிறுகதை நிகழ்ச்சியில் ஒலிபரப்பானது.)

---

# 13

# உள்ளத்தால் அடிமைகள்!

என்னை நிழலாகத் தொடர்ந்த துன்பத்தை விரட்டியடிப்பதற்காகவோ, மறப்பதற்காகவோ அல்லது மடியச் செய்து வெற்றி கொள்வதற்காகவோதான் இத்தனை வருடமும் நான் உற்சாகத்துடன் போராடி வந்தேன். அந்த நிழல் போராட்டம் தோற்றுப் போய்விட்டது. நிழல் போராட்டங்கள் எப்போதுமே தோல்வியில்தான் முடிவடைந்திருக்கின்றன. அந்தச் சரித்திர நிர்ப்பந்தத்திற்கு விதிவிலக்காக முயன்று தோற்றுப் போய் இப்போது நானும் அந்தச் சரித்திர அடிமைகளில் ஒருத்தியாய்... இல்லை! அப்படி ஆகிவிடக் கூடாது!

மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று எமது பெண்கள் அடிமை வேலை செய்கிறார்களாம். வேற்று நாட்டின் ஆடவர்களுக்கு ஏவல் தொழில் செய்கிறார்களாம். பணத்திற்காக எதுவும் செய்யலாம் என்று ஆகிவிட்டதாம். இந்தியா போன்ற நாடுகள் எல்லாம் பெண்களை அங்கே அனுப்பாதிருக்கும்போது, இலங்கை மாத்திரம் ஏன் அனுப்பவேண்டுமாம். இலங்கையின் மானம் கப்பல் ஏறுகிறதாம். கதறிக்கொண்டு பிரசங்கமாரி பொழிந்துகொண்டு அலைகிறார்கள் எமது ஆண்கள்.

ஆனால் இங்கே...

இலங்கையின் உள்ளே...

மரியாதையான குடும்பத்தின் உள்ளே...

மனைவி என்ற மகத்தான உரிமை வழங்கப்பட்டுப் பூஜிக்கப்படுவதாகிய பொய்ம்மைத் தோற்றத்தின் உள்ளே நடப்பவைகள்!

அவை வெளி உலகுக்குத் தெரியாத பூடகங்கள்!

உடலால் அடிமையான பெண்களைப் பற்றித்தான் எல்லாரும் கூச்சல் போடுகிறார்கள்.

உள்ளத்தால் அடிமையாக்கப்பட்ட எங்களைப் பற்றி...

"அழுவதற்கு நேரம் எங்கே இருக்கிறது இவ்வுலகில்? அப்படி அழுவதற்கு நேரம் இருப்பவர்களுக்கு வாழ்வதற்கு எங்கே நேரம் இருக்கப்போகிறது?"

என்று இளமைக்காலக் கனவு வேளைகளில் நான் அடிக்கடி சொல்லிக்கொள்வேன். அப்படிச் சொல்லிக்கொண்ட நானேதான் அன்று வாசல்படியில் அமர்ந்து அழுதுகொண்டு முன்னே தெரிந்த முருங்கை மரக் காட்சியைத் தொடர்ந்து சென்றேன். தான் பெற்றெடுக்காத, தன் வயிற்றில் உதிக்காத ஒரு குஞ்சுக்கு அந்தக் காகம் உணவூட்டிக் கொண்டிருந்தது. குயில் குஞ்சு 'கூகூ' என்று கொஞ்சியபடி வாயைத் திறந்து தன் வாயில் அன்புடன் திணிக்கப்பட்ட உணவை விழுங்கியதும் மீண்டும் உணவு தேடுவதற்காகப் பறந்து சென்றது பெண் காகம்.

காகங்களுக்கிடையில் பாரதி பிறக்கவில்லை!

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்!" என்று ஒரு கவிஞர் காகமும் பாடவில்லை. ஆனாலும் அந்தப் பெண் காகம் மிகச் சுதந்திரமாய் தான் விரும்பிய நேரம் விரும்பிய உணவை அந்தக் குஞ்சுக்குக் கொடுப்பதைப் பற்றி 'விமர்சனம்' செய்ய வேறு காகங்கள் வரவும் இல்லை.

சிறிய விம்மலாய் இருந்த என் அழுகை இந்தச் சிந்தனையைத் தொடர்ந்து பெரிய பிரவாகமாய் வெடித்துச் சிதறியது.

என் நிலை...?

தாய்மைப் பேறு என்ற பெரிய பொறுப்பைப் பெண்களுக்குக் கொடுத்திருக்கும் கடவுள் ஏன் அவர்களைப் பொறுப்பற்ற ஆண்களை நம்பி வாழும் அவலநிலைக்குக் கொண்டுவந்து வைத்திருக்கிறான்?

"என்ன பிள்ளை, இந்தப் பிஞ்சுக் குழந்தைக்குப் பப்பாசிப்பழம் குடுக்கிறதே... சன்னியாக்கிப் போடுமெல்லே? இதென்ன கலி காலம்... ஒரு வயது முடிய முந்தி ஒரு பழவகையும் குடுக்கப்பிடாது..."

"காய்ச்சல் விடும் வரைக்கும் ஒரு பாலும் குடுக்கப்பிடாது. பால் சரியான மந்தம்... செமிக்காது..."

"தடிமன் வந்தால் சளி மாறும் வரையில் மல்லித்தண்ணியும் தேத்தண்ணியும்தான் குடுக்கிறது. யூனிவேசிற்றியிலை படிச்சாப்போலை எல்லாம் தெரிஞ்சிடுமே! பிள்ளை வளக்க அனுபவம் வேணும். எங்களைப்போலை வயதுக்கு மூத்த ஆட்கள், எட்டுப் பத்துப் பிள்ளை பெத்து வளத்தவை சொல்லிறதைக் கேட்கிற மனம் வேணும்..."

ஒவ்வொரு நாளும் என் காதில் வந்து விழுகின்ற மாமியின் அர்ச்சனைகள்.

"என்னப்பா... உங்கடை அம்மா இப்பிடிச் சொல்லுறா... இங்கை பாருங்கோ இந்தப் புத்தகத்திலை... மூண்டு மாதத்திலை பப்பாசிப்பழம் குடுக்கச்சொல்லி எழுதியிருக்கு... இதையெல்லாம் டொக்ரேஸ்தானே எழுதியிருக்கினம்..."

"காய்ச்சல் விடும் வரைக்கும் பால் குடுக்கப்பிடாது என்றால் எனேஜி கிடையாதே... பிள்ளை எப்பிடி எழும்பி நிக்கிறது. ஏதாவது உணவு வேணும்தானே..."

"தடிமனுக்கும் சாப்பாட்டுக்கும் என்ன சம்பந்தமப்பா... இஞ்சை நான் கேக்கிறன் நீங்கள்..."

மாமியுடன் எதிர்த்துக் கதைக்கமுடியாமல் என் கணவரிடம் நான் முணுமுணுத்துக்கொள்ளும் நினைவுகள்.

"அம்மா சொல்லுறபடி செய்யுமன். உமக்கென்ன குறைஞ்சுபோச்சே! இதுதான் பொம்பிளையள் படிக்கப்பிடாது எண்டு சொல்லுறது. யூனிவேர்சிற்றிக்குப் போயிட்டு வந்திட்டாத் தங்களுக்கு எல்லாம் தெரியும் எண்டு நினைச்சுக் கொள்ளிறது... அவ அனுபவப்பட்டவ சொல்லுறபடி செய்யவேணும்... பிள்ளைக்குச் சாப்பாடு அம்மா பாத்துக் குடுப்பா... நீர் அதிலை தலையிடாமல் போய்ச் சமையல் வேலையைப் பாரும்..."

மாமிக்கு முன்னாலேயே கணவனால் அவமதிக்கப்பட்ட ஆத்மார்த்தமான காயங்கள். என் வயிற்றில் பத்து மாதம் சுமந்து, என் குருதியில் இருந்து உணவுண்டு வளர்ந்த என் பிள்ளைக்கு நான் உணவூட்ட முடியாத ஒரு படித்த அடிமையாய்... மூக்கை முட்டுகின்ற புகைமண்டலத்தினுள் நான் மீண்டும் நுழைந்து கொள்வேன்.

"கலியாணம் முடிஞ்சால் தனிக்குடித்தனம் போயிடவேணும். மாமன் மாமியோடை இருந்தால் எப்பவும் பிரச்சினைதான்..." ஆஸ்பத்திரியில் சக ஊழியர்கள் அடிக்கடி என்னிடம் சொல்லிக் கொள்வார்கள்.

"என்னப்பா... ஹாஸ்பிட்டல் குவாட்டர்சிலை போய் இருப்பமா? எனக்கும் வேலைக்குப் போய்வரச் சுகம். தனிய இருந்திட்டால் வீண் பிரச்சினையளும் இல்லை..."

நான் ஆயிரம் தடவைகளுக்கு மேல் இப்படி ஒரு விண்ணப்பத்தை இவரிடம் விடுத்திருப்பேன்.

"உமக்கு நைற் டியூட்டி என்றால் நீர் போயிடுவீர். இரவு நேரத்திலை சேர்வன்றரை நம்பிப் பிள்ளையை விடமுடியுமே! அதுகள் தூங்கி வழிஞ்சுகொண்டு பால் எண்டு நஞ்சையும் குடுத்திடுங்கள். எப்படியும் எங்கடை அம்மா பாக்கிற மாதிரி மற்றவை பாப்பினமே..."

"எங்கடை தங்கச்சியைக் கூப்பிட்டு வைச்சிருக்கலாம்..."

"பிள்ளை பாத்துப் பழக்கம் இல்லாத உம்மடை தங்கச்சியைவிட எங்கடை அம்மா வடிவாப் பாத்துக்கொள்ளுவா. பேசாமல் இரும்..."

முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விடுகின்ற கதைகளைத் தொடர முடியாமல்தான் நானும் இன்றுவரை அந்த முற்றுப்புள்ளியைத் தாண்டாமல் நின்றுகொண்டிருக்கிறேன்.

பிள்ளைக்குக் குளிக்க வார்க்கும்போது, முதலில் வாயினுள்ளே நீர் விடவேண்டுமாம். பல முறை சொல்லிச் சொல்லிக் காதில் ஏறாமல்போன நிலையிலும் வாயை மூடிக்கொண்டிருக்கும் தைரியம் இல்லாமல் நான் அன்றும் சொன்னேன்.

"இப்ப மழை காலம். தண்ணீருக்குள்ளை பல வகையான கிருமியள் இருக்கும். தொற்றுக்களை எதிர்க்க வலிமை இல்லாத நிலையிலை இருக்கிற குழந்தையிலை அவை பல நோய்களை உண்டாக்கியிடும். வெறும் கிணற்றுத் தண்ணியைப் பிள்ளையின்ரை வாயிலை விடாதேங்கோ மாமி..."

"இதென்ன பிள்ளை புது நாணயமான கதை. கிணற்றுத் தண்ணியிலை நஞ்சு இருக்கெண்டு வாசிற்றியிலை சொல்லித் தந்தவங்களோ? செத்தாப் பிறகுதான் காலிலை இருந்து தலைக்கு வாக்கிறது. உயிரோடை இருக்கிற பிள்ளைக்கு முதலிலை வாயிலை விட்டுத்தான் பிறகு குளிக்க வாக்கவேணும். நான் எத்தினை பிள்ளையை வளத்தனான். நீ எனக்குப் படிப்பிக்காதை பிள்ளை..."

எனது சொல் சபையில் ஏறாது என்பதுதான் தெரிந்த விடயமாயிற்றே!

இரண்டு நாளில் பிள்ளை வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டான்!

முதல்நாள் நோய் கண்டபோதே, நான் மருந்து கொடுக்கத் தயாரானபோது,

"அது, பிள்ளை எழும்பி நடக்கத் துவங்க வயிற்றாலை போறது வழக்கம். அதுக்கு ஏன் மருந்து...? சும்மா விடுங்கோ!"

என்ற கட்டளைக்கு அவர் பணிய, அவரின் சொல்லுககுப் பணிந்து போகவேண்டியதாயிற்று.

அன்று வேலையில் இருந்து நான் திரும்பியபோது, பிள்ளையின் நிலை மிக மோசமாக இருந்தது. இன்னும் கொஞ்சம் போனால், பிள்ளையின் உடலில் இருந்து நீர் அதிகமாக இழக்கப்பட்டு, 'டி கைட்ரேசன்' எனப்படும் ஆபத்தான நிலை உருவாகும் என்று எனக்குத் தெரிந்தது.

வெளியேறும் நீரை ஈடு செய்வதற்குப் போதிய அளவு நீர் உள்ளே கொடுக்கப்பட வேண்டும்.

"இளநீர் ஒன்று வெட்டித் தாங்கோ... குடுப்பம்..." கண்களில் துளிர்த்த நீர்த்துளிகளைத் தட்டி விட்டுக்கொண்டே நான் பணிவுடன் கேட்டேன்.

"இப்பிடி வயிற்றாலை போகேக்கை ஒண்டும் குடுக்கப்பிடாது. தண்ணி, சாப்பாடு ஒண்டும் கண்ணிலையும் காட்டப்பிடாது. தண்ணி குடிச்சால் இன்னும் வயிற்றாலை போகும்..."

வழமைபோல மாமியின் கட்டளைக்கு இவர் பணிந்து போனார். நான் வெளியே வந்து படியில் அமர்ந்து அழுதுகொண்டிருந்தேன். ஒருநாளும் அழக்கூடாது என்று நினைத்திருந்த நான் இன்று... இதைப்போல இன்னும் பல இன்றுகள்... ஓ...

வைத்திய கலாநிதிப் பட்டம் பெற்ற என் வீட்டு நிலை இதுவென்றால்... படிக்காத பெண்கள்... இந்நாட்டில் லட்சக் கணக்காக வாழுகின்ற அத்தகைய பெண்கள் கதி...

இல்லை! இதற்கெல்லாம் விட்டுக்கொடுக்கக்கூடாது! நான் ஒரு வீறாப்புடன் எழுந்து சென்று, நானாகவே இளநீரை அறுத்து, வெட்டிப் போச்சியில் விட்டுக் குழந்தைக்குக் கொடுக்கத் தயாரானபோது,

"இதுதான் திமிர் எண்டு சொல்லிறது. நான் சொன்னால் கேக்கப்பிடாது எண்ட பிடிவாதம். படிச்சதாலை வந்த வினை..."

எனது கையில் இருந்த போச்சியைப் பறித்துக்கொண்டு அப்பால் சென்றார் கணவர்.

ஆணுக்குப் பிடிவாதம் இருந்தால் அது சுய கௌரவம்! பெண்ணுக்குப் பிடிவாதம் வந்துவிட்டாலோ அதன் பெயர் 'திமிர்' என்று மாறிவிடும். இவ்வளவு காலமும் அவர்களின் திமிருக்கெல்லாம் நான் ஆடிவந்தேனே, பிள்ளையின் உயிர் ஆபத்தில் இருக்கிற இந்த நிலையில் கூடவா நான் விட்டுக்கொடுக்க வேண்டும்?

பாரதி பாடிப்பாடி அலுத்து நூறு ஆண்டுகள் கழிந்த நிலையிலும் பெண்ணடிமைத்தனம் எமது நாட்டில் ஓர் அங்குலம் தானும் குறைந்து போகவில்லை என்பதைப்பற்றி நான் கவலைப்படா திருக்கலாம். ஆனால்... எனது குழந்தையின் உயிரைப் பற்றி... எனது இரத்தத்தின் இரத்தம் இழக்கப்படப்போவது பற்றிக் கவலையற்றிருக்க நான் என்ன சடப்பொருளா?

மூட நம்பிக்கைகளின் தாக்கத்தினால் என் குழந்தை பலி எடுக்கப்படுவதைக் கண்ணால் பார்த்துக்கொண்டும் செயலிழந்திருப்ப தாயின் நான் பெற்ற அறிவின் பயன்தான் என்ன?

நடுநிசியில் எல்லாரும் உறங்கிப் போயிருக்கும் சமயத்தில் என் பிள்ளையைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறுகிறேன் நான்! என் கணவர் ஒருவேளை என்னைத் தொடர்ந்து வரக்கூடுமோ என்று நான் திரும்பிப் பார்க்கவில்லை!

தூரத்தில் காற்றிலே அசையும் ஒற்றைப் பெண்பனையை நோக்கி நான் விரைந்து நடக்கிறேன். அது என்னை நோக்கி.

"என்ன இத்தனை காயங்களுடனும் நான் இந்தப் பேய்க் காற்றுக்குத் தாக்குப் பிடிக்கிறேனே என்று யோசிக்கிறாயா? எனக்கு யாருடைய உதவியும் தேவையில்லை! நான் பூத்திருக்கும்போதுகூட. ஆண்பனையின் மகரந்தமணிகள்தான் என்னைத்தேடி வருமேதவிர நான் என் பூக்களை யாரிடமும் அனுப்பமாட்டேன்! சீ... என்னளவு தைரியம் கூடவா ஒரு டாக்டர் பெண்ணாகிய உனக்கு இல்லாமல் போய்விடும்? தைரியமாகத் தொடர்ந்து செல்..."

என்று கூறுவதுபோல எனக்கு ஓர் ஒலி கேட்கிறது!

(02.02.1983இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவை 1இல் 'சிறுகதை' நிகழ்ச்சியில் ஒலிபரப்பானது.)

---

## 14

# முரண்பாடுகள்

"எக்காரணம் கொண்டும் படுக்கையில் சிறுநீர் கழித்ததற்காகக் குழந்தையைத் தண்டிக்கவோ கண்டிக்கவோ கூடாது. இவ்வாறு செய்வது இப்பழக்கம் நீடிப்பதற்கு மட்டுமே உதவும். இரவில் சிறுநீர் கழிக்காத நாட்களில் குழந்தையைப் புகழ்வது நன்மை தரும். சிறுநீர் கழிக்காத ஒவ்வொரு இரவுக்கும் ஒரு சொக்கலேற் பரிசாகத் தரலாம். இதனால் படுக்கையில் சிறுநீர் கழிக்கக்கூடாது என்ற நினைவுடன் குழந்தை படுக்கச் செல்லும். அந்த நினைவு பயன்தரும்..."

"உங்களுக்குக் கவலைதரும் குழந்தையின் பழக்கங்கள்..."

என்ற தலைப்பில் அந்தப் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்த உளவியல் கட்டுரையை வாசித்தபடியே கீரிமலைக் கடலைத் தீர்க்கமாகப் பார்த்தேன்.

கெம்பி எழும்பிப் பூரித்து ஆர்ப்பரித்து, இந்தத் திசையை நோக்கி வந்த அலையைக் கரையானது நல்ல அடி கொடுத்துத் திருப்பி அனுப்பியதில், அது எதிர்த் திசையை நோக்கிச் சிறிது தூரம் சென்று, அங்கிருந்து வந்துகொண்டிருந்த மற்றொரு அலையிடம் திரும்ப அடி வாங்கி அமிழ்ந்து போனது என் மனதை அரித்தது.

'குழந்தை சிறுநீர் கழித்தல் என்ற குற்றத்தினை - இல்லை அது குற்றமல்ல - தவறுதான் - தவற்றினைத் தவறு என்று உணராமல் செய்கிறது. அதனைத் தண்டனை மூலம் திருத்த முடியாது. அன்பின் மூலமே திருத்த முடியும்.' என்பதுதான் அந்தக் கட்டுரை ஆசிரியரின் கருத்தாக இருக்கவேண்டும்.

"வாமதேவன் அதைத் தெரிஞ்சு செய்தானா? தெரியாமல்தான் செய்தானா?"

நிலவெரிக்கும் அந்தப் பூரணை முன்னிரவிலே, இரண்டு சமாந்தரத் தளவாடிகளுக்கிடையில் அகப்பட்டுக்கொண்ட ஒளிக்கதிரைப் போல எனது மன ஆடியில் சிந்தனைகள் பலமுறை தெறித்துத் தெறித்து மீண்டன.

"எப்பிடியெண்டாலும் இந்தமுறை அன்பினாலே திருத்திற வழியைத்தான் கையாளவேணும்..."

முந்திய நினைவுகளின் தேக்கங்கள், அநுபவ முத்திரைகள் எல்லாம் அந்த முடிவுக்கே என்னை அடித்து விரட்டின...

"றெஜிஸ்டரைக் கிழிக்கிறதெண்ணிறது சாதாரண குற்றமில்லைத்தான்"

"பிரின்சிப்பலின்ரை வேலைக்கே ஆபத்தைத் தரக்கூடிய வேலைதான்"

"எண்டாலும் இந்த நாளைப் பெடியளோடை ஒரு மாதிரிப் பட்டும் படாமலுந்தானே நடக்க வேணும்..."

"அவன் கிழிச்சதை இவர் கண்டவரே..."

"அவன் தான் கிழிக்கேல்லை எண்டால் இவர் என்ன செய்யிறது?"

"ஆர் சாட்சி சொல்லத் துணியப்போறான்?"

"உவருக்கு முந்தின அனுபவங்கள் இருக்குந்தானே இந்தமுறை பிழை விடமாட்டார்..."

சில வருடங்களுக்கு முன் ஒரு தோட்டத்தில் உள்ள களைகள் எல்லாம் முற்றாக அகற்றப்பட வேண்டும் என்பதுதான் எனது சிந்தனையாக இருந்தது. வேலியே பயிரை மேய்வது போலக் கல்லூரியின் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் காப்பதற்கென்றே நியமிக்கப்பட்ட மாணவர் தலைவர்கள் தமக்குள் மிகக் கேவலமாக அடிபட்டுக்கொண்டபோது, அவர்கள் களைந்தெறியப்பட வேண்டிய களைகள் என்றுதான் நான் நினைத்தேன். யார் சிரேஷ்ட மாணவர் தலைவராக வருவது என்பதில் இருவருக்கும் போட்டியான எண்ணம் இருந்திருக்கிறது மனதில்...

"நீ மோர்னிங்சிலை ஒம்பது மணிக்கு ஸ்கூலுக்கு வந்தால் மோர்னிங் டியூட்டி எப்பிடிப் பாக்கிறது...?"

"நீ முதலிலை வைற் லோங்சும், வைற் சேர்ட்டும் ஒழுங்காகப் போடு... எந்த நாளும் கலேட்டிலை வாறாய்... பிறகு எங்களைத் திருத்த வெளிக்கிட்டிட்டாய்..."

இவ்வாறு இருவருக்குமிடையில் தொடங்கிய வாக்குவாதம் இறுதியில் இரண்டு பேரும் விளையாட்டு மைதானத்தில் படுத்து

உருண்டு காலாலும் கையாலும் அடிபடும் அளவிற்கு முற்றிவிட்டது. இரண்டு சிரேஷ்ட மாணவர் தலைவர்கள் 'உருண்டாடல்' நிகழ்த்தினால்... மற்றைய மாணவர்களுக்கு அது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

"என்ன ஒரே கூட்டமாக இருக்கிறதே" என்று பார்த்தபோதுதான், தமிழ்ச் சினிமாக்களில் வருவதுபோன்ற அந்த 'டும்டும்' நிகழ்வை நான் தரிசித்தேன். நான் அதிகம் பேசவில்ல. இருவரையும் எழுப்பிக்கொண்டு வந்து,

"உங்கடை பிரிவெக்ட் 'பாஜ்'ஜத் தாருங்கோ" என்று வாங்கி வைத்துக்கொண்டேன்.

"உங்கடை நடவடிக்கையளைப்பற்றி நான் மேலிடத்துக்கு அறிவிக்கிறன். அந்த அடிப்படையிலை ஒரு முடிவு வாற வரைக்கும் நீங்கள் பள்ளிக்கூடம் வரப்பிடாது..."

என்று மிக இறுக்கமாகக் கூறி அனுப்பி வைத்தேன். அவர்கள் இருவரும் பாடசாலைக் கதவினூடாக வெளியேறுகையில்,

"இரண்டு களைகள் வீசப்படுகின்றன" என்றுதான் நினைத்தேனே தவிர வேறு பிரச்சினைகள் பற்றிக் கருதவில்லை.

அன்று மாலை ஒருவர் ஓடி வந்தார்.

"அவன் காங்கேயன் மருந்து குடிச்சுச் செத்திட்டானாம்... நீங்கள்தான் பொறுப்பெண்டு சனம் கதைக்குது..."

"அவங்கள் இளவயதுப் பெடியள்... ஏதோ ஆத்திரத்திலை அடிபட்டிட்டாங்கள் எண்ணிறதுக்காகப் பள்ளிக்கூடத்திலை இருந்து விலத்திறதே..."

"அது அவங்கடை வாழ்க்கையைப் பாதிக்கிற காரியமெல்லே..."

"என்ன இருந்தாலும் 'பிரிவேக்ட் பாஜ்'ஐ உடனை வாங்கினதுதான் அவனுக்கு ரோசமாப் போட்டுது..."

"அதில்லைக் காணும், வீட்டுக்கு எந்த முகத்தோடை போறதெண்டு பெடியன் யோசிச்சிருக்கிறான்..."

"தாய் தேப்பனைக் கூடப் பாக்காமல் பெடியன் செத்திட்டுது"

"அதுவும் பள்ளிக்கூடத்து வாசல்லையெல்லே விழுந்து செத்திருக்கிறான்..."

"பிழை விட்டா ஓர் அடியைப் போட்டிருக்கலாம். அது உடனை மாறிவிடும். இது தீராத ஆத்திரமாப் போச்சு... பிறகு தீராத பிரச்சினையாப் போச்சு..."

"எப்பிடிப் பாத்தாலும் உது பிரின்சிப்பலிலை பிழைதான். நாங்கள் துண்டுப் பிரசுரம் அடிச்சு விடுவம்..."

"சீ... அதிலை என்ன சுகம்? ஆர்ப்பாட்ட ஊர்வலம் போவம்..."

"சவத்துக்குப் பின்னாலை சுலோக அட்டையள் கொண்டு போவம்..."

"இனிமேலாவது உப்பிடி நடக்காமல் பாக்கவேணும்..."

எல்லா விஷயத்திலும் என்னுடன் மோதிக்கொள்கிற சில ஆசிரியர்களின் கிசு கிசுவும், வட்டாரக் கல்வி அதிகாரியின் விசாரணையும், மாணவர்களின் பகிஷ்கரிப்பும்... 'அப்பாடா போதும் போதும்' என்றாகிவிட்டது எனக்கு! மேற்கு வானத்தின் அடிவரை சென்று ஓய்ந்த இடிமுழக்கங்கள் போல.. அந்த நிகழ்வுகள் ஓய்ந்து இரண்டு வருடத்தின் பின் இது நடந்தது.

அந்த ஆசிரியர் கல்லூரிக்கு வந்ததிலிருந்தே வகுப்பில் அவருக்கு வரவேற்பு இல்லையென்று எனக்குத் தெரியும். அவர் இந்தியாவில் பட்டப்படிப்பை முடித்து வெளியேறிப் பதினைந்து வருடங்கள் முடிந்துவிட்டன. இப்போது விஞ்ஞானப் பட்டதாரிகள் பற்றாக்குறை என்றால் - அதற்காக இப்படி 'அவுற் ஒப்ரச்' ஆக இருப்பவர்களையா இப்படியான பிரபல கல்லூரிகளில் நியமிப்பது?

நியமித்துவிட்டார்கள்!

நான் கேட்க முடியுமா?

அவர் ஏ/எல் வகுப்பில் கற்பித்துக்கொண்டிருக்கும்போது, ஒருநாள் நான் வழமைபோலப் பின்னால் இருந்த 'கொரிடோரில்' உலாவிக்கொண்டிருந்தேன். ஆசிரியர் கரும்பலகையுடன் கதைத்துக் கொண்டு ஏதோ பிரச்சினைப்பட்டுக் கொண்டிருக்க மாணவர் தமக்கு வேண்டிய வேலைகளைச் செய்துகொண்டிருந்தனர். சுமுகமாக இருந்த மாணவர் சூழலில் திடீரென ஒரு சிலிர்ப்பு! ஆசிரியர் வேகமாகத் திரும்பினார். வெடுக்கெனத் திரும்பிய என் பார்வையும் ஓரிடத்தில் நிலைகுத்தி நின்றது.

"டேய்... பதுங்கடா... பதுங்கடா!"

“சரி, சரி இனி எழும்பி நோர்மலா இரு... அவர் கண்டு பிடிக்கமாட்டார்.”

நான் பதுங்கி நிமிர்ந்தவரைக் கண்டுகொண்டேன். எறியப்பட்ட ‘டஸ்ரர்’ ஆசிரியரின் முதுகில் பட்டுத் தெறித்து மீண்டும் நிலத்தில் விழுந்து அனாதரவாய்க் கிடந்தது. ஒருவரும் எதிர்பார்க்காத சூழ் நிலையில் நான் வேகமாய் வகுப்பில் நுழைந்தேன்.

“டஸ்ரர் எறிஞ்சவன் எழும்படா கெதியா!” கம்பீரமாய்க் கேட்டேன்.

“டேய் ஆர் எறிஞ்சதெண்டு ஒருத்தரும் சொல்லாதேங்கோடா...”

“ஒற்றுமையா எல்லாரும் எழும்புவம்” போன்ற முணு முணுப்புகள் மெதுவாய் என் காதில் விழுந்தன.

திடீரென எல்லாரும் எழுந்து நின்றார்கள்.

ஆனால் எனக்குத் தெரியுந்தானே!

“மோகனசீலன்... இப்பிடி வா...” வந்தான்.

“ஆர் எறிஞ்சது?”

“எனக்குத் தெரியாது. நான் காணேல்லை”

விட்டேன் கன்னங்களில் மாறிமாறி ஏழெட்டு அடிகள்.

அவன் எறிந்ததை நான் கண்ட துணிவுதான். எட்டுப்பத்து அடிகள் விழுந்து நான் ஓய்வெடுத்த கணத்தில் அவன் மிக அழுத்தமாகச் சொன்னான்.

“விசாரிக்காமல்... உண்மை ஒண்டும் தெரியாமல் எனக்கு அடிக்கிறீர்... இவ்வளவும் பேசாமல் நிண்டனான்... இனி என்ரை மேலிலை தொட்டால்... நானும் திருப்பி அடிப்பன்... கவனம்...”

நான் அதிர்ந்துவிட்டேன்.

தற்செயலாக அவன் அடித்துவிட்டால்...
திரும்பிவிட்டேன்.

விசாரணை வைக்கவில்லை. யார் சாட்சி சொல்லப் போகிறார்கள்?

மேலிடத்திற்கும் அறிவிக்கவில்லை. பயனில்லை.

கல்லூரியில் இருந்து அவனை நீக்கவுமில்லை. இறந்து விடலாம்!

கல்லூரி தொடர்ந்தது.

"ஒரு பெடியனுக்கு ஒருநாளும் கையாலை கண்டபடி அடிக்கப்பிடாது."

"அது பாரதூரமான குற்றம்"

"விரும்பினால் பிரம்பாலை அடிக்கலாம்..."

"அதுவும் விசாரிச்சு, உண்மையா எறிஞ்சது அவன்தான் எண்டு சாட்சியளோடை நிரூபிச்சால்தான் செய்யலாம்."

"இதைப்பற்றி நாங்கள் மினிஸ்ரருக்கு முறைப்பாடு குடுக்கவேணும்."

"ஒண்டும் பேசாமல் விட்டால், ஆருக்கும் எதுக்கும் எந்த நேரமும் அடிக்கலாம் எண்டு ஆகியிடும்."

"அவன் மாஸ்டருக்குத்தான் 'டஸ்ரர்' எறிஞ்சவன் எண்டு எப்பிடித் தெரியும்?"

"சிலவேளை முன்வாங்கிலை இருந்த பெடியனுக்கு எறிஞ்சது தற்செயலா அவருக்கு மேலை விழுந்திருக்கலாம்தானே..."

"அதுதான் எல்லாத்தையும் தீர்க்கமா விசாரணை செய்திருக்க வேணும்."

"இவர் சைகோலொஜி படிக்கேல்லைப் போலை கிடக்கு"

"டிப்ளோமா செய்யேக்கை படிச்சிருப்பர்... இப்ப வயது போட்டுது எல்லாம் மறந்திட்டார்."

"அன்பாலைதான் ஒரு பிள்ளையைத் திருத்தலாம் எண்டு இவருக்கு இனிப் புதிசாப் படிப்பிக்க வேணும்..."

இப்போது இவன் ஒருவன் றிஜிஸ்டரைக் கிழித்தெறிந்திருக் கிறான்.

"ஒழுங்காப் பாடசாலைக்கு வராதவையைப் பற்றிப் பெற்றாருக்குக் கடிதம் எழுதப்போறன்."

என்ற எனது நெருக்கத்தைத் தொடர்ந்து பாடசாலைக்கெனப் புறப்பட்டுத் தியேட்டர்களில் பொழுதுபோக்கிய ஒருவன் தனது வரவுக்கான ஆதாரத்தை அழித்துவிட்டான். இவனை என்ன செய்வது?

அடித்தால் திருப்பி அடிக்க முயற்சிக்கிறார்கள்.

'போ' என்றால் 'பொலிடோல்' குடிக்க நினைக்கிறார்கள்.

இம்முறை 'அன்புமுறை'யைக் கையாள்வது என்ற திண்ணமான முடிவுடன் கடற்கரை மணலைத் தட்டி விட்டுக்கொண்டு எழுந்தேன். முதலில் அவனைக் கூப்பிட்டு,

"யார் இதைக் கிழிச்சது?"

என்று கேட்டபோது,

"நானில்லை சேர், எனக்கு இதைப்பற்றி ஒண்டும் தெரியாது."

என்று சொல்லிவிட்டான். அவனிடம் உண்மையை வரவழைப் பதற்காக நான் இறங்கி வந்தேன். என்னுடைய கௌரவத்தையும் விட்டுத்தான்...

"நான் உன்ரை அப்பா மாதிரியடா. நீ உண்மையைச் சொல்லு. உண்மையைச் சொன்னால் உனக்கு ஒரு தண்டனையும் தரமாட்டேன்... நீதான் செய்திருந்தாலும் அதை இரகசியமா வைச்சிருப்பன்... எனக்கு மாத்திரம் உண்மையைச் சொல்லு."

விசுக்கென்று அடித்துவிடும் அதிபர் - பாடசாலையில் இருந்து துரத்திவிடும் அதிபர் - எப்போது இப்படி மாறினார் என்று தீவிரமாக யோசித்தானோ என்னவோ, என்னை ஏற இறங்கப் பார்த்து விழித்தான். ஆனாலும் எனது சொற்களில் நம்பிக்கை தோன்றியிருக்க வேண்டும்.

"நான்தான் கிழிச்சனான் சேர். நான் ஸ்கூலுக்கு வராமல் படம் பார்க்கப் போறது அப்பாவுக்குத் தெரிஞ்சால் பிரச்சினையெண்டபடியால் கிழிச்சனான் சேர்..."

நான் கொடுத்த வாக்கை மீறக்கூடாது என்ற நிச்சயத்துடன் அவன் சொன்னதை எழுத்தில் வாங்கிக்கொண்டேன்... அவனது கையெழுத்துடன்.

"இனிமேல் உன்ரை சீவியத்திலை இப்பிடிச் செய்யப்பிடாது."

"சரி சேர்"

"சரி... நீ போ..."

அவன் போய் வகுப்பில் இருந்துகொண்டான்.

"இப்ப முந்தி மாதிரி அவர் 'ஸ்ரிக்ட்' இல்லையாம்."

"பள்ளிக்கூடத்திலை 'டிசிப்பிளின்' பெரிய மோசமாம்."

"பெடியள் என்ன செய்தாலும் தண்டனை இல்லையாம்."

"இன்னது செய்தனான் எண்டு எழுதிக் குடுத்தால் சரியாம்."

"பெடியளுக்கு வலு வசதியாய்ப் போச்சு."

"அவருக்கு நிர்வாகம் நடத்தத் தெரியேல்லை."

"இவர் இனிச் சரிவராது. வேறை ஒரு பிரின்சிப்பலைப் போட்டாத்தான் கல்லூரியை நிமித்தலாம்."

"எம்.பி.யைப் பிடிச்செண்டாலும் இவரை மாத்தவேணும்."

மனித உள்ளங்களின் இயக்கத்தின் தன்மை இப்போது எனக்குத் தெளிவாகிறது. இடமாற்றத்தைப் பெற்றுக்கொண்டு????

வேறு பல எழுத்தாளர்களிலிருந்து கோகிலா வேறுபட்டு நிற்கிறார். பொழுது போக்குக்காகக் கதை எழுதும் எழுத்தாளராக அல்லாது சமூகத்தில் புரையோடிப்போயிருக்கும் அவல ரேகைகளை அகற்ற முனையும் சீர்திருத்த ஆசிரியராக இவர் பரிணமித்துள்ளார்.

– சு. வை. கனகசபாபதி –

எமது நாட்டுச் சிறுகதை எழுத்தாளர்களில் முன் வரிசையில் உள்ள கோகிலா மகேந்திரன் உளவியல் சம்பந்தமான கட்டுரைகளை எழுதுவதிலும் சமய சம்பந்தமான விடயங்களைப் பேசுவதிலும் சிந்திப்பதிலும் வல்லவர்.

–மகாதேவி பத்மநாதன் –

சமூக சொரூபங்களை உளவியல் ரீதியாக அணுகி சமூகவியலுடன் மாறுதல்களான சிறுகதைகள் படைப்பதில் செயற்பட்டு நிற்பவர் கோகிலா மகேந்திரன்.

– புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் –

பொதுவாகப் பெண்கள் சமூகப் பிரக்ஞையுடன் எழுதுவது குறைவு என்ற அபிப்பிராயம் என்னிடம் இருந்தது. நாளடைவில் அது மறைந்து போகிறது. துணிகரமாகப் பிரச்சினைகளைத் தொட்டு எழுதுகிறார் கோகிலா மகேந்திரன்.

– நெல்லை க. பேரன் –

யதார்த்த பூர்வமான சிந்தனை, தாம் சந்தித்த நிகழ்வுகளை, நிதர்சனங்களை நம்மையும் தரிசிக்க வைத்துச் சிந்திக்கச் செய்யும் பிசிறில்லாத கதையோட்டம், பண்பட்ட மனதுடனான சமுதாய நோக்கு, வாழ்க்கை எனும் நாடக மேடையில் உள்ள அத்தனை பாத்திரங்களையும் ஏற்றுத் தாமே நடித்தது போன்ற தத்ரூபமான வெளிப்பாடு, இவையே கதாசிரியரின் வெற்றிக்குக் காரணங்கள்.

– எஸ். சிறீரஞ்சினி

ஒரு புதிய பார்வை, ஒரு நுட்பம், ஒரு செழுமை எங்கள் மண்ணிலுள்ள ஒரு பெண்ணிடமிருந்து பிறந்திருக்கிறது. வாழ்க்கையை இவர் பார்க்கும் கோணமும் வாழ்க்கைக்கு இவர் கொடுக்கும் விளக்கமும் நன்றாக உள்ளன.

- டொமினிக் ஜீவா -

கூரிய பார்வை, மண்வாசனை மிக்க சரளமான எளிய நடை, தனக்கேயுரிய தனித்துவமான பாணி, பண்பான எழுத்து இத்தகையவற்றின் கூட்டு மொத்தமே கோகிலா மகேந்திரன். நாளாந்த நடைமுறை வாழ்வில் நடைபெறும் சர்வசாதாரணமான நிகழ்வுகளைச் சுவைகரமான கதைகளாகச் சமைக்கும் சாமர்த்தியம் இவருக்கே உரியது.

- வேல் அமுதன் -